janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 ஜூலை 03 - 09 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 13






**திரும்பிப் பார்க்கின்றோம்!**

நமது கட்சியின் சென்ற மாநில மாநாடு கடந்த 2018 மார்ச் 28 முதல் 31 முடிய நான்கு தினங்கள் தியாக பூமியாம் >>>

ப 02



**தோழர் எம்.கே.ரங்கநாதன் நூற்றாண்டு**

சில நேரங்களில் எதிர்பாராதவை நிகழ்ந்து விடுகின்றன. இந்த நிகழ்வும் அப்படித்தான். 48 ஆண்டுகளுக்கு முந்தைய >>>

ப 08



**சமணம்**

இந்தியாவில் பழங்கால மதங்களில் சமணமும் ஒன்று. இது கி.மு. ஆறாம் நூற்றாண்டு அளவில் உருவா யிற்று. சமணர்களுக்கு அருகதர், சைனர், அஜீவிகர் என்ற பெயர்கள் உண்டு. சமணர்களை வணிகர்கள் ஆதரித்தனர். வட இந்தியாவைவிட தென்னாட்டில் >>>

ப 05

## தீஸ்டா செதல்வாட், முஹமது ஜுபைர் கைது

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்!



தீஸ்டா செதல்வாட், முஹமது ஜுபைர் கைது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

**தீஸ்டா செதல்வாட்**

2002ஆம் ஆண்டு குஜராத் படுகொலையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி கிடைத்திட வேண்டும் என்று போராடிய தீஸ்டா செதல்வாட் மற்றும் முன்னாள் டி.ஜி.பி. ஆர்.பி.ஸ்ரீகுமார் ஆகியோர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

குடிமக்கள் உரிமைகளுக்காகவும், வகுப்புவாதத்திற்கு எதிராகவும் கடுமையாக போராடி வருபவர் தீஸ்தா செதல்வாட் ஆவார். மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக அவர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை ஐ.நா.அமைப்புகூட பாராட்டி இருக்கிறது.

இதுதொடர்பாக உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பும் பல கேள்விகள் எழுப்பியுள்ளது. எனினும், ஒன்றிய உள்துறை அமைச்சர் மற்றும் குஜராத் காவல்துறையினர் கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

தீஸ்டா செதல்வாட் மற்றும் இதரப் போராளிகளையும் கைது செய்திருப்பது தேசத்தின் ஜனநாயக அரசியல் அமைப்பின் மீதும், சமுதாயத்தின் ஒரு குறிப்பிட்ட பிரி வினரை குறிவைத்து நடத்தப்படும் மனிதநேயமற்ற வன்முறைகளின் விளைவாக நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்படும்போது, அரசாங்கத்தின் பங்கு குறித்து கேள்வி எழுப்புவதற்கான மக்களின் உரிமைகளின் மீது விழுந்த பலத்த அடியாகும்.

குஜராத் படுகொலைக்கு காரணமானவர்கள் அனை வரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வலியுறுத்துகிறது.

**முஹமது ஜுபைர்**

ஆல்ட் நியூஸ் செய்தி நிறுவனத்தின் நிறுவனர்களில் ஒருவரான முஹமது ஜுபைர் 2018ஆம் ஆண்டில் டுவிட்டரில் வெளி யிட்ட செய்தி ஒன்று மத உணர்வுகளைப் புன்படுத்துவதாகக் கூறி புதிடில்லியில் ஜூன் 27 அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இணையம் மற்றும் இதர ஊடகங்களில் கருத்து சுதந்திரத்தை பாதுகாக்கும் பொருட்டு ஜி7 அமைப்பு மற்றும் இதர நான்கு நாடுகளுடன் இந்தியா இணைந்த அதே நாளில் ஜுபைர் கைது செய்யப்பட்டு இருப்பது கேலிக்குரியதாக இருக்கிறது.முஹமது ஜுபைர் கைது கருத்து சுதந்திரத்தின் மீதும், மக்களின் தகவல் அறியும் உரிமையின் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்ட தாக்குதல் என்று கட்சி கருதுகிறது.



அவரை உடனடியாக விடுதலை செய்வதுடன் அவர் மீதான வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெற வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வலியுறுத்துகிறது.



**மேகேதாட்டு பகுதியில் காவிரியின் குறுக்கே அணை கட்ட நிதி ஒதுக்கிய கர்நாடக அரசை கண்டித்து**

# டெல்டா மாவட்டம் முழுவதும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

**காவிரிநீர் மேலாண்மை வாரிய தலைவரின் அத்துமீறலை கண்டித்தும், காவிரியின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கு ரூ. 1000 கோடி நிதி ஒதுக்கிய கர்நாடக அரசை கண்டித்தும், டெல்டா மாவட்டங்களில் சிபிஐ மற்றும் சிபிஎம் கட்சிகளின் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் இணைந்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.**

**திருத்துறைப்பூண்டி:** திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி புதிய தபால் நிலையம் எதிரில் ஜூன் 22 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசா யிகள் சங்கத்தின் மாவட்ட துணை தலைவரும், திருத்துறைப்பூண்டி சட்ட பேரவை முன்னாள் உறுப்பினர் கே. உலகநாதன், விவசா யிகள் சங்கத்தின்(சிபிஎம்) மாநில தலைவர் வி.சுப்பிரமணியன் ஆகியோர் தலைமை ஏற்று நடத்தினர். ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவரும், வி.தொ.ச.மாவட்ட செயலாளருமான அ.பாஸ்கர், வி.ச.மாவட்ட பொருளாளர் எஸ்.சாமிநாதன், கே.ராஜா, எஸ்.முத்து செல்வம், கே.பாலு, கே.வேதரத்தினம், வி.ஜவஹர், வி.ரவி, எம். மகாலிங்கம், கோ.ஜெயபால் மற்றும் ஒன்றிய, கிளையின் பொறுப்பாளர்கள், தோழர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு ஒன்றிய மற்றும் கர்நாடக அரசுகளுக்கு எதிரான கண்டன முழக்கமிட்டனர்.

**நாகப்பட்டினம்:** நாகப்பட்டினத்தில் நடை பெற்ற கருப்புக் கொடி கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செய லாளர் பி.எஸ். மாசிலாமணி, ஆர்.கே.பாபுஜி.



வி.சரபோஜி கோவி. சுப்பிரமணியன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கு கொண்டனர்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் ரயிலடி முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாய சங்க மாவட்டத் தலைவர் வீர மோகன் தலைமை வகித்தார். தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட செயலாளர் என்.வி.கண்ணன் முன்னிலை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் கே. முகமது அலி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி, மார்க்சிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் சின்னை.பாண்டியன், விவசாயதொழிலாளர் சங்க நிர்வாகிகள் ஜி.கிருஷ்ணன், கே.அபிமன்னன், ஆகியோர் உரையாற்றினர்.



## இந்திய இளைஞர்களின் எதிர்காலத்தை சுடுகாடாக்கும் அக்னிபாத் திட்டத்தை புகைய விடாமல் அணைப்போம்!

**ஆகஸ்ட் 6, 7, 8, 9 இல் திருப்பூரில்**

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு அழைக்கிறது**






# திரும்பிப் பார்க்கின்றோம்!

**பேரன்புமிக்க தோழர்களே,**

நமது கட்சியின் சென்ற மாநில மாநாடு கடந்த 2018 மார்ச் 28 முதல் 31 முடிய நான்கு தினங்கள் தியாக பூமியாம் மன்னார்குடியில் தோழர் ஏ.பி.பரதன் அரங்கில் நடைபெற்றது. ஏறத்தாழ நான்கரை ஆண்டு காலத்திற்கு பின்னர் திருப்பூரில் கூடுகின்றோம்.

சென்ற மாநாட்டில் நம்முடன் இருந்து கம்பீரமாக காட்சியளித்து, மாநாட்டுப் பணிகளில் பங்கேற்று, மாநாடு வெற்றிகரமாக நிறைவடைய உழைத்தவர்கள், ஆலோசனை வழங்கியவர்கள், மேடையில் கம்பீரமாய் முழக்கமிட்டவர்கள் என சிறப்புகளை உடைய பலரும் தற்போது இல்லை– நம்முடைய மாநாட்டில் அவர்களின் முகம் காண இயலாது – ஆனாலும் அவர் நமது நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்து நிற்பார்கள்–

**தோழர் தா.பாண்டியன் நகர்**

2018 மார்ச் 31ஆம் நாள் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில், பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்ற பொதுக்கூட்டத்தில், காவிரி நதி நீர் பிரச்சினைக்கு தீர்வு காண வலியுறுத்தி நடக்கவுள்ள இரயில் மறியல் போராட்டத்தை விளக்கிக் கூறி, இரயில் சக்கரங்கள் உருளாது என கம்பீரமாக முழங்கிய தோழர் தா.பா. ஆகஸ்ட் 9–ல் நடைபெறவுள்ள மாபெரும் பேரணியைக் காணப்போவதில்லை. செங்கடலாய் காட்சியளிக்கப் போகும் பொதுக்கூட்டத்தில் சங்கநாதமென முழங்க தோழர் தா.பா. இல்லை.

சிறுவனாய் படிக்கத் தொடங்கிய காலம் தொட்டு, வெள்ளையர்கள் ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற விடுதலைப் போரால் ஈர்க்கப்பட்டு, பள்ளி மாணவனாக இருந்தபோது வெள்ளையர்களின் காவல் நிலையத்தின் மீது கல்வீசி தாக்குதல் தொடுத்திட்ட தோழர் தா.பா. காரைக்குடி அழகப்பா கல்லூரியில் மாணவர் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிவாகை சூடிய தோழர் தா.பா. அதே பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றி,

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தோழர் ஜீவாவை கொண்டு உருவாக்கிய தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் முதல் பொதுச் செயலாளராக பொறுப்பேற்றவர். தமிழ்நாடு முழுவதும் பெருமன்றத்தை உருவாக்கியது மட்டுமல்ல, ஏராளமான கலைஞர்களை, கவிஞர்களை, எழுத்தாளர்களை, பேச்சாளர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.**

வழக்குரைஞர், கட்சியின் மதுரை மற்றும் சென்னை மாவட்ட செயலாளர், மாநில துணைச் செயலாளர், மாநிலச் செயலாளர், தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர், ஜனசக்தி ஆசிரியர், சிறந்த பேச்சாளர், சிறந்த கட்டுரையாளர், சிறந்த நூலாசிரியர் என பல்வேறு திறன் கொண்ட தோழர் தா.பா. நம்மிடையே இல்லை என்ற போதும் அவரை நினைவு கூர்ந்து – நமது மாநாடு நடைபெறும் வளாகத்திற்கு தோழர் தா.பாண்டியன் நகர் என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**தோழர்கள் சேது – வே.து. அரங்கம்**

சென்ற மாநாட்டில் நம்மோடு உடன் இருந்து பணியாற்றி, தீர்மானங்களை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்த தோழர்கள்.

சேது என்று நாம் அன்புடன் அழைத்திட்ட சேதுராமன் கல்லூரியில் படிக்கும் காலத்தே மாணவர் பெருமன்றத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, மாணவர் தலைவராக வலம் வந்து, கல்லூரி படிப்பு முடிந்த பின்னர் கட்சியில் உறுப்பினராக சேர்ந்து தொய்வின்றி பணியாற்றியவர். கட்சி நெருக்கடிக்கு உள்ளான ஒரு சூழலில் மதுரை மாவட்ட பொறுப்பு செயலாளராக பொறுப்பேற்று கட்சியை நிலை நிறுத்தியவர். இளம் வயதில் மாவட்டச் செயலாளராக பொறுப்பேற்று மாநில மாநாட்டை மதுரையில் வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர்.

மாநிலக்குழு உறுப்பினராக, நிர்வாகக் குழு உறுப்பினராக, செயற்குழு உறுப்பினராக, தேசியக் குழு உறுப்பினராக, மைய ஊழியராக, ஜனசக்தி பொறுப்பாளராக, கட்சிக் கல்வி இலாகாவின் ஒருங்கிணைப்பாளராக என பல்வேறு பொறுப்புகளை கட்சி வழங்கியபோது, கட்சி அளித்திட்ட பொறுப்புகளை ஏற்று உணர்வுபூர்வமாக நிறைவேற்றிய கடமை வீரர் இன்று நம்மிடம் இல்லாமல் கொரோனா என்கிற கொடிய நோய் கவ்விச் சென்றுவிட்டது.

வே.து. என்றும், வி.டி. என்றும், டாக்டர் என்றும் அன்புடன் அழைக்கப்பட்ட தோழர் வே.துரைமாணிக்கம் புகழ்மிக்க ஆம்பலாபட்டு தியாக பூமியில் உதித்தெழுந்த தோழர் ஆவார்.

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தில் இணைந்து பணியாற்றி, மன்னார்குடியில் நடைபெற்ற வரலாற்று சிறப்புமிக்க விவசாய தொழிலாளர் சங்கத்தின் அகில இந்திய மாநாட்டிற்கு தியாகச் சுடர் ஏந்தி வந்த தோழர்.

கட்சியின் உறுப்பினராக சேர்ந்து திறம்பட பணியாற்றியதால் இளம் வயதில் திருவோணம் ஒன்றியச் செயலாளராக, பின்னர் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினராக, செயற்குழு உறுப்பினராக, துணைச் செயலாளராக, பொறுப்பு செயலாளராகவும் பணியாற்றினார்.

வர்க்க அமைப்புகளில் ஒன்றான விவசாயிகள் சங்கத்தை மாவட்டத்தில் பலப்படுத்திட வேண்டும் என்ற நோக்கத்துடன், கட்சி அவருக்கு விவசாய சங்க மாவட்ட செயலாளர் பொறுப்பை வழங்கியபோது, அப்பொறுப்பினை ஏற்று திறம்பட செயல்பட்டார்.

நமது மதிப்புமிக்க தலைவர் தோழர் ஆதிமூலம் அவர்களைத் தொடர்ந்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளராக பொறுப்பேற்று செயல்பட்டார். பல இளம் தோழர்களை சங்கத்தில் உறுப்பினர்களாக உருவாக்கவும் செய்தார்.

தனக்கு கட்சி அளித்திட்ட பொறுப்புகள் அனைத்தையும் நிறைவேற்றிய செயல்வீரர். உடல் நிலை பாதிக்கப்பட்டு மருத்துவ மனையிலேயே நம்மை விட்டுப் பிரிந்தார்.

இத்தகைய சிறப்பிற்குரிய தலைவர்கள் பி. சேதுராமன், வே.துரைமாணிக்கம் இருவர் பெயரால் மாநாட்டு அரங்கம் அமைக்கப்படுகின்றது.

ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அமரக்கூடிய பிரம்மாண்டமான மாநாட்டு மண்டபத்தில் இரு தலைவர்கள் பெயர் தாங்கிய அரங்கத்தில் மாநில 25வது மாநாடு நடைபெறுகின்றது.

**தோழர்கள் வி.ஆர்., சுசி, அழகு**

வி.ஆர். எனறு அழைக்கப்பட்ட தோழர் வீ. ராஜ்மோகன் மாணவர் பெருமன்றம் தந்திட்ட மாணிக்கமாகும்.

மாணவர் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர்களில் ஒருவராக வலம் வந்த ராஜ்மோகன் பின்னர் ஒன்றுபட்ட சென்னை மாவட்ட கட்சியின் மாவட்டச் செயலாளராகப் பணியாற்றினார்.

மாநில நிர்வாகக் குழு உறுப்பினர், செயற்குழு உறுப்பினர், மைய பொறுப்பாளர் எனப் பணியாற்றியதுடன், தொழிற்சங்கத் தலைவராக பணியாற்றிய அனுபவம் கொண்டவர். சிறந்த மொழிபெயர்ப்பாளர், ஜனசக்தி நாளிதழ் மற்றும் வார இதழில் பொறுப்போடு பணியாற்றிய தோழர். கட்சி தனக்கு எத்தகைய பொறுப்பினை அளித்த போதும் அதனை ஏற்பது மட்டுமல்ல, உணர்வுபூர்வமாக ஏற்று செயல்பட்டவர். கொரோனா என்கிற கொடிய நோய் பறித்துச் சென்றது. அவரது நினைவைப் போற்றும் வகையில் தோழர் வீ.ராஜ்மோகன் நுழைவுவாயில் அமைக்கப்படுகின்றது.

தொழிலாளியாக பணிபுரிந்து ஏஐடியுசி அமைப்பில் உறுப்பினராக சேர்ந்து பணியாற்றி, பின்னர் கட்சியின் உறுப்பினராகி, கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநிலத் தலைவர், தென்சென்னை மாவட்ட ஏஐடியூசி செயலாளர் எனப் பொறுப்பேற்று செயல்பட்நீடதுடன், மாநில மையத்திற்கும் உதவி புரிந்து வந்த சுசி என மாதர் சங்க தோழர்களால் அன்புடன் அழைக்கப் பெற்ற தோழர் ஆர்.சுசீலா நுழைவு வாயில் அமைக்கப்படுகின்றது.

மாணவர் பருவம் தொடங்கி மாணவர் பெருமன்றத்திலும், பின்னர் இளைஞர் பெருமன்றத்திலும், அதனைத் தொடர்ந்து கட்சியின் உறுப்பினராகச் சேர்ந்து, தூத்துக்குடி மாவட்ட கட்சியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர், மாவட்ட செயலாளராக, மாநில நிர்வாக குழு உறுப்பினராக பணியாற்றினார். இளம் தோழர்கள் அவரை மாமா என்று செல்லமாக அழைக்கப் பெற்ற, அழகு என்று அன்புடன் அழைக்கப் பெற்ற தோழர் அழகுமுத்து. வழக்குரைஞராக பணியாற்றிக் கொண்டே கட்சிப் பணிகளையும் திறம்பட மேற்கொண்டார்.

திடீர் உடல்நலக்குறைவால் இயற்கை அவரை நம்மிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பறித்துக் கொண்டது. ஆற்றல்மிக்க செயல் வீரரின் பெயர் தாங்கிய தோழர் அழகு முத்துப்பாண்டியன் நுழைவாயில் அமைக்கப்பட உள்ளது.

தோழர்களே இவர்கள் மட்டுமல்ல எண்ணற்ற தோழர்களை இடைப்பட்ட காலத்தில் இழந்துள்ளோம்.

ஆற்றல்மிக்க செயல்வீரர்களாக பணியாற்றிய தோழர்களை இழந்துள்ளோம்.

இவர்கள் அனைவரும் தங்களின் குடும்ப நலன், உறவு நலன் என்று கருதாமல் அர்ப்பணிப்பு உணர்வோடு அரும் பணியாற்றியவர்கள்.

உயரிய இலட்சியத்திற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்ட ஆற்றல்மிகு செயல்வீரர்கள்.

இவர்கள் அனைவரும் நம் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றவர்கள்.

இவர்களின் தியாகத்தை போற்றுவது மட்டுமல்ல, எத்தகைய உயரிய இலட்சியத்திற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்களோ, அத்தகைய இலட்சியக் கனவுகள் நிறைவேற சபதமேற்க திருப்பூரில் கூடுவோம் !

ஆகஸ்ட் திங்கள் ஆறாம் நாள் தொடங்கும் மாநாடு ஒன்பதாம் நாள் நிறைவடைய இருக்கின்றது.

நான்கு நாள் மாநாட்டில் தமிழ்நாடு முழுவதிலுமிருந்தும் வருகைதந்து பங்கேற்கும் பிரதிநிதிகள் மாநாட்டில் எதிர் காலத்திற்கான திட்டம் தீட்டுவோம் !

நிறைவு நாளில் ஆயிரம், ஆயிரமாய், பல்லாயிரமாய், லட்சமாய் பங்கேற்போம்.

நமது அரசியல் முழக்கத்தை முன்வைப்போம். ஓங்கி ஒலிக்கட்டும் நமது குரல், தமிழ்நாட்டின் குரல் நாடெங்கும் ஒலிக்கட்டும்.

**மீண்டும் சந்திப்போம். வணக்கம்.**

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**



அரசியல் என்பது மக்களுக்கான உழைப்பு!
அரசியல் மக்களை ஏமாற்றும் பிழைப்பு அல்ல!
அரசியலில் விழிப்புணர்வு ஏற்படுத்துவோம்
ஆகஸ்ட் 6, 7, 8, 9 இல் திருப்பூரில்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
மாநில மாநாடு



ப.பா.ரமணி

# தீஸ்டா செதல்வாட் கைது - மனித உரிமைக்கு கைவிலங்கு

**துணிச்சல் மிக்க மனித உரிமை போராளியும், மூத்த வழக்கறிஞருமான தீஸ்டா செதல்வாட் ஜூன் 26 மும்பையில் கைது செய்யப்பட்டு அகமதாபாத் கொண்டு செல்லப்பட்டுள்ளார். மாநில முதல்வர் நரேந்திர மோடியின் அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க தவறியது என்று விசாரணை குழுவின் முன்பு சாட்சியம் அளித்த, ஓய்வு பெற்றக் காவல்துறை ஏடிஜிபி ஆர்.பி.ஸ்ரீகுமாரும் கைது செய்யப்பட்டுள்ளார்.**

உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் 24 மணி நேரத்தில், இந்த அதிரடி கைதுகள் நடந்துள்ளன. 2002 பிப்ரவரி 27 இல் கோத்ரா ரயிலில் பயணம் செய்த 59 கரசேவகர்கள் இஸ்லாமியர்களால் எரித்துக் கொல்லப்பட்டனர் என்று காட்டுத்தீ போல செய்தி பரவியது. பாரதிய ஜனதா, விஷ்வ ஹிந்து பரிஷத், பஜ்ரங்தளம், ஆர். எஸ்.எஸ்., ஷங்காதன் போன்ற காவிப் படையினர் இரவோடு இரவாக திட்டமிட்டு தீவிர எதிர்வினையாற்றினர்.

வாள், கத்தி, கோடாரி, சூலாயுதம், வெடிகுண்டுகள், துப்பாக்கிகள், பெட்ரோல் ஆகியவற்றைத் திரட்டிக்கொண்டு முஸ்லிம் குடியிருப்புகளை முற்றுகையிட்டு கொடூரமான தாக்குதல்களை நடத்தினர். 2500 க்கு மேற்பட்ட குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட அப்பாவிகள் வெட்டப்படும், கற்பழிக்கப்பட்டும், எரித் தும், படுகொலை செய்யப்பட்டார்கள். இந்திய வரலாற்றில் நிகழ்த்தப்பட்ட நெஞ்சை உலுக்கிய அந்த குஜராத் இனப் படுகொலை, உலக அரங்கில் நம் நாட்டிற்கு மாபெரும் அவப் பெயரைப் பெற்றுத் தந்தது.

அந்தக் கலவரங்களில் வீடு உடமைகளை இழந்து, உயிரச்சத்துடன் பரிதவித்த இரண்டு லட்சம் முஸ்லிம் மக்களுக்கு குஜராத் மாநில அரசு யாதொரு உதவியும் அளிக்க முன்வரவில்லை. நீதிக்கும் அமைதிக்குமான குடிமக்கள் **(CITIZENS FOR JUSTICE AND PEACE) CJP** என்ற அமைப்பின் சார்பில் வழக்கறிஞர் தீஸ்டா செதல்வாட் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவும், நிவாரணங்களை வழங்கப்படவும் ஓடோடி உழைத்தார். மோடி தலைமையிலான குஜராத் அரசு ஒரு நிவாரண முகாமைக் கூட அமைக்கவில்லை என்பது அந்த அரசின் மதச்சார்பை தெளிவுபடுத்துகிறது. ‘‘மூன்று நாட்கள் அவகாசம் தருகிறோம். செய்வதையெல்லாம் செய்து முடியுங்கள், உங்களை காவல்துறை கண்டுகொள்ளாது’’ என்று காவல் அதிகாரிகள் மூலமாகவே தங்களுக்கு உறுதிமொழி வழங்கப்பட்டதை, வழக்குகளில் தண்டிக்கப்பட்டு சிறைவாசத்திற்கு பின் விடுதலையாகியிருந்த, காவி தீவிரவாதிகள் ‘‘டெஹல்கா’’ உளவு கேமராக்களில் பேட்டிகள் அளித்த ஆடியோ பதிவுகள் உள்ளன.

குஜராத் படுகொலைகள் நடந்தேறிய பல வழக்குகளில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர். எனினும், அரசு உயர் அதிகாரிகள், காவல்துறையினர், மாநில முதல்வர் உள்ளிட்ட அமைச்சர்கள் துணையும், பின்புலமும் இன்றி இத்தகைய வெறியாட்டங்கள் நிகழ்ந்திருக்க முடியாது. ஆனால், உச்ச நீதிமன்ற வழிகாட்டலுடன் அமைக்கப்பட்ட சிறப்பு விசாரணை குழு அரசு நிர்வாகத்தின் செயலற்ற தன்மையைச் சாடியிருந்தாலும், முதல்வர் மோடி உள்ளிட்ட 63 அதிகாரிகள் தவறிழைத்துள்ளனர் என்பதை ஏற்கவில்லை.

இதை எதிர்த்து குல்பர்கா குடியிருப்பு தாக்குதலில் கொல்லப்பட்ட மேனாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈசான் ஜாப்ஃரியின் மனைவி ஜாகியா ஜாப்ஃரியும், தீஸ்டா செதல்வாட்டின் சி.ஜெ.பி. அமைப்பும் வழக்கு தொடுத்தனர். கீழமை நீதிமன்றமும், குஜராத் உயர்நீதிமன்றமும் வழக்கை நிராகரித்தன. அந்த வழக்கு தான் தற்போது உச்சநீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு மூவர் அமர்வின் தீர்ப்பாக வெளிவந்துள்ளது.



**முதல்வர் மோடி கலவரங்களைத் தூண்டியதற்கு ஆதாரங்கள் இல்லை என்று முடிவு செய்ததோடு,நீதிபதிகள் அதற்கு மேலும் சென்று நீதிக்காக போராடியவர்கள் மீது அவதூறையும் அள்ளி வீசி உள்ளனர். முதல்வர் மோடி’’இந்துக்கள் தங்கள் மனக்குமுறலை வெளிப்படுத்தட்டும்‘‘ என்றுஅரசு மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதாக, ஆர்.பி.ஸ்ரீகுமார், சஞ்சீவ் பட், அமைச்சர் ஹாரோன் பாண்டியா ஆகியோரது சாட்சிகள் பரபரப்பை ஏற்படுத்தவே இட்டுக் கட்டப்பட்டவை என்றும், இப்படி வழக்காடியவர்கள் கூண்டில் நிறுத்தப்பட்டு சட்டப்படி விசாரிக்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பில் கூறியுள்ளனர்.**

2022ல் நாட்டின் பிரதமராக இருந்த வாஜ்பாய் ‘‘ராஜ தர்மத்தை பிரதமர் மோடி கடைபிடிக்கவில்லை’’ என்றார். பெஸ்ட் பேக்கரி வழக்கில் நீதிபதிகள் ராஜூ துரைசாமி, சுர்ஜித் பசயாத் ‘‘நரேந்திர மோடி நீரோ மன்னனைப் போல வேடிக்கை பார்த்தார்’’ என்று வர்ணித்தார். உச்ச நீதி மன்ற தலைமை நீதிபதி வி. என். காரே ‘‘குஜராத் அரசு உயிர்களையும், சொத்துக்களையும் பாதுகாக்கத் தவறியது மட்டுமல்ல, நீதிமன்ற நடவடிக்கைகளிலும் தலையிட்டு தவறுகளைச் செய்துள்ளது’’என்று 2003இல் விமர்சித்தார்.

2017ல் தனிநபர் உரிமை **(RIGHT TO PRIVACY)** பற்றிய வழக்கில், உச்ச நீதிமன்றம் சிறப்பானதொரு தீர்ப்பை வழங்கியது. அதில், ‘‘அரசியலமைப்புச் சட்டத்தின் படி ஆள்வோர் நடந்து கொள்கிறார்களா எனக் கேள்வி கேட்கும் உரிமை ஆளப்படும் குடிமக் களுக்கு உள்ளது’’ என்று விளக்கியுள்ளனர்.

நரோடா பாடியா படுகொலைகளை முன்னின்று நடத்திய பாஜக சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கொட்ணானி போன்றவர்கள் மதசார்பின்மை கோட்பாட்டைச் சிதைப்பவர்கள்; புற்றுநோய்க்கு ஒப்பானவர்கள் என்று கூறிய நீதிபதி யக்னிக், அவருக்கு 28 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்ததார். ஆனால் 2007இல் அலருக்கு அமைச்சர் பதவி வழங்கி பரிசளித்தார், நரேந்திர மோடி.

மனித உரிமைகள் மீது அக்கறை கொண்ட ஆயம் **(CONCERNED CITIZENS TRIBUNAL)**என்ற அமைப்பின் கீழ் குஜராத் கலவரங்கள் பற்றி ஆய்வு செய்த நீதியரசர் வி.ஆர் கிருஷ்ணய்யர், பி. பி சவந்த், ஹாஸ்பெட் சுரேஷ் மற்றும் மூத்த வழக்கறிஞர் கே.ஜி.கண்ணபிரான் ஆகியோர் குஜராத் அரசின் குற்றங்களைப் பட்டியலிட்டுள்ளனர்.

ஆக, உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு முடிந்த முடிவல்ல. நீதியின் கதவுகளை தொடர்ந்து தட்ட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஓய்வறியா சட்ட போராட்டங்களை நடத்திவந்த மனிதநேயப் போராளிகள் பீமா கோரகான் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குப் பிணை மறுக்கப்பட்டு வருகிது. தற்போது தீஸ்டா செதல்வாட் காவி ஆதிக்கத்தால் குறி வைத்து தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். . ஐ.நா பிரதிநிதிகள் உள்ளிட்ட மனித உரிமை அமைப்புகள்,அரசியல் தலைவர்கள், பிரபல வழக்கறிஞர்கள் மோடி அரசின் பாசிச போக்கை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

சட்டப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் நீதிக்கான போரில் மக்கள் வீதிக்கு வந்து குரல் கொடுப்பதும் காலத்தின் அறைகூவலாக எழுந்துள்ளது. மக்களுக்குப் பாசிச அபாயம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த அனைத்து ஜனநாயக அமைப்புகளின் ஒற்றுமை ஓங்கட்டும்.

தொடர்புக்கு: **94421 78974**

## கொப்பரைக்கு கிலோ ரூ.150, உரி தேங்காய்க்கு கிலோ ரூ.50 வழங்கக் கோரி பட்டுக்கோட்டையில்

# தேங்காய் உடைப்பு போராட்டம்

தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்க தஞ்சை மாவட்டக் குழு, தென்னை உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் இணைந்து ஜூன்25 அன்று தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையில் அனைத்து தரப்பு விவசாயிகளும் பங்குகொண்ட தேங்காய் உடைப்பு போராட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.

காந்தி சிலைக்கு மாலை அணிவித்த பின் சுமார் 2 கிலோமீட்டர் தூரம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் கோரிக்கை முழக்கத்துடன் பேரணியாக வந்து பேருந்து நிலையத்தின் எதிரில், அனைவர் கைகளிலும் தாங்கி வந்த தேங்காய்களை நடுவீதியில் போட்டு உடைத்து கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

கொப்பரை கிலோ ஒன்றுக்கு 150 ரூபாய், உரிதேங்காய்கள் கிலோ 50 ரூபாய் என நிர்ணயித்து அரசே கொள்முதல் செய்திட வேண்டும்.



தேங்காய் எண்ணையை பொது வினியோக அங்காடிகளில் விற்பனை செய்திடவும், சத்துணவு கூடங்களில் தேங்காய் எண்ணெய்யை பயன்படுத்த செய்திடவும் நடவடிக்கை எடுத்திட வேண்டும். இதற்கான அரசு கொள்முதல் கூடங்களை விவசாயிக ளின் தேவைக்கேற்ப ஆங்காங்கே திறந்திட வேண்டும் என வலியுறுத்தி இந்த போராட்டம் நடத்தப்பட்டது.

வழக்கறிஞர் ஆர். ராமசாமி, சி.கந்தசாமி, பா.பாலசுந்தரம், சோ.பாஸ்கர் ஆகியோர் தலைமையில், வி.ஆர்.டி பாலசுப்பிரமணியன், கே.கோட்டீஸ்வரன், வீர.மோகன், எஸ்.செல்வராஜ், டாக்டர் மு. செல்லப்பன், சி.பக்கிரிசாமி ஆகியோர் முன்னிலையில் நடந்தது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து. உத்திராபதி தென்னை வளர்ச்சி வாரிய முன்னாள் உறுப்பினர் கலைச்செல்வன் ஆகியோர் பங்கு கொண்டனர்.

தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி கோரிக்கைகளை வலியுறுத்தி பேசி போராட்டத்தை முடித்து வைத்தார்.

## வீடுகளை காலி செய்ய நெடுஞ்சாலை துறை நோட்டீஸ்

### மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முற்றுகை

கோவை: வடவள்ளி கிராமம், ஓனா பாளையம் சாலையில் கோபாலபுரம் விநாயகர் கோயில் வீதியில் சுமார் 60 வருடங்களுக்கும் மேலாக 20 குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் கூலித் தொழிலாளர்கள். அன்றாடம் வேலைக்கு சென்றால் தான் உணவு உண்ண முடியும் என்ற சூழ்நிலையில் வாழ்பவர்கள். இவர்களின் குழந்தைகள் அருகில் உள்ள பள்ளிகளில் படித்து வருகிறார்கள்.

இந்நிலையில் நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் அவர்கள் கையெழுத்திட்டு 17.6.2022 தேதி முதல் 10 தினங்களுக்குள் வீடுகளை காலி செய்ய வேண்டும், இல்லை என்றால் நெடுஞ்சாலைத்துறை வீடுகளை காலி செய்யும் என்று கதவுகளில் நோட்டீஸ் ஒட்டியுள்ளனர்.

இதில் அதிர்ச்சியடைந்த குடியிருப்புவாசிகள் செய்வதறியாத நிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு, தங்களுக்கு வேறு வீடுகள் ஒதுக்கித் தர வேண்டும், அதுவரை எங்களால் வீடுகளை காலி செய்ய இயலாது என்று முறையிட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி. கட்டிட தொழிலாளர் சங்கத்தின் மாநில துணை பொது செயலாளர் என்.செல்வராஜ் தலைமையில், எஸ்.பி.தியாகராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிழக்கு மண்டல செயலாளர் எஸ். சண்முகம், உள்ளிட்ட 20க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 13

## வன்முறை தூண்டும் ஆளுநர்

“மதத்தின் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் கூட அந்தக் காலத்தில் சனாதனத்தை பின்பற்றினர். நீண்ட ஆண்டுகளுக்கு பிறகு நாடு தற்போது விழித்துள்ளது. சனாதன தர்மத்தை மதத்தோடு ஒப்பிட்டு பேசுகின்றனர். ஆனால் சனாதனம் வேறு. மதம் வேறு” என்று தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என். ரவி ஒரு பள்ளிக்கூட விழாவில் பேசியிருக்கிறார்.

ஆர்எஸ்எஸ்காரரான ரவி, மதம் இல்லாத தர்மத்தை பற்றி பேசுவாரா என்று வியந்த போது, அடுத்த வரியிலேயே தன் அடையாளத்தை காட்டுகிறார். “சோமநாதர் கோவில் சொத்துகளை அழித்து கந்தகார், பெஷாவர் நகரங்களை கஜினி முகமது உருவாக்கினானாம். அந்த நகரங்கள் அமெரிக்க குண்டுகளால் தகர்க்கப்பட்டதில் இருந்து சனாதன தர்மத்தின் வலிமையை அறியலாம்“.

கந்தகார் என்பது பழைய காந்தாரம். அதன் இளவரசியான காந்தாரி தான் மகாபாரத கதாபாத்திரமான திருதராஷ்டிரனின் மனைவி; சகுனியின் சகோதரி. மகாபாரதம் முந்தியதா, கஜினி முந்தியவரா?

பிரிட்டிஷ்காரன் வரும் வரை இந்தியாவில் சனாதன தர்மம் தான் கோலோச்சிக் கொண்டிருந்ததாம்; அவன் போனதும் மதச்சார்பின்மை புகுந்துவிட்டதாம். பிரிட்டிஷ்காரன் வருமுன்பு இந்தியா என்றொரு நாடே இல்லையே! ஏராளமான ராஜ்ஜியங்கள் அல்லவா? அவன் போகும் போதும் 565 நாடுகளாகத் தானே விட்டுவிட்டுப் போனான்.

இந்தியா என்ற நாட்டை உருவாக்கியது, மகத்தான தேச விடுதலைப் போராட்டம்தான். மக்கள் தான் நாடாக ஒன்றுபடுத்தினார்கள். மன்னர்களோ, ரிஷிகளோ அல்ல. அப்போராட்டத்திலிருந்து விலகி நின்றதோடு, காட்டியும் கொடுத்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு இது புரியாதுதான்.

‘சனாதன தர்மா’வோடு சேர்ந்து வருவது, ‘ஸ்வதர்மா’. பிறப்பினால் உயர்வு, தாழ்வு கொண்ட சாதிகளை நிர்ணயித்து, அந்தந்த சாதி அதற்குரிய வேலையைச் செய்ய வேண்டும் என்பதுதான் ஸ்வதர்மா.

இந்நாட்டு மக்கள் எல்லோரும் சமம் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. இதைத்தான் கிழித்தெறிகிறார் அதே அரசியலமைப்புச் சட்டத்தின்படி பதவி ஏற்ற ஆளுநர்.

மதச்சார்பின்மை பேசும் கடமையைக் கொண்ட ஆளுநர், அதைப் பழிப்பதோடு, ஒரு மதத்தைச் சார்ந்து நிற்பதோடு, அமெரிக்காக்காரன் குண்டுகளை வீசி நகரங்களை அழித்த வன்முறையை, சனாதன தர்மத்தின் சாதனையாக முலாம் பூசுகிறார். மாற்று மதத்தினர் மீது வன்முறை இழைக்கத் தூண்டுகிறார். ஆளுநர் பதவி வகிக்கும் அவர் இவ்வாறு பேசுவது கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.

பெண்களை வீட்டுக்குள் பூட்டுவதை; உழைப்பை இழிவாகக் கருதுவதை; பெரும்பான்மை மக்களை படிக்கக் கூடாது என்று தடுப்பதை நியாயப்படுத்தி, அரசியலமைப்புச் சட்டம் வகுத்துள்ள எல்லையை மீறி ஆளுநர் தெரிவித்த கருத்தை அவர் திரும்ப பெற வேண்டும்.

## உதய்பூர்: மதவெறிக் கொலை

ராஜஸ்தானில் உதய்பூரில் கணையா லால் என்னும் தையல்காரரை இரண்டு இஸ்லாமியர்கள் கத்தியால் குத்திக் கொன்று இருக்கிறார்கள். பிஜேபியின் தேசிய செய்தி தொடர்பாளர் நூபுர் ஷர்மா, நபிகளை பற்றி பேசியதை கணையாலால் ஆதரித்ததற்காக இந்தக் கொலை என்று கூறப்படுகிறது. இந்தக் காட்டுமிராண்டித்தனமான கொலை வன்மையாக கண்டிக்கத்தக்கது.

ராஜஸ்தானில் காங்கிரஸ் ஆட்சி நடைபெறுகிறது. சம்பவம் நடந்த சில மணி நேரங்களில் மாநில காவல்துறை கொலை செய்தவர்களைக் கண்டுபிடித்து கைது செய்திருக்கிறது.

ஆனால் ஒன்றிய அரசு உள்துறை தலையிட்டு, விசாரணையை தேசிய புலனாய்வு முகமை எடுக்குமாறும், பின்னணியில் வெளிநாட்டு தொடர்புகளோ அல்லது அமைப்புகளோ இருக்கின்றனவா என கண்டறியுமாறும் உத்தரவிட்டிருக்கிறது. உடனடியாக புலன் விசாரணையில் இறங்கிய தேசிய புலனாய்வு முகமை, ஒரே நாளில் முதல் தகவல் அறிக்கையை ஊபா (சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு) சட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்கிறது.

“சரியான திசைவழியில் வரவேற்கத்தக்க நடவடிக்கை. இந்தப் பிசாசுகளை விட்டுவிடக் கூடாது. புலனாய்வும் நீதிமன்ற விசாரணையும் மிகத் துரிதமாக நடத்தப்பட வேண்டும். உடனடியாக நீதி வழங்குவது இந்த காலத்துக்கு தேவையான நடவடிக்கையாகும்“

என்கிறார் பிஜேபி செய்தித் தொடர்பாளர் கவுரவ் பாட்டியா.

2015 ஆம் ஆண்டு கர்நாடகாவில் பேராசிரியர் எம்.எம் கல்புர்கி சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த மாநிலத்தில் அப்போது காங்கிரஸ் ஆட்சி தான் நடந்தது என்று பிஜேபி பேசி வந்தது. ஏழு ஆண்டுகள் கழித்து இப்போதுதான் குற்றவாளிகள் நீதிமன்றத்தின் முன்பு நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள்.

இவ்வாறாக இல்லாமல் இனிமேல் இத்தகைய வழக்குகளில் உடனடியாக நீதி கிடைக்க உரிய நடவடிக்கை எடுத்தால், இந்தக் கொடூரக் கொலைகள் குறையும்.




**தீயினால் சுட்டப்புண் உள்ஆறும்**
**ஆறாதே நாவினால் சுட்ட வடு** – குறள் எண்: 129

என்ற வள்ளுவரின் வைர வரிகள் இன்றும் அற உரையாக அறிவுரையாக உயர்ந்து ஒளிறுகிறது!

பாஜகவின் தலைமையால் நீக்கம் செய்யப்பட்ட உதிரி செய்தித் தொடர்பாளர் நுபுர் சர்மாவும், மற்றொரு சங்கி உதிரியான நவீன் குமாரும் இஸ்லாம் மார்க்கத்தின் நபிகள் நாயகத்தை நாவினால் சுட்டார்கள்.

ரஷ்யா உட்பட 50 க்கு மேற்பட்ட நாடுகள் இந்தக் கயமைத்தனத்திற்குக் கண்டனம் தெரிவித்தன.

ஏற்கெனவே இந்தியப் பொருளாதாரம் சரிவுப் பாதையில் சறுக்கித் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் 40 விழுக்காடு பெட்ரோலியப் பொருட்கள் இஸ்லாமிய நாடுகளிலிருந்து தான் இறக்குமதி செய்யப்படுகின்றன.

வளைகுடா நாடுகளில் 90 இலட்சம் இந்தியர்கள் பணி புரிகின்றனர்.

சங்கிகள் நாவினால் சுட்ட வடு பொருளாதார சரிவை விரைவுப்படுத்திவிடும் என்ற பயம் ஒன்றிய ஆட்சியாளர்களுக்கு மெல்ல உரைத்தது.

தடித்த தோல் அல்லவா!

குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா இந்த நேரத்திலா வளைகுடா நாடுகளுக்குச் செல்ல வேண்டும்!

சௌதி அரேபியா நாட்டின் அரசு மரியாதையுடன் கூடிய விருந்தும் விலக்கிக் கொள்ளப்பட்டது.

கொரோனா காரணமாக எனச் சொல்லப்பட்டது. எதையும் பின்வாங்குவது மன்னிப்பு கேட்பது குருநாதர் கோழை சாவார்காரின் வழிகாட்டுதல் சங்கிகளுக்கு ஏற்கெனவே தேர்ந்த அரைக்கால் சட்டை பயிற்சியில் இருக்கிறதல்லவா!

வள்ளுவர் சொல்லான வடு சங்கிகளுக்குக் கெடுவாகி இந்தியாவிற்குக் கேடாக முடிந்தது.

மற்றொரு தீ நாட்டையே உலுக்கி வருகிறது. ஒன்றிய அரசில் குவிக்கப்பட்டுள்ள அதிகாரம் அளவுக்கு மீறியது. அதிகார போதையும் எல்லை கடந்தது.

போதை தெளிந்தால்தானே தெளிவு தென்படும். மாநிலக் கட்சிகளை எப்படியாவது ஒடுக்கி விடலாம், அடக்கி விடலாம் என்ற மேலாதிக்கப் போதை மனப் பான்மை மிகக் கொடுமையானது.

பஞ்சாபில் அகாலி தள அரசியலை ஒடுக்கி விடலாம் என நினைத்து பிந்தாரன் வாலேவை காங்கிரஸ் வளர்த்தது.

அதன் விளைவாக ஏற்பட்ட எதிர் மறை அரசியல் விளைவுகளை இந்தியா இன்றும் சந்தித்து வருகிறது.

அண்மையில் பொற்கோயிலில் பிந்தாரான் வாலே நினைவு நாளில் காலிஸ்தான் முழக்கங்கள் சீக்கிய இளைஞர்களால் எழுப்பப்பட்டன.

இந்தச் செய்தியை ஆங்கில இந்து நாளிதழில் காண முடிந்தது.

பிரதமர் இந்திரா காந்தி அமைச்சரவையில் பாதுகாப்புத் துறை அமைச்சராகப் பணியாற்றிய தலைவர் ஜெகஜீவன் ராம், 1974 ஆம் ஆண்டு மார்ச் 14 ஆம் நாள் பஞ்சாப், அரியானா, இமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தோர் எண்ணிக்கையில் அதிகமாக இராணுவத்தில் பணியாற்றி வருகின்றனர். அதைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அறிவித்தார்.

இது சீக்கியர்களின் உணர்வுகளைக் காயப்படுத்துவதாக அமைந்தது என அரசியல் வல்லுநர்களால் எடுத்துரைக்கப்பட்டது. .

மேலும் தலித்துகளுக்கும், பழங்குடியினருக்கும் அரசமைப்புச் சட்டம் வழங்கிய 15 விழுக்காடும் 7.5 விழுக்காடும் இராணுவத்தில் வழங்கப்படவில்லை என்ற கருத்தையும் பாபு ஜெகஜீவன் குறிப்பிட்டார்.

இந்திய பாகிஸ்தான் போர்களில் நாயகனாகப் போற்றப்பட்ட இராணுவ தலைமை தளபதி மானேக் ஷா இதை ஒரு கடும் சொல்லைக் கூறி எதிர்த்தார்.

“உயர் ராணுவ அதிகாரிகளில் தலித்துகள் போதிய விழுக்காடு இல்லை என்றாலும்அடுத்த நிலையில் உள்ள ராணுவ அதிகாரிகள், வீரர்களுக்கு இடையில் தலித்துகள் 15 விழுக்காடுகளுக்கு மேல் பணியில் உள்ளனர்”

“உயர் ராணுவ பதவிகளில் 1947 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒரு விழுக்காடு உள்ளனர்.”

இவர்களுக்கு உயரிய பதவிகளில் மேலும் வாய்ப்புகள் வழங்கப்படும் எனப் பாதுகாப்பு அமைச்சர் பாபு ஜெகஜுவன் ராம் அவர்களுக்கு எழுதிய மடலில் மானேக் ஷா சுட்டியிருந்தார்.

உடல் வலிமை, திறன்கள் போன்ற தகுதிகளை இராணுவத்தில் பின்பற்றுவதில் எவ்வித சமரசமும் கூடாது என வலியுறுத்தினார்.

ஒரு இராணுவ தலைமை தளபதி அச்சமின்றித் தனது கருத்துக்களைப் பதிவு செய்யும் ஆளுமை தலைமை இராணுவ தளபதி மெனக் ஷா விடம் இருந்தது

இது போன்ற நடவடிக்கைகள் சீக்கியர்களின் உணர்வுகளைப் பாதித்துள்ளது என்பதையும் அதற்கு இராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில்,குறிப்பாக இராஜுவ் லோங்கோவால் ஒப்பந்தத்தில் பிரிவு இரண்டில் காண முடிகிறது.

“இராணுவ வேலைவாய்ப்பில் உடல் வலிமை மற்ற திறன்கள் கணக்கீடு செய்யப்பட்டு, தகுதி திறமை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.”

பிரிவு நான்கில் பஞ்சாப் பொற்கோயில் இராணுவ நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து 12000 இராணுவ வீரர்கள் இந்திய இராணுவத்திலிருந்து விலகினார்கள்.

இராஜுவ் லோங்கோவால் ஒப்பந்தத்தின் படி 900 வீரர்கள் மீண்டும் இந்திய இராணுவத்தில் பணியில் சேர்க்கப்பட்டனர்.

இந்த ஒப்பந்தத்தை ஒன்றிய அரசோடு இணைந்து லோங்க வால் கையொப்பம் இட்ட ஒரு திங்களில், சீக்கிய தீவிரப்பிரிவினரால் 1985 ஆகஸ்ட் 20 ஆம் நாள் சுட்டுக் கொல்லப்பட்டார்

இந்தியாவின் பாதுகாப்பு கூறுகளைச்சிறிதளவு கைவிட்டால் கூட ஏற்படும் பின் விளைவுகள் எப்படி அமைந்தன என்பதற்கு இந்த நிகழ்வுகள் எல்லாம் தக்க சான்றுகளாக அமைகின்றன.

**பிரதமர் மோடி தீப்படை பிரிவு ஒன்று உருவாக்கப்படும் எனத் திடீர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இந்த அறிவிப்பும் முழுமையாக இந்தியில் உள்ளது. “தீ”- பிரிவில் 17 -1/2 வயதில் தொடங்கி 21 வயது வரை சேரலாம். முதலில் 40,000 நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நான்காண்டுக் காலத்துக்குப் பிறகு 40,000 படையினரில் 25 விழுக்காடு அளவே பணி நீடிப்பு தொடரும். மீதி 75 விழுக்காட்டினர் விரட்டப்படுவர்.**

இந்த அறிவிப்பை எதிர்த்து வட மாநிலங்களில் இளைஞர்கள் களம் அமைத்துப் போராடுகிறார்கள்.

இன்று கூட பீகாரில் 39 தொடர்வண்டி பெட்டிகள் தீ க்கு இரையாயின. மழைக்கால நாடாளுமன்றத் தொடர் கூட்டம் சில வாரங்களில் கூட இருக்கிறது. என்ன அவசரம்!

ஆண்டிற்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவேன் எனக் கூறிய பிரதமர் மோடியின் வாக்குறுதி என்னவாயிற்று.பல அரசியல் கட்சிகள் இந்தத் திட்டத்தைக் கடுமையாக எதிர்க்கின்றன.

இராணுவ நடவடிக்கை அமைப்பின் இயக்குநராக இருந்த ராணுவ தளபதி வினோத் பாட்டியா எழுப்பியுள்ள கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பும் கடமையும் பிரதமர் மோடிக்கு உள்ளன.

இம்முயற்சி “இராணுவத்திற்கு அடிக்கப்பட்ட சாவு மணி” எவ்வித திறன் பயிற்சி இல்லை.

முன்மாதிரியான சோதனை முயற்சி இல்லை. நேரடி யாகத் திட்டம் நிறைவேறும். 40,000 படைவீரர்களில் கைவிடப்படும் 75 விழுக்காட்டினர் நான்கு ஆண்டுகளில் வேலையில்லாத நிலைக்குத் தள்ளப்படுவர். ஒதுக் கப்பட்டவர்களுக்கு மனச்சோர்வு ஏற்படும்.

இதனால் இந்தியச் சமூகம் இராணுவ சமூகமாக மாறும். இது சிறந்த முடிவு இல்லை. இதனால் எந்தப் பலனுமில்லை.

இராணுவத் தலைமை இடத்தில் இராணுவ நடவடிக்கை குழுவின் இயக்குநர் கூறியதை ஒன்றிய அரசு ஏற்குமா?

“அக்னி குஞ்சொன்று கண்டேன் அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு” என ஒரு கவிதையில் பாரதி குறிப்பிட்டுள்ளார்.

மோடி கண்ட அக்னியை நாட்டின் கேந்திரமான பாதுகாப்புத் துறையில் வைக்கலாமா?

நாட்டை அல்லவா வேக வைத்துவிடும்!

பட்டினத்தார் பாடலும் நினைவிற்கு வருகிறது.

**முன்னை இட்ட தீ முப்புரத்திலே**
**பின்னை இட்ட தீ தென் இலங்கையிலே**
**அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே**
**யானும் இட்ட தீ மூள்க! மூள்கவே!**

ஒன்றும் மட்டும் இன்று தெரிகிறது.

மோடி மூட்டிய “தீ” பீகாரில் பற்றி இந்தியா முழுவதும் எரிகிறது!

தத்துவார்த்தம் 35



எஸ். தோதாத்ரி



# சமணம்!

**இந்தியாவில் பழங்கால மதங்களில் சமணமும் ஒன்று. இது கி.மு. ஆறாம் நூற்றாண்டு அளவில் உருவாயிற்று. சமணர்களுக்கு அருகதர், சைனர், அஜீவிகர் என்ற பெயர்கள் உண்டு. சமணர்களை வணிகர்கள் ஆதரித்தனர். வட இந்தியாவைவிட தென்னாட்டில் தான் சமணர்களது செல்வாக்கு அதிகமாக இருந்தது. கன்னடத்தின் வடபகுதியில் இவர்கள் அதிகமாக இருந்தனர். இவர்களுக்கு அரசரது ஆதரவும் உண்டு. களப்பிரர், பல்லவர்கள், பாண்டியர்கள் ஆகியோர் இவர்களை ஆதரித்தனர்.**

கலையிலும், ஓவியங்களிலும், இலக்கியங்களிலும் இவர்களது பங்களிப்பு மிக அதிகமானது. மதம் என்ற முறையில் சமணம் கி.பி. முதலாம் நூற்றாண்டு அளவில் தமிழகத்தில் பரவியது. சமணர்கள் தமிழில் இலக்கண நூல்களையும், காப்பியங்களையும் படைத்தனர். காஞ்சிபுரத்தில் சமணர்கள் அதிகமாக இருந்தனர். திருநாவுக்கரசரே சமணராக இருந்து சைவத்திற்கு மாறியவர்.

சமணர்கள் வேத, உபநிடதங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. கடவுளையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், தத்துவத்தில் அவர்கள் ஒரு வித்தியாசமான பாதையை உருவாக்கினர். வேதங்கள் பரமாத்மா, ஆத்மா ஆகியவற்றை ஏற்றுக்கொள்கின்றன. ஆனால், சமணர்கள் பரமாத்மாவை ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் ஆன்மா, சடப்பொருள் இவை இரண்டையும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆன்மா நிரந்தரமானது என்றும், முழு அறிவு பெற்றது என்றும் அவர்கள் கருதுகின்றனர். இந்த ஆன்மாவானது எல்லா இடங்களிலும் இருக்கின்றது. இந்த ஆன்மா எங்கு இருக்கிறதோ அதற்கு ஏற்றபடி தன்னை மாற்றிக் கொள்ளவல்லது. ஒரு யானையின் உடம்பில் உள்ள ஆன்மா யானை அளவிற்குப் பெரிதாக இருக்கும். ஓர் எறும்பின் உடலில் உள்ள ஆன்மா எறும்பின அளவிற்கு சிறியதாக இருக்கும். இரும்பு, செம்பு போன்ற உலோகங்களுக்கு உயிருண்டு என்று சமணர் கூறுவர்.

ஆனாலும் சமணர்கள் ஆன்மாவினுடைய பண்புகளைக் கூறுகின்றனர். ஆன்மா என்பது சுத்த அறிவு உடையது. இது சடத்தோடு சேரும் பொழுது அறிவை இழந்து விடுகிறது. இந்த அறிவை மறுபடியும் பெறுவதற்கு அது முயன்று சடத்தன்மையை நீக்கி விட்டு சுத்த அறிவு உள்ளதாக மாறிவிடுகிறது. சமணர்கள் ஆன்மாவையும் ஒரு பொருளாக கருதுகின்றனர். ஆன்மாவையும், சடப் பண்புகளில் ஒன்று எனக் கூறுகிறார்கள். அதேபோல சடத்திலும் ஆன்மாவின் தன்மை உண்டு என கூறுகிறார்கள். இது ஒரு வகையான இயங்கியல் ஆகும்.

அதாவது நேரெதிரான இரண்டு சக்திகள் ஒரே இடத்தில் இருப்பதைப் பற்றி இவர்கள் கூறுவது இயங்கியல் முரண்பாட்டை பற்றியது ஆகும். ஆனால் இது கருத்துமுதல்வாத தன்மை உள்ளது. பொருள்முதல்வாதத் தன்மை இல்லை. சமணர்கள் உலகம் மாறுவதை ஏற்றுக்கொள்கிறார்கள். அதே சமயத்தில் அது நிலைத்து இருப்பதைப் பற்றியும் கூறுகிறார்கள். இவ்வாறு கூறுவதன் மூலம் இவர்கள் இயங்கியலில் சில அம்சங்களைப் பற்றிக் கூறுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சமணத் தத்துவத்தில் மிக முக்கியமான ஒன்று கன்மம் என்பதாகும். ஒவ்வொரு ஆன்மாவும் கன்மத்தால் பீடிக்கப்படுகிறது. இதன் காரணமாக பிறவி இருக்கிறது. இந்த கன்மத்தை அவை அனுபவித்தே தீரவேண்டும். கன்மம் ஒரு பிறவியில் நீங்கா விட்டால் ஆன்மா மற்றொரு பிறவி எடுக்க வேண்டி வரும். சிலப்பதிகாரத்தில் ஊழ்வினை வந்து உறுத்தும் என்று இளங்கோவடிகள் கூறுகிறார். அதன் காரணமாகத்தான் கோவலன் கொலை செய்யப்படுகிறான். இந்த கன்மம் என்பதை பல பிறவிகளுக்குப் பொருத்தி நுணுக்கமாக ஆராய்ந்தவர்கள் சமணர்கள்.

**உலகத்தை படைக்க கடவுள் தேவையில்லை என்று சமணர்கள் கூறினார்கள். சடப் பொருளின் சேர்க்கையால் உலகம் தோன்றுகிறது என்பது அவர்களது வாதம். இங்கு சாங்கியம், வைசேடிகம், மீமாம்சம் ஆகியவை கூறிய உலகத் தோற்றக் கருத்துக்கள் இடம் பெறுவதைக் காண முடியும்.**

எல்லாவற்றிலும் ஆன்மா உண்டு என்று கூறியதன் காரணமாக சமணர்கள் ஜீவகாருண்யம் பற்றி அதிகம் பேசுகின்றனர். சிறிய பூச்சிகளுக்கு கூட ஊறு விளைவிக்கக் கூடாது என்பதற்காக அவர்கள் மயில் பீலியால் துடைத்துக் கொண்டே செல்வர். வண்ண ஆடைகளில் பூச்சி ஒட்டிக்கொண்டால் அவற்றை கொல்ல நேரிடும் என்பதற்காக சமணத்துறவிகள் வெள்ளை ஆடை அணிந்தார்கள். இவர்களில் சிலர் ஆடையின்றி வந்தார்கள். இவர்களுக்கு திகம்பரர்கள் என்று பெயர்.

கொல்லாமையை மிகத் தீவிரமாக இவர்கள் பின்பற்றினர். திருவள்ளுவர் புலால் மறுத்தல் என்பது பற்றி பேசியுள்ளார். இது சமணத்தின் தாக்கத்தால் ஏற்பட்டது ஆகும். சைவ உணவு என்பதே உண்மையில் சமணத்தின் தாக்கத்தால் ஏற்பபட்டது. புத்தர் கூட புத்தத் துறவிகள் மாமிசம் உண்ணலாம் என்று கூறியதாகக் கதைகள் உள்ளன. ஆனால், அவர்கள் கொல்லக்கூடாது; பிறர் சமைத்துத் தருவதை ஏற்றுக் கொள்ளலாம் என்ற விதிவிலக்கு புத்த சங்கத்தில் இருந்ததாகக் கூறுவர்.

சமணர்கள் இந்தியத் தத்துவத்திற்கும், தமிழ் பண்பாட்டிற்கும் பெரும் தொண்டு செய்தவர்கள். சிலப்பதிகாரம் சமணக்காப்பியமாகும். கீழ்க்கணக்கு நூல்களில் பல சமணர்களால் எழுதப்பட்டவையாகும். மிகச்சிறந்த தமிழ் இலக்கண நூல்களையும் அவர்கள் இயற்றி உள்ளனர். நிகண்டுகளையும் உருவாக்கியுள்ளனர்.

தொடர்புக்கு: 98947 83657

– ஹேமவந்தனா ரவீந்திரதாஸ்

# ஹெலன் கெல்லர் = பிறந்தநாள்..!

எதுக்காக இவங்க வீட்டில் இந்த பெயரை வைத்தார்கள் என தெரியவில்லை.. 'ஹெலன்' என்றால், "ஒளிரும் விளக்கு" என்று அர்த்தமாம்.. ஏனோ ஹெலன் வாழ்க்கையில் வெளிச்சம் இல்லை.

இந்த அமெரிக்க பெண்மணிக்கு வாய் பேச முடியாது.. காது கேட்காது.. பார்க்க முடியாது.. ஆனால், 24 வயசிலேயே பட்டப்படிப்பு முடித்துவிட்டார்.. இதற்கு காரணம், ஹெலனின் கண்ணாகவும், கையாகவும், செவியாகவும் இருந்து உதவியர், இவரது டீச்சர் ஆனி..!

தன்னை போன்ற மாற்று திறனாளிகளுக்கான உரிமைகளை, உலகின் கவனத்துக்கு கொண்டு சென்றதில் அதிக பங்கு பெற்றவர் ஹெலன்..!

உலகில் உள்ள கோடிக்கணக்கான மாற்று திறனாளிகள் இன்று கல்வி கற்கவும், தன்னம்பிக்கையுடன் நடைபோடவும், ஆக்கமும் ஊக்கமும் தந்தவர் தான் இந்த ஹெலன்..!

அவர்களுக்கான ஸ்கூல்களை திறக்க வேண்டும் என்பதற்காக 40க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அதில் சேர்ந்த தொகையை, அந்த பள்ளிகளுக்கே வழங்கியவர்..!

தன்னைப்போல அவர்களும் மீட்சி பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் 88 வயசு வரை ஓடி ஓடி உழைத்தவர்... மனித உரிமைகளையும், சோசலிச தத்துவத்தையும் விடாமல் எழுதி எழுதி தீர்த்தவர்..!!

1955ம் ஆண்டு..!

ஒரு பெரிய மாளிகையின் வரவேற்பறை.. சுற்றிலும் நிசப்தம். அதில் 2 பேர் மட்டுமே எதிரெதிர் உட்கார்ந்திருந்தனர். ஒருவர் இந்திய பிரதமர் நேரு. இன்னொருவர் ஹெலன் கெல்லர்.

'மனவலிமை எத்தனை மகத்தானது' என்பது போன்ற எண்ணத்துடன் உணர்வு பொங்க, அதிசயத்துடன், மலைப்புடன் ஹெலனையே பார்த்து கொண்டிருந்தார் நேரு!!

ஒரு குழந்தையின் மறு உருவமாய் புன்னகைத்தவாறே உட்கார்ந்திருந்தார் மூதாட்டி ஹெலன்!!

திடீரென எழுந்தார் ஹெலன்.. நேருவின் அருகில் சென்று அவர் முகத்தை தடவி தடவி பார்த்தார்.. உடனே நேரு, "உங்களை சந்தித்ததில் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி" என்றார்..!

நேருவின் உதட்டில் தன் விரலை வைத்து, அவர் என்ன பேசினார் என்பதை சட்டென புரிந்து கொண்டார்.. மறுபடியும் ஒரு புன்னகை.. ஆனால் கண்களில் ஆனந்த நீர் பெருக்கெடுத்தது..!!

இரு நெஞ்சங்களிலும் அங்கே மகிழ்ச்சி மட்டுமே பொங்கி வழிந்தது.. உணர்ச்சிப் பெருக்குடன் அந்த தருணங்கள் மெல்ல மெல்ல கழிந்தன..!

சுற்றுப்பயணத்துக்காக ஹெலன் கெல்லர் இந்தியா வந்தபோது நடந்த சம்பவம் இது.. அவரை வழியனுப்பும்போது, இந்திரா, பேரக்குழந்தைகளான சஞ்சய், ராஜீவ் எல்லாருமே ஹெலனையே அதிசயமாக பார்த்து கொண்டு மலைத்து நின்றிருக்கிறார்கள்.

தாஜ்மஹாலை சுற்றி பார்க்க ஹெலனுக்கு ரொம்ப ஆசை.. ஆனால் சாயங்காலம் நேரம் இருள் சூழ்ந்துவிடவும், எப்படி இவரை அங்கு அழைத்து சென்று காட்டுவது என்று உடனிருந்தோர் தயங்கி உள்ளனர்.. "எனக்கு இரவு பகல் ஒன்னுதானே, இப்பவே போகலாம்" என்று ஹெலன் அடம் பிடித்துள்ளார்.







சலவைக்கற்களை தடவி பார்த்து கொண்டே வந்த ஹெலன், தாஜ்மஹாலின் கலைநயத்தை பற்றி அரை மணி நேரம் வர்ணித்து கொண்டே இருந்தாராம்..!

இதில் என்ன ஸ்பெஷல் என்றால், இந்தியாவிற்கு வந்து, திரும்பி செல்லும்வரை, ஹெலன், பெரும்பாலும் புடவைகளையே விரும்பி கட்டி கொண்டாராம்.. ஊட்டி ரோஸ் கார்டனுக்கு கூட வந்து போயுள்ளார்.

"வாழ்க்கையை ஒரு அவசர நெருக்கடியாக உணர வேண்டும். அப்போதுதான் நமது ஆற்றல் எல்லாம் வலிமை பெற்று செயல்களை துரிதமாக செய்ய முடியும்" என்று அடிக்கடி சொல்வார் ஹெலன். விடாமுயற்சி, உத்வேகம், தேடல், தாகம் இவைகள்தான் ஹெலனின் குறைபாடுகளை வென்றன...!

வாழ்க்கையில் ஒன்னுமில்லாத விஷயத்துக்கெல்லாம் சோர்ந்து போகிறவர்கள் நிச்சயம், ஹெலன் கெல்லரை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்!!

வாழ்நாளெல்லாம், தொட்டும், நுகர்ந்தும், சுவைத்தும், மனித உறவுகளின் மொத்த அன்பையும் தன்னுள் கடத்தி கொண்டவர் ஹெலன்..!

மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது தடைகளற்ற வாழ்க்கை அல்ல, தடைகளை வெற்றி கொண்டு வாழும் வாழ்க்கை என்பதை புரிய வைத்தவர் ஹெலன்..!

"வாயுள்ள பிள்ளை பிழைத்துக்கொள்ளும்" என்ற வழக்கமான சப்பைக்கட்டு வாதத்தை, நொறுக்கி காட்டியவர் ஹெலன்..!

விதியை வென்ற வீராங்கனை ஹெலன் ..!

தோல்வியையே அங்கீகரிக்காதவர் ஹெலன் ..!

தன் இருண்டு போன வாழ்க்கையிலும், ஒளி நிறைந்த விஷயங்களை பரப்பியவர் ஹெலன் ..!

சிந்தனை, செயல், உணர்ச்சி மூலம் மவுனப்புரட்சி செய்தவர் ஹெலன் ..!

கடைசிவரை தான் பேசாமல், தன்னை பற்றி பிறரை பேச வைத்து வருபவர் ஹெலன் ..!

## ஓட்டுநர், நடத்துநர்களுக்கு தினசரி வசூல்படி உயர்வு

# ஏஐடியூசி முயற்சிக்கு வெற்றி

பயணிகள் பேருந்து கட்டண உயர்வு 29.1.18 தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டது. ஓட்டுனர், நடத்துனர்கள் பெற்றுவந்த தினசரி வசூல் படி சதவீதம் ரூபாய் 1.65 லிருந்து சாதாரண பேருந்துகளுக்கு ரூபாய் 1.33 ஆக குறைக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் சுமார் 7500 சாதாரண கட்டண பேருந்துகள் இயங்கிவருகின்றன. அதில் 2500க்கும் மேற்பட்ட பேருந்துகள் சென்னையில் இயக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் சாதாரண பேருந்துகளில் மகளிர் இலவச பயணம் அனுமதிக்கப்பட்டது.

ஓட்டுனர் நடத்துனர்களுக்கு தினசரி வசூல் படி பஸ் கட்டண உயர்வுக்கு பின்பு மாற்றி அமைத்த நிலையில் குறைவாகப் பெற்று வந்தனர். இலவச பயணத்தால் வசூல் குறைந்து மேலும் தினசரி வசூல் படி குறைந்து அன்றாடம் செலவிற்கு மிகவும் சிரமப்பட்டு வந்தனர்.

இதுதொடர்பாக ஏஐடியுசி மற்றும் கூட்டமைப்பு சார்பாக தொடர்ந்து கோரிக்கை எழுப்பப்பட்டு வந்தது. சென்னை தொழிலாளர் ஆணையர் முன்பு பேச்சுவார்த்தை நடந்து வந்தது. போக்குவரத்துத்துறை அமைச்சர் முன்பு பேச்சுவார்த்தையின்போது இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

ரூபாய் 100 வசூல் கட்டண உயர்வுக்கு பின்பு உத்தேச வசூல் ரூபாய் 110 வருமென்றால் உயரும் வசூலில் 80 சதம் தொழிலாளிக்கும் 20 சதம் சதம் நிர்வாகத்திற்கும் என பிரித்து வசூல் படி சதவீதம் மாற்றியமைக்கப்படும்.

அதில் எவ்வித முடிவும் நீண்ட காலமாக எடுக்கப்படாமல் மிகவும் குறைவான தினசரி வசூல் படி பெற்று வந்தனர் . இச்சூழ்நிலையில் கடந்த 26.6.22 அன்று இந்து தமிழ் திசையில் ஏஐடியூசி போக்குவரத்து சம்மேளன பொதுச் செயலாளர் ஆர்.ஆறுமுகம் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதன் பின்னர் அரசு பரிசீலித்து தினசரி வசூல் படி நூறு ரூபாய்க்கு 1.33 காசு என்று இருந்ததை இரு மடங்காக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அமைச்சரின் அறிவிப்பை வரவேற்கின்றோம்.

பஸ் கட்டண உயர்வுக்கு பின்பு மாற்றி அமைத்தும்,மகளிர் இலவச பயணம் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தும் இது வழங்கப்பட வேண்டும். இதேபோன்று தொழில்நுட்ப பணியாளர்களுக்கு இன்சென்டிவ், அலுவலக பணியாளர்களுக்கு சிறப்பு அலவன்ஸ் மாற்றி அமைத்திட வேண்டும்.

இது ஏஐடியுசி மற்றும் கூட்டமைப்பு சங்கங்களின் கோரிக்கைக்கு கிடைத்ததாகும்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட மாநாடுகள்




## மயிலாடுதுறை மாவட்ட 24வது மாநாடு

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா செம்பனார் கோவிலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது மாவட்ட மாநாடு மற்றும் தீர்மான விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட மாநில செயலாளர் இரா.முத்தரசன் செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது:

ஆகஸ்ட் 9ம்தேதி விடுதலை போராட்டத்திற்காக வெள் ளையனே வெளியேறு முழக்கத்தை முன்வைத்த நாளில்; திருப் பூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில மாநாட்டு இறுதிநாள் 9ம்தேதி மக்கள் விரோத, ஜனநாயக விரோத பாசிச மோடி அரசே வெளியேறு என்ற கோஷத்தை பேரணியில் முன்வைக்க இருக்கிறோம்.

கடந்த 8 ஆண்டுகளில் சாதாரண மக்கள், சிறு, குறு தொழில் உள்ளிட்ட அனைவரின் நலனை புறக்கணித்து கார்ப்பரேட் முதலாளிகளுக்கு சாதகமாக செயல்பட்டு அரசியல் அமைப்பு சட்டத்திற்கு தேர்தல் ஆணையம், நீதிமன்றம், ரிசர்வ் வங்கி ஆகியவை தனித்தன்மையோடு சுதந்திரமாக செயல்படக்கூடிய அமைப்புகள் அனைத்து சீர்குலைக்கப்பட்டு கருத்து சுதந்திரம் பறிக்கப்பட்டு, ஜனநாயக விரோதமான முறையில் செயல்படும் மத்திய அரசை வெளியேற்று என்ற முழக்கத்தை இந்தியாவில் தமிழ்நாட்டில் முதன்முறையாக வைக்கிறோம்.

ஒன்றிய அரசின் ஒத்துழைப்பு இல்லாமலும், தமிழகத்திற்கு வழங்க வேண்டிய ஜிஎஸ்டி பங்கு, பேரிடர் நிதி முழுமையாக ஒன்றிய அரசு வழங்கவில்லை. அப்படிபட்ட சூழலிலும் தமிழக முதல்வர் சிறப்பான ஆட்சியை நடத்திவருகிறார். ஒன்றிய அரசு மாநில உரிமைகளைப் பறிக்கும் முயற்சிக்கு கடுமையான எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. மேகதாட்டில் அணைகட்டுவோம் என்று கர்நாடகாவின் முயற்சிக்கு தமிழக அரசு எதிர்த்து அறிக்கை விடுவதோடு நீதிமன்றத்தை நாடியுள்ளது.

திமுக தேர்தல் வாக்குறுதி அளித்த பல திட்டங்களை தமிழக அரசு நிறைவேற்றி கொடுக்க வேண்டும்.

மாநாட்டில் ஒருமனதாக அ.சீனிவாசன் மாவட்ட செயலாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**தீர்மானங்கள்:** மயிலாடுதுறை அடுத்துள்ள தலை ஞாயிறு நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை கடந்த ஆட்சியில் அதிகாரிகளின் அலட்சியப் போக்காலும், தவறான ஆலை விரிவாக்கத்தாலும் நட்டம் ஏற்பட்டு கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பாக மூடப்பட்டது.

இதனால், ஆயிரக்காணக்கான கரும்பு விவசாயிகளும், ஆலைத் தொழிலாளர்களும் வேலையின்றி பாதிக்கப்பட்டுள்ளனர். மீண்டும் ஆலையை இயக்க பல்வேறு போராட்டங்கள் நடத்தி, தற்போது ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு மீண்டும் ஆலையை இயக்க 10 பேர் கொண்ட அதிகாரிகள் குழு அமைக்கப்பட்டு உள்ளது. அந்த குழுவில் இடம் பெற்றுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாக இயக்குனராக பணியாற்றிய திருமதி. சிவமலர் என்பவர் ஆலையின் தொடர் இயக்கம் செயலிழக்க காரணமாக இருந்துள்ளார். எனவே மீண்டும் இவ்வாலையை இயக்க நடவடிக்கை எடுத்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவிப்பதோடு, மேற்கண்ட நிர்வாக இயக்குனரை அக்குழுவிலிருந்து நீக்கி வேறு ஒரு அதிகாரியை நியமித்து துரிதமாக ஆலையை இயக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2020 ல் மயிலாடுதுறை 38வது புதிய மாவட்டமாக அரசு அறிவித்து தனிமாவட்டமாக செயல்பட தொடங்கியுள்ளது. சில மாவட்ட தலைமை அலுவலகங்களுக்கு நாகப்பட்டிணம் செல்லும் நிலை உள்ளது. எனவே அனைத்து துறை அலுவலகங்களையும் மயிலாடுதுறையில் இயங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மயிலாடுதுறை முதல் தரங்கம்பாடி வரை ஆங்கிலேயர் காலத்தில் இரயில் சேவை துவங்கப்பட்டு செயல்பட்டு வந்தநிலையில் கடந்த 1986ம் ஆண்டு முதல் முற்றிலும் இரயில் சேவை நிறுத்தப்பட்டு விட்டது. இதனால் மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே நிறுத்தப்பட்ட இரயில் சேவையை மீண்டும் துவங்கி காரைக்கால் வரை இச்சேவையை நீட்டித்து தருமாறு ஒன்றிய அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் புதிதாக உருவாக உள்ள மருத்துவக்கல்லூரியை மயிலாடுதுறையிலும், சீர்காழி அரசு மருத்துவமனையை தரம் உயர்த்தி மாவட்ட தலைமை மருத்துவமனையாக உருவாக்கிட வேண்டும்.

மயிலாடுதுறை நகரத்தில் உள்ள பேருந்து நிலையகட்டுமானப் பணியை உடனடியாக துவங்கிட வேண்டும். சிலப்பதிகாரம் கண்ட பூம்புகார் கலைக்கூடம் கலை இழந்து காணப்படுகிறது. எனவே கலைக்கூடத்தை புனரமைத்து சுற்றுலாதலத்தை மேம்படுத்த வேண்டும். கலைமாமணி பட்டம் பெற்று உலகமெங்கும் உள்ள தமிழர்களின் மனம் கவர்ந்த இசைமாமணி டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் மணிமண்டபம் சிலை அமைக்க வேண்டும்.

மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் ஒன்றியத்தில் 42 வருவாய் கிராமங்கள் உள்ளன. தற்போது இயங்கி வரும் சீர்காழி வட்டாட்சியர் அலுவலகம் வந்து செல்லும் தூரம் மிக அதிகமாக உள்ளது. எனவே கொள்ளித்தை தலைமையிடமாக கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்கிட வேண்டும்.

சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய வட்டாட்சியர் அலுவலக கட்டுமான பணியை உடனடியாக துவக்க வேண்டும்.

மணல்மேடு பேரூராட்சியில் இயங்கிவந்த பஞ்சு நூற்பாலையை மீண்டும் துவங்கி செயல்படுத்திட வேண்டும்.

அனக்கரை முதல் அளக்குடி வரை உள்ள கொள்ளிடக் கரையை பலப்படுத்தி சாலை வசதியை மேம்படுத்தி தர வேண்டும்

பழையார் துவங்கி தரங்கம்பாடி வரை கடற்கரையோரம் உள்ள கிராம மீனவர்கள் செய்யும் மீன்பிடித்தொழில் பிரதான தொழிலாக உள்ளது எனவே மீன் பதப்படுத்தும் மையம் பழையார் அல்லது பூம்புகாரில் துவங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தஞ்சாவூர் தெற்கு மாவட்ட மாநாடு




தஞ்சாவூர் தெற்கு மாவட்ட இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் 24–வது மாநாடு தஞ்சாவூர் நாஞ் சிகோட்டை ரோடு காவிரி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் பா.பாலசுந்தரம், ம.விஜயலட்சுமி, வாசு.இளையராஜா ஆகியோர் மாநாட்டிற்கு தலைமை வகித்தனர். மருத்துவர் மு.செல்லப்பன் 24 வது மாவட்ட மாநாட்டுக் கொடி யினை ஏற்றிவைத்தார். அஞ்சலி தீர்மானத்தை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சி.பக்கிரிசாமி வாசித்தார். தஞ்சாவூர் மாநகர செயலாளர் ஆர்.பிரபாகர் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.மகேந்திரன் மாநாட்டை தொடக்கி வைத்து சிறப்புரையாற்றினார். அரசியல் வேலை அறிக்கையை மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி, மாவட்ட துணைச் செயலாளர்கள் வீ.கல்யாணசுந்தரம், ப.காசிநாதன் ஆகியோர் முன் வைத்தனர்.

மாநாட்டின் தீர்மானங்களை மாவட்ட பொருளாளர் என்.பாலசுப்பிர மணியன், நிர்வாக குழு உறுப்பினர்கள் சி.சந்திரகுமார், இரா. திருஞானம், வீரமோகன், சீனி.முருகையன், கோ.சக்திவேல், ஆர்.கே.செல்வகுமார் ஆகியோர் முன் மொழிந்தனர்.

திருச்சியை மையமாகக் கொண்டு செயல்பட்டு வரும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில், திருச்சி ,தஞ்சாவூர், புதுக்கோட்டை அரியலூர் ,திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் இயங்கி வரும் அரசு கல்லூரி மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகள் உள்ளன. பரந்து விரிந்த டெல்டா மாவட்டத்தில் தஞ்சாவூரை தலைமையகமாகக் கொண்டு பாரதிதாசன் கல்லூரி பல்கலைக் கழகத்தில் இணைக்கப்பட்டுள்ள உறுப்புக் கல்லூரிகளை பிரித்து தனியாக பல்கலைக் கழகத்தை உருவாக்கி செயல்படுத்த வேண்டும். காவிரி வடிநில பகுதிகளின் நீர் தேவையை பூர்த்தி செய்கின்ற விதத்தில் நீரைத் தேக்கி வைத்து விவசாயம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு பயன்படுத்திட ஒரு பெருந் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்த வேண்டுமென தமிழ்நாடு அரசுக்கு மாவட்ட மாநாடு கோரிக்கை வைக்கிறது.

காவிரி வடிநில பகுதிகளில் ஏராளமான ஏரி ,குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகள் நீர்த்தேக்க வாய்ப்புள்ள பகுதிகளாக இருந்தும் முழுமையாக பயன்படுத்தவில்லை, இவற்றை முறையாக கண்டறிந்து பராமரிக்கப்படாததால் மழைநீர் உடனுக்குடன் கடலில் கலந்து வீணாகிறது, இதனை தடுக்கும் விதத்திலும், நிலத்தடி நீரை பாதுகாக்கவும் தமிழக அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தஞ்சாவூர் உள்ளிட்ட டெல்டா விவசாய பகுதிகளில் விவசாய உற்பத்தியை மையமாகக் கொண்டு, விவசாயம் சார்ந்த தொழிற்சாலைகளை ஏற்படுத்தவும், உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் இணைத்து செயல்படுத்தவும் அரசை கேட்டு கொள்கிறது.

தஞ்சைமாவட்டத்தில் பெரும் தொழிற்சாலைகள் இல்லாத நிலையில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் விதத்தில், நிரந்தர பயிற்சி மையம் ஏற்படுத்தவும் , கடனுதவி அளித்து சிறு குறு தொழில் துவங்குவதற்கான விரிவான திட்டத்தை செயல்படுத்தவும் தமிழ்நாடு அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்தை கேட்டு கொள்கிறது.

அரியலூர் – தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை ரயில் பாதை அமைக்க வேண்டும் என்ற திட்டம் இந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. மத்திய மாநில அரசுகள் இந்த கோரிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாமல் காலம் கடத்தப்பட்டு வருகிறது, மக்களின் பொருளாதார மேம்பாடு ,பொருள் போக்குவரத்து, பயணச்செலவு, பயண நேரம் குறைவு, தென்மாவட்டங்களில் எளிய முறை யிலான தொடர்புக்கான வாய்ப்பு இவற்றை பரிசீலித்து அரியலூர் தஞ்சாவூர் பட்டுக்கோட்டை ரயில்பாதை அமைத்திட ஒன்றி அரசை மாநாடு வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது. தஞ்சை மாநகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்த்திடவும், விபத்துகளைத் குறைத்திடவும் சாந்த பிள்ளை கேட் மேம்பாலத்தை நான்கு வழிப்பாதையாக மாற்றி அமைத்து செயல்படுத்திட மாவட்ட நிர்வாகத்தை மாநாடு கேட்டுக் கொள்கிறது.

இரண்டாம் நாள் மாநாட்டை இந்திய கம்யூ னிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தொடங்கி வைத்த சிறப்புரையாற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ.பழனிச்சாமி வாழ்த்துரை வழங்கி உரையாற்றினார். மாநாட்டில் தஞ்சாவூர் தெற்கு மாவட்ட செயலாளராக முத்து உத்திராபதி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

## திருவள்ளூர் மாவட்ட மாநாடு

திருவள்ளூர் மாவட்ட 9வது மாநாடு, மீஞ்சூரில், பேரணியுடன் துவங்கியது. பேரணியை மாநில செயற்குழு உறுப்பினர் என்.பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ.துவக்கி வைத்தார்.

மாநாட்டு துவக்க நிகழ்ச்சியாக மூத்த தோழர் எம்.ஆனந்தன் மாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்தார். தியாகிகளுக்கு அஞ்சலி நிகழ்ச்சி முடிந்ததும், ஜி.பாலன், வி.சரவணன், ஜெ.அருள் ஆகியோர் தலைமைக் குழு தேர்வு செய்யப்பட்டனர். எம்.சரவணன் அஞ் சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். வரவேற்பு குழுத் தலைவர் ஜி.பாலன் வரவேற்புரை ஆற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். ஏ.எஸ்.கண்ணன் எக்ஸ்.எம்.எல்.ஏ., என்.எஸ்.பிரதாப்சந்திரன், பி.வி.செந்தில் ஆகியோரின் வாழ்த்துரையுடன் பொது மாநாடு நிறைவுற்றது.

பின்னர் பிரதிநிதிகள் மாநாடு துவங்கியது. செயலாளர் வேலை அறிக்கை மற்றும் விவாதம் முடிந்து தீர்மானங்கள் முன்மொழியப்பட்டது.

மாவட்ட செயலாளராக கே.கஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்களாக வி.சரவணன், ஜெ.அருள், மாவட்ட பொருளாளராக எஸ்.மயில்வாகனன் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். மாநில செயற்குழு உறுப்பினர் என்.பெரியசாமி நிறைவுரையாற்றினார்.

மாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஏரி குளங்களில் குடிமராமத்து பணிகளை முறைகேடின்றி செயல்படுத்த வேண்டும்,

திருவள்ளூர் மாவட்டத்தில் வீடில்லாத அனைவருக்கும் இலவச வீட்டு மனையும், பட்டாவும் வழங்கிட வேண்டும்

தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை 150 நாட்களாக உயர்த்த வேண்டும்.

பொன்னேரி, கும்முடிப்பூண்டி தொகுதிகளை இணைத்து பொன்னேரி தனி மாவட்டமாக அறிவித்திட வேண்டும்.

மீஞ்சூர் இரயில்வே மேம்பாலத்தை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீஞ்சூர் ஒன்றியத்தில் செயல்படும் மத்திய அரசு நிறுவனங்கள், தனியார் தொழிற்சாலைகளில் உள்ளூர் மக்களுக்கு 100% வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தி ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும்.

திருவள்ளூர் மாவட்டம் முழுவதும் மழை காலங்களில் உபரிநீர் வெளியேற்ற பழைய கால்வாய்களை சீரமைக்க வேண்டும்.

மீஞ்சூர் பஜாரில் கிடப்பில் போடப்பட்ட பொதுக் கழிப்பிட கோரிக்கைளை உடனே நிறைவேற்றிட வேண்டும்.

60 வயதான ஆண்கள் அனைவருக்கும் அரசு பேருந்தில் இலவச பயணத்திற்கு திட்டமிட வேண்டும்.

முதியோர், விதவை. ஆதரவற்றோர் உதவித்தொகையை ரூ. 1000/ த்திலிருந்து ரூ.3,000/ ஆக உயர்த்தி வழங்க வேண்டும்.

கும்முடிப்பூண்டி தாலுக்காவில் அரசு கலைக் கல்லூரி உருவாக்க வேண்டும்.

கும்முடிப்பூண்டியில் நச்சுக் கழிவுகளை உருவாக்கும் வேஸ்ட் கம்பெனியை தடை செய்ய வேண்டும்.

வங்காள விரிகுடாவில் மீஞ்சூர்–காட்டுப்பள்ளியை அதானி கார்பரேட் கம்பெனிக்கு விற்பதை கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# சங்கே முழங்கு!



# தொடரும் லாக்கப் மரணம்

## களத்தில் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம்



சென்னை கொடுங்கையூர் காவல் நிலையத்தில் அப்பு என்கிற ராஜசேகரன் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு காவல்நிலையத்தில் மரணம் அடைந்த தகவல் அறிந்து தோழர்கள் குமரேசன், கோவிந்தராஜ் கிருஷ்ணன் இவர்களோடு நாம் களத்தில் இறங்கினோம். ராஜசேகரன் வீடு திருவள்ளூர் மாவட்டம் அலமாதி, ஆட்டோ ஓட்டுவதும் சிறு கூலி வேலைகள் செய்வதும் இவர் தொழில், போலீஸ்காரர்களுக்கு முக்கியமான பல உதவிகளை இவர் செய்து வந்ததாகவும், சில உண்மைகளை வெளியிட்டால் தன் உயிருக்கு போலீஸ்காரர்கள் ஆபத்து என்றும் அவர் சகோதரி அம்முவிடம் ஏற்கனவே கூறியிருந்ததாக அம்மு கூறினார்.

சம்பவத்தன்று காலை அவரது நண்பர் கலையரசன் தொலைபேசியில் அழைக்க அவரது வீட்டுக்கு சென்ற ராஜசேகரனை அங்கேயே வைத்து காவல்துறை கைது செய்து அழைத்துச் செல்கிறது.

மாலையில் காவல்நிலையத்தில் ராஜசேகரன் மரணம் என்று தொலைக்காட்சி செய்தியை பார்த்துதான் குடும்பத்தினர் தெரிந்து கொள்கின்றனர்.

காவலர்கள் அடித்து கொன்று விட்டதாக குடும்பத்தினர் புகார் தெரிவித்தார்கள். அவரை கைது செய்தது, காவல் நிலையத்தில் அவர் இறந்தது, அவருக்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க முயற்சித்தது என எதனையும் போலீஸ்காரர்கள் குடும்பத்தாருக்கு தெரிவிக்கவில்லை. காரணம் அவர் ஒரு விளிம்பு நிலை தலித். காவல்துறை சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கத்தின் சார்பில் ஆசீர்வாதம் அவர்களோடு நாமும் இணைந்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்.

கொலை வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

எஸ்.சி./எஸ்.டி. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்து மனித உரிமை ஆணையம் நீதிமன்றம் என பல போராட்டங்களுக்குப் பின் நீதிமன்ற உத்தரவுப்படி பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு காவல்துறை பாதுகாப்பும், பினக்கூறாய்வு அறிக்கையும் வீடியோ பதிவும் பெற்றோருக்கு வழங்கப்பட்டது.

ஆனால் இறப்பு அறிக்கையில் அவர் எஸ்சி அல்ல நாயக்கர் என்று பதிவு செய்து மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது.

அதை மாற்றி தரக்கோரி நாம் போலீஸ்காரர்களோடு வாக்குவாதம் செய்து மீண்டும் நீதிமன்றம் சென்று பின் இறப்பு அறிக்கையில் சாதியை மாற்றித் தருகிறேன் என்ற நீதிபதியின் உத்திரவாதத்திற்கு இணங்க பிணம் அடக்கம் செய்யப்பட்டது. போராட்டம் தொடரும்.

– வழக்கறிஞர் கீ.சு.குமார், மாநிலச் செயலாளர்
ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம்

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட மாநாடுகள்




## சேலம் மாவட்ட 24வது மாநாடு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட 24வது மாநாடு ஜூன் 26 அன்று செம்படை பேரணியுடன் துவங்கியது. மாநில துணைச்செயலாளர் கே.சுப்பராயன் மகாகவி பாரதியார் சிலைக்கு மாலை அணிவித்து செந்தொண்டர்களின் மரியாதையை ஏற்றுக் கொண்டார். பேரணியை மூத்த தோழர் கு.சிதம்பரம் துவக்கி வைத்தார். இளம் செந்தொண்டர்கள் 24 பேர் செங்கொடியுடன் முன்னே செல்ல அதனை தொடர்ந்து 208 செந்தொண்டர்கள் அணிவகுத்து வந்தனர். காமநாயக்கன்பட்டி பூபாலன் வழி நடத்தினார். அதனைத் தொடர்ந்து 300 பெண்கள் சிவப்பு சேலை அணிந்து அணிவகுக்க செஞ்சட்டை அணிந்த தோழர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அவர்களை பின்தொடர்ந்தனர். ஊர்வலத்திற்கு ப.பரமசிவம், கே.வி.ராஜேந்திரன், பழ.ஜீவானந்தம், சங்கீதா பாலதண்டாயுதம் தலைமை ஏற்றனர். பேரணி கோட்டை மைதானத்தை அடைந்தது. மாவட்ட செயலாளர் ஏ.மோகன் தலைமையில் செம்படை தளபதி தா.பாண்டியன் நினைவு மேடையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

நங்கவள்ளியில் இருந்து எடுத்து வரப்பட்ட சோரகை தியாகி பெருமாள் நினைவு ஜோதியை மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் டி.வி.கருணைதாஸ், அமரர் பி.அர்த்தனாரி வாத்தியார் நினைவு ஜோதியை மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ஆர்.அய்யனார் பெற்றுக் கொண்டனர். வரவேற்புக்குழு தலைவர் எம்.ராமன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

என்.கே.செல்வராஜ் (வி.ச.மாவட்ட செயலாளர்), எஸ்.தனக்கோட்டி (விதொச மாவட்ட செயலாளர், ஆர்.ரமேஷ் (இளைஞர் மன்ற மாவட்ட செயலாளர்), பா.தினேஷ் (மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர்) முன்னிலை வகித்தனர்.

ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் ஆ.முனுசாமி, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் ஜே.கனியன் பூங்குன்றன் ஆகியோர் தீர்மானங்களை விளக்கி பேசினர். மாவட்ட தலைவர்கள் மற்றும் இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் க.பாரதி ஆகியோர் பேசிய பின் மாநில துணைச் செயலாளர் கே.சுப்பராயன் சிறப்புரையாற்றினார். வரவேற்புக்குழு பொருளாளர் ஏ.கந்தன் நன்றியுரையுடன் பொதுக்கூட்டம் நிறைவு பெற்றது.

ஜூன் 27 அன்று பிரதிநிதிகள் மாநாடு கே.ஏ.கோவிந்தசாமி எஸ்.ஆர்.பெருமாள் ஏ.நடேசன் ஆர்.பி.ராமசாமி நினைவு அரங்கில் (ஸ்டோக்ஸ் ஹாலில்) துவங்கியது. எம்.ராமன், எம்.முனுசாமி, எஸ்.கவிதா செல்லப்பன் தலைமை வகித்தனர். சென்ற மாநாடு நடைபெற்ற நங்கவள்ளியில் இருந்து எடுத்து வரப்பட்ட செங்கொடியினை பெற்று ஏ.எஸ்.சீனிவாசன், ஏ.ஆறுமுகம், ஏ.விமலன் நினைவு வாயிலில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கே.ஏ.வேணுகோபால் ஏற்றி வைத்தார். அஞ்சலி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநாட்டை துவக்கி வைத்து, மாநில துணைச்செயலாளர் கே.சுப்பராயன் பேசினார். வேலை அறிக்கையை மாவட்ட செயலாளர் ஏ.மோகன் முன்வைத்து பேசினார். தணிக்கை குழு அறிக்கையை கன்வீனர் ஏ.மாதையன் படித்தார்.

மாநாட்டில் 47 பேர் கொண்ட மாவட்ட குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்ட செயலாளராக ஏ.மோகன் தேர்வு செய்யப்பட்டார்.

பென்னாகரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ந.நஞ்சப்பன் மாநாட்டை வாழ்த்தி பேசினார். பெருந்துறை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.பெரியசாமி மாநாட்டை நிறைவு செய்து பேசினார். டி.கண்ணன் நன்றி கூறினார்.

சேலம் மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் அனைவருக்கும் தினசரி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சேலம் மாநகரில் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி மக்களை காக்க வேண்டும்.

பாதாள சாக்கடை திட்டம், ஸ்மார்ட் சிட்டி திட்ட பணிகள் ஆமை வேகத்தில் நடக்கிறது. துரிதப்படுத்தி முடிக்க வேண்டும். முள்ளுவாடி ரயில்வே மேம்பால பணிகள் துவக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. பணி முடிவடையும் அறிவிப்புகள் வருகின்றனவேயொழிய பணிகள் முடிக்கப்படவில்லை. எனவே தற்காலிகமாவது மாநகரம் முழுவதும் சாலைகளை சீர்படுத்த வேண்டும்.

சேலத்திலிருந்து உளுந்தூர்பேட்டை வரை தேசிய நெடுஞ் சாலை முழுமையாக 4 வழிச்சாலையாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். சேலம் 5 ரோட்டிலிருந்து அஸ்தம்பட்டி செல்லும் சாலையில் அமைத்துள்ளது போல கொண்டலாம்பட்டி பைபாசில் இருந்து சீலநாயக்கன்பட்டி பைபாஸ் வரை மேம்பாலம் அமைக்க வேண்டும். எருமாபாளையம், சன்னியாசிகுண்டு ஆகிய இடங்களில் மேம்பாலம் அமைக்க வேண்டும். சேலம் – பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் முனியப்பன் கோயிலில் இருந்து டால்மியா போர்டு வரை மேம்பாலம் அமைக்க வேண்டும். சேலம் இரும்பாலை ரோட்டில் புது ரோடு அருகே ரவுண்டானா அமைக்க வேண்டும்.

அயோத்தியாபட்டணம் ஊராட்சி ஒன்றியம் ஆலடிப்பட்டு கிராமத்தில் புங்கன்சோலை முதல் கோம்பூர் வரை 4 கிலோமீட்டர் சாலை அமைத்து தர வேண்டும்.

பெங்களூரில் இருந்து சேலம் வழியாக காரைக்கால் வரை இயக்கப்பட்டு வந்த பயணிகள் ரயில் கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்டது. அந்த ரயிலை மீண்டும் இயக்க வேண்டும். சேலத்தில் இருந்து மதுரைக்கு ரயில் இயக்கப்பட வேண்டும். சேலம்–எக்மோர் ரயில் வட்ட தலைநகரான பெத்தநாயக்கன்பாளையத்தில் இரு மார்க்கத்திலும் நின்று செல்ல வேண்டும். அயோத்தியாபட்டணத்தில் ரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும். சேலம் கரூர் ரயில் பாதையில் ஜாரி கொண்டலாம்பட்டிக்கும்தம்மநாயக்கன்பட்டிக்கும் இடையே ஏதாவது ஒரு இடத்தில் ரயில் நிலையம் அமைக்க வேண்டும். மேட்டூர் அணை முதல் ஆத்தூர் வரை பயணிகள் ரயில் விட வேண்டும்.

சேலம் கொண்டலாம்பட்டியில் உள்ள சௌடேஸ்வரி கல்லூரி இருபாலர் கல்லூரியாக செயல்பட்டு வந்தது. இக்கல்லூரியை பெண்கள் கல்லூரியாக மாற்றும் நடவடிக்கையை கைவிட வேண்டும்.

ஆத்தூர் பகுதியில் வேளாண் கல்லூரி அமைக்க வேண்டும். தாரமங்கலம், மேச்சேரி, பனைமரத்துப்பட்டிமல்லூர் பகுதி, பழங்குடி மக்களும் பயன்பெறும் வகையில் பெத்தநாயக்கன்பாளையம் தாலுகா ஆகிய இடங்களில் இருபாலர் அரசு கலைக்கல்லூரி அமைக்க வேண்டும்.

விவசாய விளைபொருட்களை கொண்டு வரும் வாகனங்களுக்கு சுங்க கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டும்.

மக்கள் அதிகம் கூடும் கொண்டலாம்பட்டி பைபாஸ், சீலநாயக்கன்பட்டி பைபாஸ், டி.எம்.எஸ்.மணல் மார்க்கெட், கோட்டை மைதானம், குரங்குசாவடி, தேர்முட்டி, முனியப்பன் கோயில், 4 ரோடு போன்ற பகுதிகளிலும் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான கழிப்பிடங்கள் கட்ட வேண்டும். மாநகராட்சி இதில் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

மாவட்டம் முழுவதும் அனைத்து ஏரிகளிலும் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றவும், தூர்வாரவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேச்சேரியை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா உருவாக்க வேண்டும். ஆத்தூர் நகராட்சி அம்பேத்கர் நகரில் நகராட்சி குப்பை கிடங்கு பல ஆண்டுகளாக இருந்து வந்தது. குப்பைக் கிடங்கை அகற்றி அந்த இடத்தில் விளையாட்டு மையம் அமைக்க வேண்டும்.

கல் குவாரிகள் அமைத்து கற்கள் வெட்டி எடுக்கப்படுகிறது. இதற்காக தோண்டப்படும் குழிகளுக்கு அதிகபட்சமாக எத்தனை அடி ஆழம் வெட்டலாம் என்ற அளவு நிர்ணயம் செய்ய வேண்டும். பாரஸ்ட்டில் இருந்து 1 மைலுக்கு அப்பால் தான் குவாரிகள் அமைக்க வேண்டும். கற்கள் வெட்டி எடுத்த நிலையில் அவற்றை மண்ணைக் கொட்டி மூடி விட வேண்டும். இவற்றை சட்டமாக நிறைவேற்ற வேண்டும்.

ஆத்தூர் அறிஞர் அண்ணா கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் (எண்.எஸ்.1564) சார்பாக அடுக்குமாடி குடியிருப்பு திட்டம் 2010ல் துவக்கப்பட்டது. ஆனால் இதுவரை திட்டம் முழுமை பெறவில்லை. எனவே மாநில அரசே நேரடியாக கவனம் செலுத்தி திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

சேலம் மாநகராட்சியில் உள்ள தூய்மை பணியாளர்களுக்கு முகக்கவசம், கையுறைகள், காலணிகள், சீருடைகள் மற்றும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும்.

அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் உள்ள சீர்கேடுகளை சீர்படுத்திடவும், நோயாளிகளுக்கு முறையான சிகிச்சை அளித்திடவும் வேண்டும்.

மாவட்டத்தின் மையப்பகுதியில் வாசனை திரவிய தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



- சி.மகேந்திரன்

# தோழர் எம்.கே.ரங்க

**சில நேரங்களில் எதிர்பாராதவை நிகழ்ந்து விடுகின்றன. இந்த நிகழ்வும் அப்படித்தான். 48 ஆண்டுகளுக்கு முந்தைய பத்திரிக்கைகளில் வெளிவந்த தொகுப்பு ஒன்றைப் பார்க்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்து. அது ஒருவரின் மரணத்திற்காக வெளியிடப்பட வேண்டிய இரங்கற் செய்திகள் அவை. அவர் பிறந்த நூற்றாண்டு இந்த ஆண்டு என்பதை அறிந்த போது, மனம் பெரிதும் உற்சாகம் கொண்டது. அவர் தான் சிறந்த கம்யூனிஸ்ட்டாகவும், தொழிற்சங்கத் தலைவராகவும் செயல்பட்ட தோழர் எம்.கே. ரங்கநாதன் அவர்கள்.**

காலம் வேகமாக விரைந்து சென்று எல்லாவற்றையும் மறக்க வைத்தாலும் இந்த பத்திரிக்கை செய்திகள், எழுத்துகளாய் நின்று அவரை நமக்கு ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறது.

தோழர் எம்.கே.ரங்கநாதன் அவர்களின் ஒரே மகன்தான், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு அலுவலகத்தில் இன்று அலுவலகச் செயலாராகப் பணியாற்றி வரும் தோழர். ரகுநாதன் அவர்கள். கடந்த நாற்பது ஆண்டுகளாக இவர் கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார். நான் பாலன் இல்லம் வந்து சேர்ந்து 43 ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்டது. எனக்கும் அவருக்கும் ஆரம்ப காலத்திலிருந்தே நெருங்கிய தோழமை உறவு இருந்த போதிலும், அவர் தன் தந்தையைப் பற்றி எதுவுமே என்னிடம் கூறியதில்லை. எதிர் பாராமல் அவரிடமிருந்த ஜனசக்தி மற்றும் பல்வேறு தலைவர்கள் வெளியிட்ட மரண அஞ்சலி செய்திகளைப் பார்க்க நேர்ந்தது. அந்த ஞாபகங்கங்ளின் விளைவு தான் இந்தக் கட்டுரை.

**ரகுவின் தந்தை, எம்.கே.ரங்கநாதன் தமிழகத்தில் தலை மறைவு காலத்தில், கம்யூனிஸ்டாக செயல்பட்டவர். தொழிற்சங்க தலைவர்களில் ஒருவர். தமிழ்நாடு ஏஐடியுசி மாநிலச் செயலாளராக செயல்பட்டிருக்கிறார். சில தலைவர்கள் கண்ணுக்கு தெரிவார்கள்; பலர் கண்ணுக்குத் தெரிவதில்லை. அவர்கள் மக்களின் அடி ஆழத்தில் நின்று தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாமல் பல ஆண்டுகள் பணி புரிவார்கள். அவர்களின் நேர்மையும் அர்ப்பணிப்பும், அருகே இருக்கின்றவர்களை, கூடுதல் அர்ப்பணிப்பு உள்ளவர்களாக மாற்றி விடும். எம்.கே.ரங்கநாதன் அவர்கள் இவ்வாறு அர்ப்பணிப்போடு, கண்ணுக்குத் தெரியாமல் உழைத்த தலைவர்களில் ஒருவர் என்பதை அந்தக் குறிப்புகளிலிருந்து புரிந்து கொண்டேன். காலம் மனிதனைக் கொன்று விடும். ஆனால், அர்ப்பணிப்புடன் அமைந்த வாழ்க்கை காலத்தை வென்றுவிடும் என்பது ரங்கநாதன் அவர்களைப் பொறுத்த வரை உண்மையாகி விட்டது.**

ஜனசக்தியில் வெளிவந்த இரங்கல் செய்தி கூர்ந்து கவனிக் கத்தக்கதாக இருக்கிறது. அவரது தியாகத்தையும், நேர்மையான செயல்பாட்டையும், புகழ்ந்து கூறும் ஜனசக்தி அவரை டிராம்வே தொழிலாளர்கள் போராட்டத்தில் ரஷ்ய நாட்டின் ஸ்டாலினாக கம்பீரமாக வாழ்ந்து காவியம் படைத்தவர் என்று குறிப்பிட்டுள்ளது.

இரங்கல் கூட்டம் 1974 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதி மாலை 4 மணிக்கு சென்னை ஆவடியில் நடைபெற்றதாகவும், அதில் அன்றைய மாநில துணைச் செயலாளர் ப. மாணிக்கம், கே.டி.கே. தங்கமணி, தா.பாண்டின், எம்.வி.சுந்தரம், ஏ.சீனி வாசன், கே.எம்.சுந்தரம், ஆகியோரும், தி.மு.க, அ.தி.மு.க, காங்கிரஸ் ஆகிய கட்சிகளிலிருந்து தலைவர்களும் இரங்கல்



உரை நிகழ்த்தியதாகவும் ஜனசக்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றைய மாநிலச் செயலாளர் எம்.கல்யாணசுந்தரம் அவர்கள் மாஸ்கோ சென்றிருந்தார். அவரால் இரங்கல் செய்தி மட்டுமே அனுப்ப முடிந்துள்ளது.

இவர் மரணம் இவரோடு பணியாற்றிய தோழர்களைப் பெரிதும் பாதித்துள்ளது. தனக்கென வாழாது தொழிலாளி வர்க்கத்திற்கு தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்ட ரங்க நாதன் அவர்களுக்கு தொழிலாளர்களால் குடும்ப நிதி திரட்டும் இயக்கமும் நடைபெற்றுள்ளது. துறைமுகத் தொழிலாளர் இயக்கத்தின் மாபெரும் தலைவர் ஏ.எஸ்.கே. அவர்கள் குடும்ப



- அம்பத்தூர் துரைசாமி

# துறைமுக தொழிலாளர்களின்

**1946 ஆம் ஆண்டு சென்னை துறைமுகத் தொழிலாளர்களின் நிலை அந்தோ பரிதாபம், உடல் முழுவதும் கரி தூசி படிந்திருக்க, கிழிந்த ஆடைகளும் பரட்டைத் தலைகளுமாக கேட் முன்னர் ஒரு கூட்டம் காத்துக்கிடக்கும் இவர்கள் கரிகப்பல் தொழிலாளர்கள்.**

சிவப்பு நிற பவுடர் மேனி முழுவதும் பூசியதைப் போன்று உடல் முழுவதும் படர்ந்திருக்க மற்றொரு பக்கம் ஒரு கூட்டம் காத்துக்கிடக்கும். இவர்கள் கல் கரை தொழிலாளர்கள்.

யானைத்தோல்போல் தடித்து, பட்டை விட்ட வெடிப்பு, இடுப் புக்கு மேலும் கழுத்துக்கு மேலும் கனத்து இருக்க மூட்டை சுமந்தே பழக்கப்பட்டவர்கள் நாங்கள் என்பதை காட்ட இடுப்பில் சொருகிய ஊக்குடன் உட்கார்ந்து கிடக்கும் கூட்டம் பிரிதொரு பக்கம். இவர்கள் கப்பல் தொழிலாளர்கள்.

இவர்கள் வேறு பக்கத்திலே அமர்ந்து வேறு வேலைகள் செய்பவர்கள்.ஆனாலும் துறைமுக காண்ட்ராக்டரகளின் செக்குகளில் பூட்டப்பட்டு அவர்களின் அடியாட்களான மேஸ் திரிகள் என்ற எஜமானர்களால் சுண்டி இழுக்கப் பட்டு செக்கு மாடுகள் போல் உழைத்து உருக்குலைந்து போனவர்கள்.

எந்த நாளில் கப்பல் வரும் அதில் வேலைக்கு செல்ல வீசி எறியப்படும் டோக்கன்களை பொறுக்கி எடுத்துக் கொண்டு தன் பலத்தை நிரூபித்து வேலைக்குச் செல்வது தான் அன்றைய நிலை.

**வேலை கிடைத்து கடினமாக உழைத்தாலும் அவர்களுக்கு கிடைக்கும் கூலி எட்டணா அல்லது பத்தணா. சங்கம் வைத்து போராட நினைத்தாலே அது அரசுக்கும் முதலாளிகளுக்கும் தெரிந்து விட்டால் கைது, அப்புறம் ஆறுமாத சிறை தண்டனைதான்.**

அக்காலத்தில் சென்னை பிராட்வேயில் உள்ள 2/65 எண்ணுள்ள அலுவலகம் சென்னை மாகாண தொழிற்சங்க காங்கிரஸ், மதராஸ் பிரஸ் லேபர் யூனியன் ஆகிய அமைப்புகளின் அலுவலகம் ஆகும். அந்த வழியே போவோர் வருவோர் அந்த அலுவலகத்தை சுட்டிக்காட்டி இது 'ஸ்ட்ரைக் ஆபீஸ் 'என்று கூறுவதுண்டு.

இந்த அலுவலகத்திற்கு 1946 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் துறைமுக தொழிலாளர்களான ராமசாமி, பேரையா நாகையா ஆகியோர் சென்றனர்.

அலுவலகத்தின் முதல் மாடியில் தலைவர்கள் எஸ் வி காட்டே, ப ஜீவானந்தம், ஏ.எஸ்.கே.ஐயங்கார், கே முருகேசன் ஆகியோர் இருந்தனர். தொழிலாளர்கள் மூன்று பேரும் தலைவர்களுக்கு வணக்கம் கூறினர். துறைமுகத்தில் மூன்றாயிரம் ஸ்டீவ் வேர் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்திருப்பதாகவும், தொழிலாளர்கள் கூட்டமாக கூடி இருப்பதாகவும், அவர்களுக்கு வழிகாட்டி போராட்டத்திற்கு தலைமை தாங்கி வழி நடத்த வேண்டுமென கேட்டுக்கொண்டனர்.

தோழர் ஏ எஸ் கே ,அவர்களிடம் கோரிக்கைகள் பற்றி விபரம் கேட்டறிந்தார். பின்னர் அவர்களுடன் ஏ எஸ் கே, ஜீவா, கே.முருகேசன் ஆகியோர் ராயபுரம் நோக்கி சென்றனர். கூட்டத்தில் பேசி தொழிலாளர்களை உற்சாகப்படுத்தினர். தொழிலாளர்கள் தலைவர்கள் காட்டிய வழியில் நடக்க உறுதிபூண்டனர்.



தோழர் ஏ எஸ் கே தலைமையில் 5 தொழிலாளர் பிரதிநிதிகள் துறைமுக நிர்வாகிகளுடன் பேச்சு நடத்தினர். கோரிக்கைகளை ஏற்க முடியாது என நிர்வாகமும் முதலாளிகளும் மறுத்தனர். ராணுவத்தை வைத்து போராட்டத்தை நசுக்க முயற்சித்தனர். ஆனால் படுதோல்வி கண்டனர்.



# அறப்பண்பு கோண்ட தமிழனுக்கு அடிமைப்பண்ட

# ஆரிய எதிர்ப்பும் ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்பும் தமிழர்களின் உறுதி

# நாதன் நூற்றாண்டு

நிதியாக 6422 ரூபாய் வழங்கியுள்ளார்.

இந்த நிதி அளிப்பு கூட்டத்தில் உரையாற்றிய உழைக்கும் மக்கள் மாமன்றத்தின் தலைவர் குசேலர் பேசும் போது, பூந்த மல்லியில் விவசாயிகளுக்காகப் பணியாற்றிக் கொண்டிருந்த என்னை சென்னை தொழிலாளர்களிடம் அறிமுகம் செய்து, தொழிற்சங்க இயக்கத்தில் என்னை ஈடுபட வைத்தவர் தோழர் ரங்கநாதன் என்று குறிப்பிட்டுள்ளார்.

தோழர் ரங்கநாதன் அவர்களின் ஆரம்ப கால வாழ்க்கை பல்வேறு தகவல்களைக் கொண்டுள்ளது. இவரது தந்தையார் பெயர் துரைசாமி, தாயார் பெயர் ஜீவரத்தினம்மாள். இவரது மனைவி பெயர் சுகுணாம்மாள். இவர்களுக்கு ஐந்து பெண் மக்கள், ஒரு ஆண் மகன். அந்த ஆண் மகன் தான் ரங்கநாதன். பிள்ளைகளின் கல்விக்காக இவர்கள் குடும்பத்துடன் வேலூர் மாவட்டம் ஆற்காட்டிலிருந்து சென்னைக்கு குடியேறுகிறார்கள்.

ஆற்காட்டில் இவர்களது குடும்பம் வசதியான வணிகக் குடும்பம். சென்னையில் குடியேறிய பின்னர் திருவல்லிக்கேணியில் வியாபாரத்தைத் தொடங்கினர். பிள்ளைகள் அனைவரும் திருவல்லிக்கேணியில் புகழ் பெற்ற இந்துப் பள்ளியில் சேர்க்கப்பட்டார்கள். இதில் ரங்கநாதன் எட்டாம் வகுப்புடன் தனது படிப்பை நிறுத்திக் கொண்டார். அவரது எதிர்கால வாழ்க்கைக்காக சொந்தமாக ஒரு கடையையும் ஆரம்பித்து தந்திருக்கிறார்கள். அதிலும் இவருக்கு விருப்பமில்லை. டிராம்வேயில் நடத்துனராக வேலையும் கிடைக்கிறது. இதன் பின்னர் இவரது புரட்சிகர அரசியல் வாழ்க்கையும் தொடங்குகிறது.

அன்றைய காங்கிரஸ் கட்சிக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில் அமைந்த முரண்பாடுகள் அனைவரும் அறிந்ததுதான். ரங்கநாதன் அவர்களின் தாய், தந்தை இருவருமே தீவிர காங்கிரஸ்காரர்கள். இவர் கம்யூனிஸ்ட் கட்சி அரசியலில் ஈடுபடுவதில் வெறுப்புற்று இருந்தார்கள். அடக்குமுறை, சிறைவாழ்க்கை ஆகியவை அன்றைய கம்யூனிஸ்ட்கள் மிகவும் சுலபமாகப் பெற்றுக் கொண்ட பரிசு. இதனால் இவருக்கும் பெற்றோருக்கும் இடையே சண்டை நிகழ்ந்து கொண்டேயிருந்தது. அதிலும் கட்சி செயல்பாட்டை நிறுத்திக் கொள்ளாமல் இவர், வீட்டை விட்டு வெளியேறி தனது கட்சி மீதான உறுதிப்பாட்டை நிரூப்பித்திருக்கிறார்.

அன்றைய கிழக்கிந்திய கம்பெனியான மெட்ராஸ் எலெக்ட்ரிக் டிராம்வே (**Madras Electric Tramway Ltd**) 1892 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சென்னையில் டிராம்கள் ஓட தொடங்கிய தினம் மே 7, 1895. இந்த டிராம் 1904 ஆம் ஆண்டில் 100 க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் சென்னையின் பல்வேறு குடியிருப்பு பகுதிகளையும், புறநகர் பகுதிகளையும் இணைக்கும் பணியை செய்து கொண்டிருந்தது. டிராம்வே தொழிலாளர்கள் ஒரு சமூகமாகவே உருப்பெற்றார்கள். சென்னை மாகாணம் அப்போது ஆந்திரா, கேரளா, கர்நாடகா, ஒரிசா ஆகியவற்றின் பல்வேறு பகுதிகளை உள்ளடக்கிய மாநிலம். அந்த மாகாணத்தின் தலைநகரான சென்னையில் டிராம்வே தொழிலாளர்களின் அரசியல் செல்வாக்கு கூடிக் கொண்டே சென்றது. அத்தகைய

**ட்ராம்வே தொழிலாளர்களின் சங்கத்தில் மிக உயர்ந்த அரசியல் பயிற்சியை ரங்கநாதன் பெற்றிருந்தார். இதில் இவருக்குள் ஒரு சோகமும் இருந்தது. தொழிற்சங்க செயல்பாட்டில் இவர் உச்சத்திலிருந்த போது தான் டிராம்வே மூடப்பட்டது.**

**டிராம்வே மூடப்பட்டது இவரை வெகுவாக பாதித்திருந்தது. டிராம்வே பணியில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ரயில்வே பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். இவருக்கும் அந்த வாய்ப்பு கிடைத்தது. ஆனால், இவரோ பணிக்கு செல்ல மறுத்து விட்டார். ஏ.ஐ.டி.யூ.சி. யில் தன்னை முழுநேர ஊழியராக்கிக் கொண்டார். வேலை இழந்த டிராம்வே தொழிலாளர்களுக்கான உரிமை தொகையை பல ஆண்டுகள் தொடர்ந்து போராடிப் பெற்றுத் தந்ததார் என்று கூறுகிறார்கள்.**

டிராம்வே தொழிலாளர் சங்கத்திலும், பின்னர் ஏ.ஐ.டி.யூ.சி. யின் மாநில மையத்தில் செயலாளராகப் பணியாற்றிய காலத்திலும் கட்சி தலைவர்களிடமும், தொழிற்சங்கத் தலைவர்களிடமும் ஆழமான தொடர்பைக் கொண்டிருந்தார். தோழர் டாங்கே அவர்களுடன் நெருக்கமாக இருந்ததாகக் கூறப்படுகிறது. இவரது அர்ப்பணிப்பு மிக்க செயல்பாட்டை டாங்கே எப்பொழுதுமே ஊக்கப்படுத்தி வந்திருப்பதாகவும் தெரிகிறது.

சிந்தனை சிற்பி சிங்காரவேலர், சக்கரைச் செட்டியார் போன்றவர்கள் டிராம்வே சங்கத்தின் நிர்வாகிகளாக இருந்த காரணத்தால் அவர்களோடு நெருங்கிய தோழமையைக் கொண்டிருந்தார்.

சிங்காரவேலரை சந்திக்க வரும் தலைவர்கள் இவரை அவரது இல்லத்திற்கு அழைத்து செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

சக்கரைச் செட்டியார் இவரது அர்ப்பணிப்பு மிக்க செயல்பட்டில் மதிப்பு கொண்டிருந்ததாக தெரிகிறது. அவரது மணிவிழாவின் (60 வயது) போது அறுபது பொற்காசுகளை தொழிலாளர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

அதில் ஒரு பொற்காசை ரங்கநாதன் அவர்களுக்கு சக்கரைச் செட்டியார் அன்போடு அளித்திருக்கிறார்.

அவரது வாழ்நாளில் அவர் பெரிதும் மகிழ்ச்சியடைந்த காலம் ஒன்று உண்டு. அவர் மிகவும் நேசித்த சோவியத் நாட்டிற்கு செல்லும் வாய்ப்பைப் பெற்றார். அவர் பங்குபெற்ற கூட்டம் ஒன்றில் சோவியத் தலைவர்களுடன் அமர்ந்திருக்கும் படம் ஒன்று அன்றைய ஜனசக்தியில் வெளிவந்துள்ளது.

நூறு வயதை நிறைவு செய்து, மரணமுற்ற மூத்த கம்யூனிஸ்ட் தலைவர் சி.சுப்ரமணியம் அவர்கள் உயர்கல்வி கற்க லண்டன் சென்றவர்.

அங்கு கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இணைந்து இந்தியா திரும்பியவர். அவர் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் செயலாளர். இறுதி நாட்களில் அவர் மாநிலத் தலைமை அலுவலகத்தில் தங்கியிருந்தபோது, ரங்கநாதன் துணிச்சல்மிக்க புரட்சிக்காரர் என்று குறிப்பிட்டதை நான் கேட்டிருக்கிறேன்.

இவ்வாறாக, ஒரு காலத்தில் தொழற்சங்க உரிமைகளைப் பாதுகாக்கவும், கம்யூனிச லட்சியத்தை ஈடேற்ற தன் வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்த தலைவர்களில் தோழர் ரங்கநாதன் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். அவரது பிறந்த நூற்றாண்டில் அவரது போர்க்குணமும், அர்ப்பணிப்பும் நம்மை ஈர்க்கிறது. காலந்தோறும் கம்யூனிஸ்ட்கள் சமுதாய மாற்றத்திற்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்துக் கொள்பவர்கள் என்ற வரலாற்றை நமக்கு உணர்த்துகிறது. அவர் புகழ் பாடுவோமாக !

# ள உயிர் நாடி தோழர் ஏ.எஸ்.கே.

இறுதியில் தொழிலாளர் கோரிக்கை ஏற்கப்பட்டு 6.4 .1946ல் ஒப்பந்தம் ஏற்பட்டது வேலைநிறுத்தம் வெற்றி பெறச் செய்த பெருமை ஏ எஸ் கே அவர்களையே சாரும்.

தொழிலாளர்கள் முடிவு செய்திருந்த படி மதராஸ் ஹார்பர் தொழிலாளர் சங்கம் சட்டப்படி09.07.1946இல் பதிவு செய்யப்பட்டது.

போராட்டக் களத்தில் பிறந்த இச்சங்கத்தின் தலைவராக ப.ஜீவானந்தம், பொதுச் செயலாளராக ஏ.எஸ்.கே. தேர்ந்தெடுக் கப்பட்டனர்.

துறைமுக தொழிலாளர்களுக்கு சங்கம் அமைத்து அவர்களது வாழ்வில் ஒளிவிட செய்த ‘‘துறைமுக தொழிலாளர்களின் உயிர் நாடி ஏ எஸ் கே ‘‘அவர்கள்தான்.

துறைமுகத் தொழிலாளர்களின் நலனுக்காக கூட்டுறவு சொசைட்டி உருவாக்கினார். தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பயில நல்ல திட்டங்களை உருவாக்கித் தந்தவர் ஏ.எஸ். கே. அவர்கள்.

### யார் இந்த ஏ.எஸ்.கே.?

இன்றைய தெலுங்கானா மாநிலம் அன்றைய நிஜாம் ஆட்சிக்குட்பட்ட ஐதராபாத்தில் 13. 06.1906–ல் பிறந்தவர்தான் ஏ.எஸ்.கே. ஐயங்கார். படிப்பில் சிறந்து விளங்கி எம்.ஏ. பட்டதாரி ஆனார். இவரது சகோதரர் ஏ.எஸ்.ஆர்.சாரி பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். உச்சநீதிமன்றத்தில் கொடிகட்டிப் பறந்த கம்யூனிஸ்ட் வழக்கறிஞர் ஆவார். இவர்களது பூர்வீகம் வட ஆற்காடு மாவட்டம் ஆமூர் கிராமம். இவரது தாய்மொழி தமிழ் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏ எஸ் கே என்று சொன்னாலே நினைவுக்கு வருவது அவரது தோற்றம். வெள்ளை பைஜாமா, வெள்ளை ஜிப்பா, வெஸ்ட் கோட், வாயில் புகை பிடிக்கும் பைப் என மிடுக்கான தோற்றம்.

1935 ஆம் ஆண்டு தேச விடுதலை இயக்கத்தில் ஈடுபட சென்னைக்கு வந்தார் ஏ எஸ் கே. சிந்தனைச் சிற்பி ம. சிங்கார வேலரை சந்திக்கிறார். அவரால் அரவணைக்க பட்டு, அமீர் ஐதர் கான், சி.எஸ்.சுப்ரமணியம், நாகை கே. முருகேசன் ஆகியோருடைய தொடர்பு ஏற்படுகிறது. அப்போது பி.ராமமூர்த்தி, ப.ஜீவானந்தம் பாலதண்டாயுதம் இவர்களுடன் சேர்ந்து இரயில் நலத் தொழிற்சங்கம், டிராம்வே தொழிற்சங்கம், சென்னை துறைமுக தொழிலாளர் சங்கம், கள் இறக்குவோர் தொழிற்சங்கம், சென்னை நகரசபை ஊழியர் தொழிற்சங்கம், அச்சுத் தொழிலாளர் சங்கம், பி அண்ட் சி மில் தொழிலாளர் சங்கம், மின்சார ஊழியர் தொழிற்சங்கம் இவற்றில் எல்லாம் ஈடுபட்டு சிறப்பாக பணியாற்றலானார் ஏ.எஸ்.கே.

சிங்காரவேலர் சொன்னார் என்பதற்காகவே திருமணத்தை புறக்கணித்தவர்கள் நிறைய பேர் உண்டு அதில் ஏ.எஸ்.கே. ஐயங்காரும் அடங்குவர்.

பின்னால் தன் பெயருடன் ஒட்டியிருந்த ஐயங்கார் என்பதை களைந்து’ ஏ.எஸ்.கே. ‘என்று தன் பெயரை மாற்றி அரசிதழில் அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு செய்தார்.

அதன் பின்னரும் தந்தை பெரியாருடன் ஏ எஸ் கே யும் பங்கேற்க விருந்த ஒரு பொதுக் கூட்ட சுவரொட்டியில்,

**அவரது பெயர் ஏ.எஸ்.கே. ஐயங்கார் என இருந்தது கண்டு பெரியாரை சந்தித்தபோது, பெயர் மாற்றம் குறித்து வருத்தத்துடன் சொன்ன போது, பெரியார் அவர்கள் ஐயங்கார் என நான் தான் போடச் சொன்னேன். நம்மிடமும் ஒரு பார்ப்பான் இருப்பது நாட்டுக்கு தெரிய வேண்டும் என கூறினார்.**

ஏ.எஸ்.கே. பல மார்க்சிய நூல்களை மொழிபெயர்த்துள்ளார் தங்கம்மா என்ற நாவல் மற்றும் தந்தை பெரியார் அம்பேத்கர் குறித்த நூல்களையும் எழுதியுள்ளார்.

1937 ஆம் ஆண்டில் காங்கிரஸ் தலைவர் ஜவஹர்லால் நேரு 1939ல் சுபாஷ் சந்திர போஸ் ஆகியோர் சென்னை மாநகருக்கு வருகை தந்தபோது தோழர்கள் எஸ்.வி.காட்டே, ஜீவா சி.எஸ்.சுப்பிரமணியம், பி.சீனிவாசராவ், பி. ராமமூர்த்தி, சி.பி.இளங்கோ உள்ளிட்ட தலைவர்கள் முன் கை எடுத்து 2/65 பிராட்வே அலுவலகத்தில் வரவேற்பு கொடுத்து தேநீர் விருந்து அளித்தனர் அதில் பங்கேற்ற நேரு அவர்களும் சுபாஷ் அவர்களும் பேசிய பேச்சுக்கள் குறிப்பிடத் தக்கது.

1958 வது வருடம் துறைமுகத் தொழிலாளர்கள் சவுத்ரி கமிட்டி முடிவுகளை அமுலாக்க வேண்டும் என்று கோரி துறைமுக மெயின் கேட் முன்னர் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அன்றைய சென்னை மாநகர காவல்துறை ஆணையராக இருந்தவர் அருள். ஆர்ப்பாட்டத்தில் யாரோ சிலர் கல்லெறிந்த தாக காரணம் காட்டி போராடும் தொழிலாளர்கள் மீது சுடும் படி அருள் உத்தரவிட்டார்.

காவல்துறை தொழிலாளர்களை மண்ணடி வரை துரத்தித் துரத்தி துப்பாக்கியால் சுட்டனர். துப்பாக்கிச்சூட்டில் ஐந்து தொழிலாளர்களும் ,வகாப் என்ற சிறுவனும் உயிரிழந்தனர். துப்பாக்கி சூட்டை கண்டித்து நகரம் முழுவதும் கடைகள் மூடப்பட்டன. வேலைநிறுத்தம் முழுமையாக நடைபெற்றது.

உயிரிழந்தவர்களின் சவ ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஆவேசத்துடன் கலந்து கொண்டனர். காவல்துறை அருள் தலைமையில் அணிவகுத்தது.

**இரங்கல் கூட்டத்தில் பேசிய ஏ.எஸ்.கே. வீரத்தின் சின்னமாக, உணர்ச்சிப் பொங்க, ‘‘டே அருள் நிராயுதபாணியான தொழிலாளர்களை சுட்டுக் கொன்றது கோழைத்தனம் வேசித்தனம். உனக்கு தைரியமிருந்தால் என்னை சுடு’’ என சட்டையை விலக்கி, மார்பை காட்டிய மாவீரன் ஏ.எஸ்.கே.**

ஏ.எஸ்.கே. 1978 ஜூன் மாதம் 27 அன்று காலமானார். அவரது இறுதி ஊர்வலத்தில் சென்ற ஆயிரமாயிரம் பெண்கள் தங்கள் குழந்தை குட்டிகளுடன் அழுது புலம்பி கொண்டே ‘‘நீ நிம்மதியா கண்ணை மூடிட்டு போறியே, இனிமே எங்களுக்கு யார் இருக்கா ‘‘என்று கதறி அழுத காட்சி பார்த்தவர் நெஞ் சங்களை பதை பதைக்க வைத்தது.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு தொழிற்சங்கங்கள் உருவாவதற்கு உறுதுணையாக இருந்து போராடியவர். வங்கி போன்ற மத்திய சங்கங்களுக்கு வழிகாட்டியவர். துறைமுக தொழிலாளர்களின் விடிவெள்ளி ஏ.எஸ்.கே. நினைவு நாள் ஜூன் 27.

தொடர்புக்கு: **9940480356**


இல்லை
யான நிலை

ஆகஸ்ட்
6, 7, 8, 9 இல்
திருப்பூரில்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
மாநில மாநாடு
அழைக்கிறது



# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைக்கமிட்டி மாநாடுகள்

**நெல்லை மண்டல மாநாடு:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மண்டல மாநாடு பாலன் இல்லத்தில் நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினர் கே.சந்தானம் அரசியல் விளக்க உரை நிகழ்த்தினார். மாவட்ட செயலாளர் எஸ்.காசி விஸ்வநாதன் செ. லட்சுமணன் (மாவட்ட துணைச் செயலாளர்), ஆர்.சடையப்பன் பாளை. மண்டல பொறுப்பாளர், கே.முத்துகிருஷ்ணன் தச்சை மண்டல பொறுப்பாளர், பி.பரமசிவன், கே.எஸ்.பாலு, என்.உலகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். நெல்லை மண்டலம் முழுவதும் ஸ்மார்ட் சிட்டி என்ற பெயரில் சாலைகள் முழுவதும் தோண்டப்பட்டு சரிவர சீரமைக்கப்படாமல் உள்ளது. அதனால் மக்கள் கடும் அவதிக்கு உள்ளாகி உள்ளனர். மேலும் பழைய பேருந்து நிலையம் இடிக்கப்பட்டு வேலைகள் துரிதமாக நடைபெறாமல் இழுத்தடிக்கப்படுகிறது. விரைவில் சீரமைத்து தர வேண்டும். நெல்லை மண்டலம் முழுவதும் குடிநீர் வினியோகம் சீராக கிடைக்கவில்லை. மாதம் முழுவதும் தட்டுப்பாடு இன்றி குடிநீர் கிடைக்க வகை செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நெல்லை மண்டல செயலாளராக எம்.எஸ். பாலகிருஷ்ணன், துணை செயலாளர்களாக கிருஷ்ணன், ஏ.வெடி கண்ட பெருமாள் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**பாளை. ஒன்றியம்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பாளை. ஒன்றிய முதலாவது மாநாட்டில் ஏ.ஐ.டி.யூ.சி. உபதலைவர் ஆர்.ரெங்கன் கட்சிக்கொடி ஏற்றி துவங்கியது.தலைமைக் குழு தோழர்களாக கே.எஸ்.பாலு, எம்.எஸ்.பாலகிருஷ்ணன், ஆறுமுகம் தேர்வு செய்யப்பட்டனர். மாநில செயற்குழு உறுப்பினர் கே.சந்தானம் மாநாட்டை துவக்கி உரை நிகழ்த்தினார். மாவட்டச் செயலாளர் எஸ்.காசி விஸ்வநாதன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ்.வி.கிருஷ்ணன் மற்றும் ஏ.ராமகிருஷ்ணன், மாநிலக்குழு உறுப்பினர் எம்.வேலாயுதம், மாவட்டத் துணைச் செயலாளர் சி.லட்சுமணன், ஏஐடியூசி உபதலைவர் ஆர்.ரெங்கன் மற்றும் பண்பாட்டுக்கிளை மகாலட்சுமி வாழ்த்துரை வழங்கினர்.

நண்பா கே.முத்துகிருஷ்ணன் ஒன்றிய செயலாளராகவும், எம்.நவராஜ், மோசஸ் ஒன்றிய துணைச் செயலாளராகவும், எஸ்.மஹா லட்சுமி ஒன்றிய பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர். மாநிலச்செயலாளர் இரா.முத்தரசன் சிறப்புரை ஆற்றினார். மாவட்டக்குழு உறுப்பினர் என்.உலகநாதன் நன்றியுரை கூறினார். நெல்லை பாளை பகுதிகளில் தோண்டப்பட்ட குழிகளை மூடவேண்டும் நடைபாதை சிறுவியாபாரிகளை தொல்லை செய்வது நிறுத்தப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மேலப்பாளையம் மண்டல மாநாடு:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பாளை மேலப்பாளையம் மண்டல முதலாவது மாநாடு ஆயிரத்தான் கொடி ஏற்றி துவங்கியது. சேக் மைதீன் வரவேற்புரை நிகழ்த்தினார். தலமைக்குழு தோழர்களாக என்.முருகேசன், சி.ஜி.சுரேஷ்பாண்டியன் தேர்வு செய்யப்பட்டனர். வேலை அறிக்கை என்.முருகேசன் வாசித்தார்.மாநிலச்செயற்குழு உறுப்பினர் கே.சந்தானம் துவக்கி வைத்து உரை நிகழ்த்தினார். மாவட்டச் செயலாளர் எஸ்.காசிவிஸ்வநாதன் ஏஐடியூசி உபதலைவர் ஆர்.ரெங்கன்.வாழ்த்திப்பேசினார். மாநிலச்செயலாளர் இரா.முத்தரசன் சிறப்பரை நிகழ்த்தினார்.

சேக்மைதீன் செயலாளராகவும், என்.முருகேசன் துணைச் செயலாள ராகவும், எம்.சரோஜா பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட் டனர். 31வது வார்டில் குப்பைத் தொட்டிகள் அகற்றப்பட்டு பல மாதங்கள் ஆன பின்பும் குப்பைத்தொட்டி இல்லாததால் பொதுமக்கள் சாலையோரம் குப்பையை கொட்டுவதால் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது.உடனடியாக குப்பைத்தொட்டி வைக்கவேண்டும் பீடித்தொழிலாளர்கள் கூலி முறைப்படுத்தப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தச்சநல்லூர் மண்டலம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தச்சநல்லூர் மண்டல முதல் மாநாடு தொண்டர் திருப்பாற்கடல் திருமண மண்டபத்தில் இருதயம், ஜி.இசக்கியம்மாள் தலைமையில் நடைபெற்றது. மூத்த தலைவர் சேஷையா கொடியேற்றி வைத்தார். கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் செ. லட்சுமணன் வரவேற்புரை ஆற்றினார். வங்கி ஊழியர் சங்கத் தலைவர் ஏஐடியூசி தலைவர் ஆர்.ரெங்கன் தொடக்கவுரை ஆற்றினார்.

பி.பரமசிவம் செயலாளராகவும், இசக்கியம்மாள் உதவி செயலாளராகவும், சந்திப்பு கண்ணன் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர். அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாவட்டத் தலைவர் கே.முத்துகிருஷ்ணன், நெல்லை மண்டல செயலாளர் எம். எஸ். பாலகிருஷ்ணன், போக்குவரத்து தொழிலாளர் சங்க செயலாளர் என். உலகநாதன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஏ. ராமகிருஷ்ணன், அம்பாசமுத்திரம் ஒன்றிய செயலாளர் பி.முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் கே.சந்தானம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார். பீடி தொழிலாளர் சங்க மாவட்ட பொதுச்செயலாளர் கே.எஸ். பாலு நன்றி கூறினார்.

தச்சநல்லூர் மண்டல பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு சீராக குடிநீர் கிடைக்க நடவடிக்கை வேண்டும், பழுதடைந்துள்ள அனைத்து சாலைகள் உடனடியாக சீர் செய்யப்பட வேண்டும்,.

பீடித் தொழிலாளர்களுக்கு ரூபாய் 13 கூலி உயர்வை உடனடியாக அனைத்து பீடிக் கம்பெனி நிர்வாகங்களும் அமல்படுத்த வேண்டும். கட்டிட தொழிலாளர்களுக்கு தேவையான எம்சாண்ட், சல்லி போன்ற கட்டுமான பொருட்கள் தடையின்றி கிடைப்பதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்வதுடன் அவர்களுடைய வாழ்வாதாரம், வேலை உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மானூர் ஒன்றியம்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மானூர் ஒன்றிய முதல் மாநாடு பாலாமடையில் நடைபெற்றது. சே லட்சுமணன் (மாவட்ட துணைச் செயலாளர்) கொடியேற்றி மாநாட்டை துவக்கி வைத்தார் ஏ.முத்துகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார்.

நெல்லை மண்டல செயலாளர் எம்.எஸ். பாலகிருஷ்ணன், தஞ்சை மண்டல செயலாளர் பி.பரமசிவன், பாளை ஒன்றிய செயலாளர் கே. முத்துகிருஷ்ணன், பண்பாட்டுகிளை உதவிச் செயலாளர் எஸ்.மகாலட்சுமி, ஜனசக்தி பொறுப்பாளர் முத்து கிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். வங்கி ஊழியர் சங்கத் தலைவரும் ஏஐடியூசி நெல்லை மாவட்ட உபதலைவருமான ஆர்.ரெங்கன் சிறப்புரையாற்றினார். ஒன்றிய செயலாளராக ஜி.செந்தில் முருகன் துணைச் செயலாளர்களாக ஏ.முருகன், கே. செங்கையா, பொருளாளராக ராஜீவ்காந்தி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

ஒன்றிய பகுதிகளில் சாலைகள் சீரமைக்கப்பட வேண்டும். மாதம் முழுவதும் தட்டுப்பாடின்றி குடிநீர் கிடைக்க செய்ய வேண்டும். கங்கைகொண்டான் ரயில்வே யார்ட் உடனடியாக செயல்படுத்தி வேலைவாய்ப்பை உறுதி செய்ய வேண்டும். குளங்கள் பராமரிப்பு செய்யப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




**தொழிற்சங்க அரங்கம் :** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்ட தொழிற்சங்க அரங்க இடைக்கமிட்டி மாநாடு தருமபுரியில் நடைபெற்றது. நிர்வாகிகள் சி.முனியன்,அண்ணாதுரை தலைமை வகித்தனர். ஏஐடியூசி மாவட்ட துணை தலைவர் ஆர்.சுதர்சனன் கட்சி கொடி ஏற்றினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். மாநில செயற்குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன் சிறப்புரையாற்றினார். மாவட்ட துணை செய்லாளர் கா.சி.தமிழ்க்குமரன், மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.கலைச்செல்வன் மாநாட்டில் வாழ்த்தி பேசினர்.

மாநாட்டில் தொப்பூர் சாலையில் அடிக்கடி நடக்கும் விபத்துகளை தடுக்க உயர்மட்ட மேம்பால சாலையை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதியமான்கோட்டை ரயில்வே மேம்பால சாலைப் பணியை முடித்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து பகுதிகளுக்கும் தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும்.விவசாய நிலங்களில் எரிவாயு குழாய் பதிப்பதை கைவிட்டு நெடுஞ்சாலை ஓரங்களில் குழாய் பதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் செயலாளராக கே.மேணி, துணைச் செயலாளராக நாகராஜ், பொருளாளராக அண்ணாதுரை ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**பென்னாகரம் வட்டாரக்குழு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பென்னாகரம் வட்டாரக்குழு மாநாடு வி.மாதையன், மாதையன், முனிராசு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் எம்.கோபால் கட்சி கொடி ஏற்றினார். வட்டார செயலாளர் முனியப்பன் வேலை அறிக்கை வாசித்தார். மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன் மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார்.

மாநில செயற்குழு உறுப்பினர்.ந.நஞ்சப்பன் சிறப்புரையாற்றினார். மாவட்ட துணை செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன்,மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ்.கலைச்செல்வன்,சி.மாதையன், விடுதலைவிரும்பி ஆகியோர் மாநாட்டில் வாழ்த்தி பேசினார்கள்.

மாநாட்டில் பென்னாகரத்தில் சிட்கோ தொழிற்பேட்டை தொடஙக வேண்டும்.அரசு மருத்துவமனையில் அனைத்து பிரிவுகளுக்கும் மருத்துவர்களை நியமிக்க வேண்டும்.ஒசூரிலிருந்து அஞ்செட்டி, பென்னாகரம் வழியாக நாகமரை வரை செல்லும் இருவழி போக்குவரத்து சாலையை நான்கு வழி சாலையாக மாற்ற வேண்டும்.காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடக அரசு மேக்கேதாட்டுவில அணை கட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும் வேளாண்மை கல்லூரி,சட்டக் கல்லூரி நிறுவ வேண்டும்.விவசாயம் சார்ந்த தொழிற்சாலைகள் ஏற்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வட்டார செயலாளராக சம்பத்குமார் துணைச்செயலாளர்களாக சண்முகம், சதீஷ்குமார், பொருளாளராக முத்து தேர்வு செய்யப்பட்டனர்.

**பென்னாகரம் நகரம் :** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பென்னாகரம் நகரக்குழு மாநாடு கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் எம்.கோபால் கட்சி கொடி ஏற்றினார். மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன் மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார். மாநில செயற்குழு உறுப்பினர்.ந.நஞ்சப்பன் சிறப்புரையாற்றினார்.மாவட்ட துணை செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ்.கலைச்செல்வன், சி.மாதையன்,விடுதலைவிரும்பி ஆகியோர் மாநாட்டில் வாழ்த்தி பேசினர். மாநாட்டில் பென்னாகரம் பஸ் நிலைய பணியை விரைவாக முடிக்க வேண்டும்.அனைத்து தெருக்களிலும் கான்கிரீட் சாலை வசதி அமைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் வலியுறுத்தினர். நகர செயலாளராக விஜயபாரதி, துணை செயலாளர்களாக தர்மராஜா, வெள்ளதுரை, பொருளாளராக சரவணன் தேர்வு செய்யப்பட்டனர்.

**மொரப்பூர் வட்டாரக்குழு :** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மொரப்பூர் வட்டாரக்குழு 4வது மாநாடு கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. மாவட்டக்குழு உறுப்பினர் தனபால் கட்சி கொடி ஏற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன் மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார்.மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன்,துணை செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன்,மாநிலக்குழு உறுப்பினர் ஏ.மாது ஆகியோர் வாழ்த்தி பேசினர். தென்பெண்ணை ஆற்று நீரை எண்ணேகோல் புதூர் வழியாக காரிமங்கலம் மொரப்பூர் மற்றும் அரூர் ஒன்றியங்களில் உள்ள ஏரிகள் மற்றும் நீர்நிலைகளுக்கு நிரப்பிட வேண்டும். காவிரி உபரி நீரை தருமபுரி மாவட்டத்திலுள்ள ஏரிகளுக்கு கொண்டுவர வேண்டும். தருமபுரி முதல் ஒகேனக்கல் வரை புதியதாக நான்கு வழிச்சாலை அமைக்க வேண்டும்.அரூர் மாலிப்டினம் தொழிற்சாலை துவங்கிட வேண்டும். தருமபுரி முதல் மொரப்பூர் வரை இரயில் பாதை திட்டத்தை தொடங்க வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் வேளாண் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் செவிலியர் கல்லூரி துவங்கிட வேண்டும்.பென்னாகரம், அரூர், கடத்தூர், கம்பைநல்லூர் பகுதிகளுக்கு தமிழக அரசு, அறிவித்த சிட்கோ தொழிற்பேட்டை துவங்கி வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வட்டார செயலாளராக வி.மாது, துணைச் செயலாளராக வேலு, பொருளாளராக டி.கிருஷ்ணன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**சின்னம்பள்ளி வட்டாரம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சின்னம்பள்ளி வட்டாரக்குழு மாநாடு பழனி,மாரம்மாள்மாது,பூபதி தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார்.மாநில செயற்குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன் சிறப்புரையாற்றினார். மாவட்ட துணை செயலாளர்கள் எம்.கோபால்,கா.சி.தமிழ்க்குமரன் நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.கலைச்செல்வன், சி.மாதையன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

மாநாட்டில் பென்னாகரம் மேச்சேரி செல்லும் தேசிய நெடுஞ்சாலை நான்கு வழி சாலையாக அமைக்க வேண்டும். சின்னம்பள்ளியில் ஒன்றிய அளவிலான கால்நடை மருத்துவமனை துவங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.நாகாவதிஎர்ரப்பட்டி அணை பகுதியில் கால்வாய்களை தூர்வாரி,ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். தக்காளி மற்றும் பூக்கள் சாகுபடி அதிகம் இருப்பதால் விவசாயம் சார்ந்த சார்பு தொழிற்சாலைகளை நிறுவ வேண்டும்.இந்த பகுதி இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறும் வகையில் பென்னாகரத்தில் அறிவிக்கப்பட்ட சிட்கோ தொழிற்பேட்டையை துவங்க வேண்டும்.ஏரிகளை தூர்வாரி ஆழப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வட்டார செயலாளராக எஸ்.வெங்கடேசன், வட்டார துணைச் செயலாளர்களாக பி.குமார், பூபதி, பொருளாளராக சின்னக்கண்ணன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**ஏரியூர் வட்டாரம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏரியூர் வட்டார மாநாடு வட்டாரக்குழு உறுப்பினர்கள் முனுசாமி,சேவி தலைமையில் ஏரியூரில் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் விடுதலைவிரும்பி வரவேற்றார். மாவட்டக்குழு உறுப்பினர் தொட்டி கட்சி கொடி ஏற்றினார். முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரும், மாநில செயற்குழு உறுப்பினருமான ந.நஞ்சப்பன் மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார்.மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன்,மாவட்ட துணை செயலாளர்கள்எம்.கோபால்,கா.சி.தமிழ்க்குமரன்,மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ்.கலைச்செல்வன்,சி.மாதையன் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். மாநாட்டில் மூலபெல்லூர் கிராமத்தில் பழுதடைந்த சாலையை சீரமைக்க வேண்டும்.மூலபெல்லூர் சுடுகாட்டுக்கு தார் சாலை அமைக்க வேண்டும்.ஒசூரிலிருந்து அஞ்செட்டி,ஒகேனக்கல், பென்னாகரம்,ஏரியூர்,நாகமரை வழியாக மேச்சேரி செல்லும் சாலையை அகலப்படுத்தி நான்கு வழி சாலை அமைக்க வேண்டும். ஒட்டனூர் கோட்டையூருக்கு இடையே காவிரி ஆற்றில் தமிழ்நாடு அரசு அறிவித்த ரூ 250 கோடி மதிப்பில் கட்டப்பட இருக்கும் மேம்பால பணியை விரைவாக தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.ஏரியூர் பஸ் நிலைய பணியை துரிதப்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும்.விவசாயம் மேம்பாடு அடைய ஒகேனக்கல் உபரி நீர் திட்டம் செயல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வட்டார செயலாளராக விஸ்வநாதன், துணை செயலாளர்களாக சேவி, தனராஜ், பொருளாளராக சாமராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**வெண்ணந்தூர் ஒன்றியம்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நாமக்கல் மாவட்டம் வெண்ணந்தூர் ஒன்றிய 9 ஆவது மாநாடு எஸ்.எம்.பெரியண்ணன், எம்.ஏ.பொன்னுசாமி, எம்.அங்கமுத்து ஆகியோர் நினைவரங்கில் ஆர்.முருகேசன், அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை எஸ்.மணிவேல் மாநில கட்டுப்பாட்டு குழு, துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பின்கள் கே.அன்புமணி, எஸ்.மணிமாறன், எஸ்.மீனா, எம்.ஏ.பி.ஜெயபால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநாட்டில் பி.ஆர்.செங்கோட்டுவேல் செயலாளராகவும், எஸ்.தமிழ்ச்செல்வன் துணை செயலாளராகவும், ஆர்.அருள்குமார் துணை செயலாளராகவும், ஆர்.முருகேசன் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

நூல் விலை உயர்வை கட்டுப்படுத்தவும், சிறு குறு தொழில்களை பாதுகாத்திடுக, படித்த இளைஞர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளில் காலியாக உள்ள பல லட்சக்கணக்கான காலிப்பணியிடங்களில் பணி நியமனம் செய்திடவும் , வெண்ணந்தூரில் உழவர் சந்தை அமைத்து கொடுக்கவும், வெண்ணந்தூர் அரசு மருத்துவமனையில் இரவு உள் தங்கு மருத்துவரை நிரந்தரமாக பணி நியமனம் செய்திட வேண்டும், வெண்ணந்தூரில் இருந்து மாவட்ட தலைநகர் நாமக்கல் சென்று வர இரண்டு புதிய அரசு பேருந்துகள் நிரந்தரமாக இயக்கிடவும், கிராமங்களுக்கு சென்று வந்த மினி பேருந்துகளை மீண்டும் இயக்கிடுக என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




**கம்பம் ஒன்றியம்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கம்பம் ஒன்றிய 8 வது மாநாடு பரந்தாமன் நினைவரங்கத்தில் நடைபெற்றது. மாநாட்டை துவக்கி வைத்து மாவட்ட செயற்குழு உறுப்பினர் வே.பரமேஸ்வரன் உரையாற்றினார். மாநாட்டை முடித்து வைத்துமாவட்ட செயலாளர் ஏ.பெருமாள் உரையாற்றினார். மாநாட்டை வாழ்த்தி மாநிலக்குழு உறுப்பினர்கள் எஸ்.திருமலை கொழுந்து, வி.பெத்தாச்சி ஆசாத், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் பெ.தங்கம், இரா.தமிழ்பெருமாள் மாவட்ட பொருளாளர் ஜி.செல்லன் உரையாற்றினர். மாநாட்டில் ஒன்றிய செயலாளராக எஸ்.மதனகோபால் தேர்வு செய்யப்பட்டார்.

**கடையநல்லூர் வட்டாரம்:** தென்காசி மாவட்டம் கடையநல்லூர் 5வது வட்டார மாநாடு நடைபெற்றது. மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். வேலை அறிக்கை எம்.எஸ்.முத்துச்சாமி வாசித்தார். மாநாட்டில் புதிய வட்டார செயலாளராக அ.சம்சுதீன், துணைச் செயலாளராக அ.அருணாசலம் பொருளாளராக அ.காஜாமைதீன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

பின்னர் மாநிலக்குழு உறுப்பினர் எம்.எஸ்.போஸ், மாவட்ட பொருளாளர் டி.சுப்பையா ஆகியோர் மாநாட்டை வாழ்த்திப் பேசினர்.

**தென்காசி நகரம்:** தென்காசி நகர குழு மாநாடு எஸ்.கிருஷ்ணன், ஜி.கற்பகவள்ளி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. நகரச் செயலாளராக மா.கணேசன், துணைச் செயலாளராக எஸ்.கிருஷ்ணன், பொருளாளராக பி.ராசையா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டில் தென்காசி மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை, மாவட்ட பொருளாளர் தி.சுப்பையா, மாநில குழு உறுப்பினர் பி.எஸ்.எஸ்.போஸ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

# விரிவடையும் பிரிக்ஸ்

- ஆனந்த் பாசு



**14 ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாடு அண்மையில் நடந்து முடிந்துள்ளது. பிரிக்ஸ் (BRICS) எதைக் குறிக்கிறது? இதில் இந்தியாவின் பங்கு என்ன?**

பிரேசில் **(Brazil)**, ரஷ்யா **(Rushya)**, இந்தியா **(India)**, சீனா **(China)**, தென் ஆப்பிரிக்கா **(South Africa)** ஆகிய நாடுகளின் ஆங்கிலப் பெயரில் உள்ள முதல் எழுத்துகளைத் தொகுத்தால் **'BRICS'** என்று வரும். எனவே இந்த நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டு அமைப்பே 'பிரிக்ஸ்' என்று அழைக்கப் படுகிறது. மற்ற பிராந்திய, பொருளாதார மற்றும் அரசியல் குழுக்களைப் போலல்லாமல், பிரிக்ஸ் அமைப்பிற்கான யோசனை உதித்தது, அதன் உறுப்பினர் நாடுகளிடமிருந்து அல்ல. 2001 இல் 'கோல்ட்மேன் சாக்ஸ்' எனும் பன்னாட்டு நிறுவனத்தின் பொருளாதார வல்லுனரின் ஒரு ஆய்வறிக்கையில், இந்த யோசனை முன்வைக்கப் பட்டது.

அவர் உலகின் வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் ஒரு தனி குழுவாக இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தார். அந்த சமயத்தில் பிரபலமாக இருந்த இன்னொரு மேற்குலகக் கூட்டமைப்பான **G-7**க்குள் ரஷ்யா, இந்தியா, பிரேசில் ஆகிய வளரும் பொருளாதார நாடுகள் சேர்க்கப்படவில்லை. பிறகு இதில் ரஷ்யா சேர்த்துக் கொள்ளப் பட்டு, **G8** ஆக விரிவடைந்தது. 2039 க்குள் ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் பிரேசில் ஆகிய நான்கு பொருளாதாரங்களும் உலகப் பொருளாதார ஒழுங்கை உயர்த்தி, ஜி7 ஐயே முந்திவிடும் என்று அந்த ஆய்வறிக்கை கூறுகிறது.

இந்தப் பின்புலத்தில் 2009 இல், இந்த நான்கு நாடுகளின் தலைவர்கள் சந்தித்து, **BRIC** உருவாக்கப் பட்டது. பிறகு 2010 இல் தென் ஆப்பிரிக்காவையும் சேர்த்து இது பிரிக்ஸ் ஆக விரிவடைந்தது.

2008 இல் ஜார்ஜியாவுடனான போருக்குப் பிறகு மேற்கு நாடுகளுடனான ரஷ்யாவின் உறவுகள் முறியத் தொடங்கின. இதைத் தொடர்ந்து, 2014 இல் ரஷ்யா ஜி8 ல் இருந்து வெளியேற்றப்பட்டது.

பிறகு, பிரிக்ஸ் ஒவ்வொரு ஆண்டும் கூடினாலும், அது நீடிக்காது சிதைந்துவிடும் என்ற கணிப்புகளையும் மீறி, இன்றளவும் உயிர்ப்புடன் உள்ளது.

இந்த அமைப்பு வெறும் 5 நாடுகளின் கூட்டு அமைப்பாக இருப்பினும், பிரிக்ஸ் நாடுகள் கூட்டாக உலகின் நிலப்பரப்பில் 27% கொண்டது. உலக மக்கள்தொகையில் 42% கொண்டது. உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 24% மற்றும் உலகளாவிய வர்த்தகத்தில் 16% கொண்டது. மேலும் உலகின் 33% உணவை இவை உற்பத்தி செய்கின்றன.

அண்மையில் நடந்து முடிந்த, 14வது உச்சி மாநாட்டின் மிக முக்கிய அம்சங்கள் ஒரு சில:

* ரஷ்யாவிற்கு எதிரான பொருளாதாரத் தடைகள் தொடர்பாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பா மீது கடுமையான விமர்சனங்கள் அதிபர் புடின் மற்றும் சீன அதிபர் ஜி ஜின்பிங் ஆகிய இருவரிடமும் இருந்து வந்தது.

* பிரிக்ஸ் பிரகடனம் ரஷ்யாஉக்ரைன் பேச்சுவார்த்தைகளை ஆதரித்தது.

* ஆப்கானிஸ்தானில் பிரதிநிதித்துவ அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்தது. மேலும், மற்ற நாடுகளுக்கு எதிரான தாக்குதல்களுக்கு ஆப்கானிஸ்தான் பயன்படுத்தப்படுவதை நிறுத்துவதை உறுதிசெய்ய வேண்டும் என்று கூறி உள்ளது.


சீனாவும் ரஷ்யாவும் ஐநா பாதுகாப்புக் குழுவில் (ஹிழிஷிசி) நிரந்தர உறுப்பினர்களாக இருப்பதால், பிரேசில் ஜனாதிபதி போல்சனாரோ, பிரிக்ஸ் முயற்சியாக ஐநாவில் சீர்திருத்தத்தை வலியுறுத்தினார்.

* தென்னாப்பிரிக்க ஜனாதிபதி ரமபோசா, வளர்ந்த பொருளாதார நாடுகள், மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஆப்பிரிக்கா உள்ளிட்ட வளரும் பொருளாதார நாடுகளின் உற்பத்தியாளர்களிடமிருந்து தடுப்பூசிகளை வாங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

* பொருளாதார நிர்வாகம், பலதரப்பு அமைப்புகளின் முக்கியத்துவம் மற்றும் பிற பிரிக்ஸ் முன்முயற்சிகள் பற்றிய பொதுவான நிகழ்ச்சி நிரலில் மட்டும் பிரதமர் மோடி கவனம் செலுத்தினார்.

பிரிக்ஸ் நாடுகள், இந்தக் குழுவை "பிரிக்ஸ் பிளஸ்" ஆக விரிவாக்கம் செய்ய ஒப்புக் கொண்டுள்ளன, இந்த ஆண்டிற்குள் அர்ஜென்டினா, எகிப்து, இந்தோனேசியா, கஜகஸ்தான், சவுதி அரேபியா, யுஏஇ, நைஜீரியா, செனகல் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் வளர்ச்சிக் கூட்டங்களில் கலந்து கொள்ள முன்னெடுப்புகள் செய்யப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளன.

இது வரவேற்கத் தக்கது. மேற்குலக மற்றும் குவாட் கூட்டு அமைப்புகளுக்கு இது ஒரு நல்ல மாற்றாகவும், சவாலாகவும் அமையும் என்று பார்வையாளர்கள் கருதுகின்றனர்.


இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25–வது தமிழ் மாநில மாநாட்டு சிறப்பிதழ் ஜனசக்தியின் சார்பில் வெளிவர உள்ளது. 1925 டிசம்பர் 26ல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் துவக்கம் முதல் 24வது மாநில மாநாடு வரை வரலாற்று விவர குறிப்புகள் படங்களுடன் சிறப்பிதழில் இடம் பெறுகின்றன. பொக்கிஷம் போல் பாதுகாத்து அவ்வப்போது படித்து பயன் பெறலாம்.

## விளம்பரக் கட்டணம்

| | | | | |
|---|---|---|---|---|
| அட்டை | முதல்பக்கம் | கலர் | - | 50,000 |
| அட்டை | கடைசிபக்கம் | கலர் | - | 45,000 |
| அட்டை | 2-ம் பக்கம் | கலர் | - | 40,000 |
| அட்டை | 3-ம் பக்கம் | கலர் | - | 35,000 |
| உள்பக்கம் | முழுப்பக்கம் | கலர் | - | 30,000 |
| உள்பக்கம் | அரைப்பக்கம் | கலர் | - | 15,000 |
| உள்பக்கம் | கால்பக்கம் | கலர் | - | 7,500 |
| உள்பக்கம் | க/வெள்ளை | முழுப்பக்கம் | - | 20,000 |
| உள்பக்கம் | க/வெள்ளை | அரைப்பக்கம் | - | 10,000 |
| உள்பக்கம் | க/வெள்ளை | கால் பக்கம் | - | 5,000 |

Janasakthi Trust
பணம் செலுத்தும் விபரம்
A/C. NO. 1083 0200 0009 999
IFC. NO. 0001083
Indian Overseas Bank
Mylapore Branch
Chennai - 600 004
புதியதோர் உலகம் செய்வோம் ஜனசக்தி மக்கள் வாரஇதழ்

புதியதோர் உலகம் செய்வோம் ஜனசக்தி மக்கள் வாரஇதழ்
விளம்பரம் அனுப்ப வேண்டிய முகவரி
பாவை பிரிண்டர்ஸ் மாடி,
16/142, ஜானி ஜான்கான் ரோடு,
ராயப்பேட்டை,
சென்னை – 600 014,
செல்: 8220468816, 9444331138
இ.மெயில். info.janasakthi@gmail.com


# தமிழகம் வரும் காவிரியை மடைமாற்றம் செய்திடவே மேகதாது அணை; ஒன்றிய அரசு ஓரவஞ்சனை

இவ்வாறு தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள் செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:

காவிரி நடுவர்மன்ற தீர்ப்பு மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்பு, நெறிமுறைகளுக்கு எதிராக கர்நாடக அரசு மேகதாது அணை கட்டிட ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ததுடன், ஒன்றிய ஆட்சியாளர்களின் மறைமுக ஆதரவுடன் காவிரி ஆணையத்தலைவரை தனதாக்கி, ஆணையக் கூட்டத்தில் அணைக்கான ஒப்புதல் கோருவது என்பது அனுமதிக்க முடியாது என்ற நிலையில் தமிழக விவசாயிகள் எதிர்த்தும், தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டதுடன், ஒன்றிய ஆட்சியாளர்களை சட்டமன்ற குழு நேரில் சந்தித்து வலியுறுத்தியும், மேகதாது அணை குறித்து விவாதிக்க எங்களுக்கு உரிமை உண்டு என்று கல்லணைக்கே வந்து மீண்டும் அறிவித்த ஆணையத்தலைவர் ஹல்தர் அவர்களை கண்டித்தும், மேகதாது அணை குறித்தான விவாதப்பொருளை நீக்கிட வேண்டும் என வலியுறுத்தியும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்கள் மற்றும் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம், அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கம் ஆகிய நான்கு அமைப்புகளின் அறைகூவலுக்கு இணங்க தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சி, கடலூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் கருப்புக் கொடி கண்டன ஆர்ப்பாட்டங்கள் எழுச்சியுடன்

## டெல்டா மாவட்டங்களில் கண்டன ஆர்ப்பாட்டம்

நடைபெற்றது. ஒவ்வொரு மையங்களிலும் நூற்றுக்கணக்கான விவசாயிகளும் தொழிலாளர்களும் காவிரி நதி நீர் ஆர்வலர்களும் கலந்து கொண்டு எழுச்சி முழக்கமிட்டனர். திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, கோட்டூர், நீடாமங்கலம், கூத்தாநல்லூர், வலங்கைமான், கொரடாச்சேரி, நாகை மாவட்டத்தில் நாகை, திருமருகல், கீழையூர், வேதாரணியம், கீவளூர் என ஒன்றியங்கள் அளவில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டது. மாநில, மாவட்ட ஒன்றிய நகர சங்கங்களின் நிர்வாகிகள் தலைமை ஏற்றனர்.

எவ்வித நியாய, வரன்முறையற்ற, சட்டபூர்வஅனுமதி பெறாத மேகதாது அணை கட்டுமானத்திற்கான அறிக்கையை பெற்ற ஒன்றிய சுற்றுச்சூழல் துறை, தான் கேட்டு இருந்த தெளிவான விரிவான விளக்கம் இல்லாததால் திருப்பி அனுப்புவதாக கூறி உள்ளது. நடுநிலையோடு செயல்பட வேண்டிய இந்த துறைகள் கர்நாடகத்திற்கு ஆதரவாக ஒரு சார்பு நிலையில் செயல்படுவதைகைவிட வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்துகிறது. ஒன்றிய அரசும் ஆணையமும் இதில் நடுநிலை தவறினால் ஆணையம் கூடும் ஆறாம் தேதியன்று வெகு மக்களின் போராட்டமாக உருவெடுக்கும் என தெரிவித்துகொள்கிறோம்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 76. அறிஞனுக்காசான்

**மக்களுக் காசான் அறிஞனே அட்டியில்லை
மற்றாரே ஆசா னவர்க்கு**

மக்கள் அறிவுபெற உதவும் ஆசான் கற்றறிந்த அறிஞனே ஆவான். ஆனால் அந்த அறிஞன் அறிவு பெற உதவுகின்றவர் யாரெனில் மக்களே ஆவர்.

**தனிமனிதன் காணின் அறியானய்த் தோன்றும்
மனிதஇனம் ஆசா னறி.**

தனிமனிதனை எடுத்துக் கொண்டு ஆய்வு செய்தால், அவன் அறியாமை உள்ளவனாகத் தோன்றலாம். பல தனிமனிதர்கள் சமுதாயம் ஆகும் போது அறிஞனே அவர்களிடமிருந்து பாடம் பெறுகிறான். ஆகவே, மக்களே ஆசானாகிறார்கள்.

# வாசகர் டுவிட்

**ஆசிரியர் ஜனசக்தி,**

ஆகஸ்டு 9–ல் தமிழ்நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு பேரணியில் செங்கடலைக் காண மாநில செயலாளர் இரா.முத்தரசன் அழைக்கிறார். கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்ல குடும்பத்தோடு வர அழைக்கிறார். கிளம்பத் தயாராகி விட்டீர்களா?

– **கருப்பணசாமி**, ஆழ்வார்குறிச்சி

**ஆசிரியர் ஜனசக்தி,**

மதச்சார்பின்மை, பன்முகத்தன்மை, வேற்றுமையில் ஒற்றுமை, ஜனநாயகம், தேச நலன் போன்றவை காக்கப்படவேண்டும். சனாதன தர்மம், காவிமய பாசிசம், இந்து வெறி போன்றவை தவிர்க்கப்பட வேண்டும் என்பதை தோழர் ஆர்.கே. தனது கட்டுரையில் தெளிவாக விவரிக்கிறார்.

– **அங்குசாமி,**
காங்கேயம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

அக்னியில் இறக்கப்படுவது யார்? என்ற ஜனசக்தி தலையங்கம் அருமை. நாட்டிற்கும், நாட்டுப் பாதுகாப்பிற்கும், இளைஞர்களுக்கும் இத்திட்டம் கேடு விளைவிக்கும் என்பதை விவ ரித்து, எந்தவித நிபந்தனையும் இன்றி திரும்பப்பெற வேண்டும் என்பதை கூறுகிறது.

– **சிவப்பிரகாசம்**, கும்பகோணம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

சங்கே முழங்கு பகுதியில் அக்னி பாத்! அக்னி வீர்! என்ற ஞ.சிவகாமியின் கட்டுரை சுருக்கமாக இருந்தாலும், நறுக்கென்று இருக்கிறது. "நீதி அனைவருக்கும் ஓர் நிறை" என் பதை உறுதிப்படுத்த வேண்டும் என்ற கட்டுரை மக்கள் கையில் அதிகாரம் அளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தப்படுகிறது.

– **தேவதாஸ்**, செங்குன்றம்,
சென்னை

நல்லம்பள்ளி வட்ட தலைநகரில்

## அடிப்படை கட்டமைப்புகளை ஏற்படுத்த வி.தொ.ச. கோரிக்கை

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்ட தலைநகராக்கி ஆறு ஆண்டுகளாகியும் அடிப்படை வசதிகளான வட்ட தலைமை மருத்துவமனை, நீதிமன்றம், சார்பதிவாளர் அலுவலகம், போக்குவரத்து பணிமனை, கருவூலம், எஸ்.பி.ஐ. வங்கி கிளை, தீ அணைப்பு நிலையம் ஆகியவைகளை நல்லம்பள்ளியில் இதுவரை ஏற்படுத்தவில்லை. இது குறித்து தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் கோரிக்கை வைத்து போராடுகிறது. எனவே, தமிழக அரசு இதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் தெரிவித்துள்ளார்.



## மதுரை புறநகர் ஏ.ஐ.டி.யூ.சியின் புதிய கிளை துவக்க விழா

மதுரை புறநகர் மாவட்டம் பேரையூரில், ஜீவா தலைமையில் சாலையோர சிறு வியாபாரிகள் சங்கம் புதிதாக துவங்கப்பட்டது. இதில் சங்கத்தலைவர் குருசாமி, துணைத் தலைவர் பாலமுருகன், செயலாளர் கார்த்திக், துணைச் செயலாளர் பா.காளிதாஸ், பொருளாளர் சங்கர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது.

மேலும் பேருந்து நிறுத்தம், மார்க்கெட் மற்றும் முக்குசாலை பகுதிகளில் இலவச கழிவறை சுத்தமான குடிநீர் வைக்க கோரி பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டனர். இதில் மதுரை புறநகர் மாவட்ட ஏ.ஐ.டி.யூ.சி துணைப் பொதுச் செயலாளர் பாலகிருஷ்ணன், பேரையூர் தாலுகா ஒருங்கிணைப்பாளர் முத்துசாமி, மாவட்ட நிர்வாக குழு சுந்தரமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கராத்தே சாம்பியன்ஷிப் போட்டி

திருச்சி திருவெறும்பூர் பி. எச். இ. எல் கம்யூனிட்டி சென்டரில் அகில இந்திய கராத்தே சாம்பியன்ஷிப் போட்டியை ஷிரிகிஜி கோச் கமிஷன் சேர்மனும், சென்னை மாவட்டச் செயலாளருமாகிய இஸ்கஃப் மூ. சீனிவாசன் அவர்களின் முயற்சியில் சிறப்பாக நடைபெற்றது.

இந்தப் போட்டியில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கர்நாடகா, ஆந்திரா, மஹாராஷ்ட்ரா போன்ற மாநிலங்களிலிருந்து 200க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். ஷிரிகிஜி தலைவர் க்யோசி. ஈஸ்வர்குமார், பயிற்சியாளர் அசோக் பரிசுகளை வழங்கி வீரர்வீராங் கனைகளை உற்சாகப்படுத்தி கௌரவித்தனர் . சிறப்பு அழைப்பா ளர்களாக இந்திய கலாச்சார நட்புறவுக் கழக சென்னை மாவட்டப் பொதுச் செயலாளர் பா. செந்தில்குமார், சிலம்பம் அசோசியேசன் தலைவர் டி.பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## தோழர் ஏ.எஸ்.கே. 44 வது நினைவு தினம்

தோழர் ஏ.எஸ்.கே. அவர்களின் 44வது நினைவு தினம் வட சென்னை மாவட்டம் ஏ.எஸ்.கே. நினைவு மன்றத்தில் அனுசரிக் கப்பட்டது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் கீ.சு.குமார், வடசென்னை மாவட்ட துணைசெயலாளர் வசந்தகுமார், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் சுப்பிரமணி, ஜி.சுப்பிரமணி, கருணாகரன், அருள், கிளை செயலாளர் மூர்த்தி, பார்த்திபன், முனுசாமி, சிகாமணி, இந்திய மாதர் தேசிய சம்மேளன மாவட்ட தலைவர் செண்பகம், பெரம்பூர் தொகுதி பொருளாளர் சிகாமணி உள்ளிட்டோர் வீரவணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தினார்.

## திருமண விழாவில் மாநில மாநாட்டு நிதி

ஊத்துக்குளி, வெள்ளியம்பளையம் தோழர் அண்ணாதுரை அவர்களின் மகள் விஷ்ணு–பிரியராஜேஸ் திருமணத்தின் போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டு நிதியாக ரூ.10,000 (பத்தாயிரம்) ஊத்துக்குளி வட்டாரக்குழுவுக்கு வழங்கப்பட்டது.

ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களின் மூலம்

# காலிப்பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாக நிரப்புக!

## அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் வேண்டுகோள்

அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க.பாரதி, மாநிலத் தலைவர் த.கு.வெங்கடேசன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாட்டில் கடந்த இரு வருடங்களாக கொரோனா பெருந்தொற்று காரணமாக ஆசிரியர் தகுதி தேர்வு (ஞிணிஜி) நடத்தப்படவில்லை.

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர் தகுதித் தேர்வை மட்டும் சுமார் 5.40 லட்சம் பேர் எழுதினர்.

ஆசிரியர் தகுதி தேர்வு வாரியம் 2022ஆம் ஆண்டு வெளியிட்ட வருடாந்திர தேர்வு கால அட்டவணையின் படி இடைநிலை ஆசிரியர் பதவியில் 4989 காலியிடங்களும் பட்டதாரி ஆசிரியர் பதவியில் 5154 காலியிடங்களும் 3188 முதுகலை ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்பட வேண்டியுள்ளது.

ஏற்கனவே ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களிலிருந்து இந்த காலிப்பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாக நிரப்புவதற்கு பதிலாக மீண்டும் மறுநியமன போட்டித்தேர்வு நடத்த பிறப்பித்துள்ள அரசாணை 149 ஐ தமிழ்நாடு அரசு திரும்பப் பெறவேண்டும்.

மேலும் ஆசிரியர் காலிப்பணியிடங்களை நிரந்தப்பணி யிடங்களாக நிரப்புவதற்கு பதிலாக பள்ளி மேலாண்மை குழு மூலமாக ஒப்பந்த ஊதியம் அடிப்படையில் தற்காலிக பணியிடங்களாக நிரப்புவதாக அறிவித்துள்ளது.

ஆசிரியர் தகுதித்தேர்வு எழுதியுள்ள லட்சக்கணக்கான இளைஞர்களுக்கும் மேலும் தேர்வு எழுத காத்திருக்கும் பட்டதாரி இளைஞர்களுக்கும் பேரிடியாக அமைந்துள்ளது.

இதனால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பள்ளி கல்வி வளாகம் முன்பு காலவரையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகிறார்கள். ஆகவே தமிழ்நாடு அரசு தற்காலிக ஆசிரியர் பணிநியமனங்களை ரத்து செய்து ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களின் மூலம் 13,000 காலிப்பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாக நிரப்பவேண்டுமெனவும் மறு நியமன போட்டி தேர்வு அரசாணை 149 ஐ ரத்து செய்ய வேண்டுமெனவும் மேலும் கடந்த இருஆண்டுகளாக நடத்தப் படாமல் இருக்கும் ஆசிரியர் தகுதித்தேர்வை (DET) நடத்தவேண்டும் எனவும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

## ராமேஸ்வரத்தில் திருவள்ளுவர் சிலை நிறுவிட கலை இலக்கிய பெருமன்றம் கோரிக்கை

ராமேஸ்வரத்தில் அய்யன் திருவள்ளுவர் 133 அடி உயர கம்பீர சிலையை நிறுவிட வேண்டுமென தமிழ்நாடு அரசுக்கு, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் கோரிக்கை தீர்மானம் நிறைவேற்றி வலியுறுத்தி உள்ளது.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் ராமநாதபுரம் நகர அமைப்பின் சிறப்பு கூட்டம் மாவட்ட செயலாளர் ந.சேகரன் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் ஆர்.டி.உமா மகேஸ்வரி, தாளாளர் ஜெஜதீஷ்வரன் முன்னிலை வகித்தனர்.

இலக்கியப் பேராசான் ஜீவா பார்வையில் மகாகவி பாரதி என்ற பொருளில் கம்பன் கழக பொதுச் செயலாளர் நல்லாசிரியர் புலவர் அ.மாயழகு சிறப்புரையாற்றினார்.

பட்டுக்கோட்டையார் பாடல்கள் என்ற தலைப்பில் பணி நிறைவு பெற்ற ஆசிரியர் சு.சௌந்தரபாண்டியன் மைய உரை ஆற்றினார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் ராமநாதபுரம் மாவட்ட நிறுவனர்களில் ஒருவரான மூத்த வழக்குரைஞர் எம்.ராமசாமி, கவிஞர் மாணிக்கவாசகம்,நாட்டுப்புற பாடாலாசிரியர் நடனக் கலைஞர் ஆனந்த், கூட்டுறவு துறை துணை பதிவாளர்கள் தொல்காப்பியன், பாலசுப்பிரமணியன், பேரா. ராமகிருஷ்ணன், கவிஞர் மானுடப்பிரியன் உள்பட பலர் வாழ்த்துரை வழங்கினர்.

தலைவராக சௌந்தரபாண்டியன், துணைத் தலைவர்களாக உமா மகேசுவரி, ஆனந்த், செயலாளராக கவிஞர் மாணிக்கவாசகம், இணைச் செயலாளர்களாக பேரா.ராமகிருஷ்ணன், ஆறுமுகம், பொருளாராக வண் ணாங்குண்டு ஆறுமுகம் ஆகியோர் ஏகமனதாக தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

ராமநாதபுரம் நகர் மையப் பகுதியில் அரசு நூலகம் அமைக்கப்பட வேண்டுமென்று கோரி தீர்மானமும் ஏகமன தாக நிறைவேற்றப்பட்டது.கூட்ட முடிவில், உமா மகேசுவரி நன்றி கூறினார்.

மணப்பாறை அருகே விவசாயி வாங்கிய கடனுக்கு நிலம்,

## வீட்டை ஜப்தி செய்ததை கண்டித்து ஆர்ப்பாட்டம்



கரும்புளிபட்டி விவசாயி பன்னீர் செல்வம் வாங்கிய டிராக்டர் கடனுக்காக, 12 ஏக்கர் நிலம், வீட்டை, ஜப்தி செய்ததை கண்டித்து மணப்பாறை பேருந்து நிலையம் முன்பு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றிய தலைவர் தங்கராசு தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் மாவட்ட குழு பெருமாள் முன்னிலை வகித்தனர்.

மாநில துணைச் செயலாளர் இந்திரஜித், மாவட்ட பொருளாளர் பழனிச்சாமி, தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் சண்முகானந்தம்,ஏ.ஐ.டி.யு.சி. மாவட்ட துணைச் செயலாளர் சுப்ரமணியன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் ஜனசக்தி உசேன், மருங்காபுரி ஒன்றிய செயலாளர் வெள்ளகண்ணு, மாவட்டக் குழு சௌக்கத்அலி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

## அழிந்துவரும் ஜவுளி தொழிலை பாதுகாத்திடுக!

### சிவகிரியில் கைத்தறி நெசவாளர்கள் ஆர்ப்பாட்டம்

நூல்விலை உயர்வைக்கட்டுப் படுத்தக் கோரியும், தொடர்ந்து வீழ்ச்சி அடைந்துவரும் ஜவுளித்தொழிலை அழிவின் விழிம்பிலிருந்து காப்பாற்ற மத்திய, மாநில அரசுகள் போர்க்கால நடவடிக்கை எடுக்கவேண்டும், பருத் தியை அத்தியாவசியப் பொருட்களின் பட்டியலிலிருந்து நீக்கியதை மீண்டும் சேர்க்கவேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஈரோடு மாவட்ட கைத்தறி நெசவாளர்கள் சங் கம் சிவகிரி கிளையின் சார்பில் கடை வீதியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் வி.சண்முகம் தலைமை தாங்கினார். பாலதண்டாயுதம் நெச வாளர் கூட்டுறவு சங்கதலைவர் எஸ்.பி. ராமசாமி, சிவகிரி தெற்குப் பாளையம் நெசவாளர் கூட்டுறவு சங்கதலைவர் ரணதிவே, கட்சியின் மூத்ததோழர் கே.எம். முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னிமலை நாகப்பன், சிவகிரி நகரசெயலாளர் வரதராஜ், கொடுமுடி ஒன்றிய முன்னாள் செயலாளர் குண சேகரன், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் சி.ஆறுமுகம் உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டதை விளக்கி பேசினர்.

கைத்தறி நெசவாளர்கள் ஒய்வூ தியத்தை ரூ.3 ஆயிரமாக உயர்த்த வேண்டும்,கைத்தறி நெசவா ளர் கூட்டுறவு சங்க உறுப்பி னர்கள் இறந்தால் ஈமச்சடங்கு உதவித் தொகையினை ரூ.2 ஆயிரத் திலிருந்து 5 ஆயிரமாக உயர்த்த வேண்டும். நெசவாளர்கள் மருத்துவ சிகிச்சைக்கான நடைமுறையை மீண்டும் அமுல் படுத்தவேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை ஆர்ப்பாட்டத்தில் முழக்கமிட்டனர்.

**ஆகஸ்ட் 6,7,8,9 திருப்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு**

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
# மாவட்ட மாநாடுகள்



**தஞ்சை வடக்கு மாவட்ட 24வது மாநாடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை வடக்கு மாவட்ட 24 வது மாநாடு பாபநாசத்தில் நடைபெற்றது. அண்ணா சிலை அருகில் இருந்து புறப்பட்ட செந்தொண்டர் பேரணியை கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

முதல் நாள் மாநாடு நிகழ்ச்சியை தேசிய குழு உறுப்பினர் கோ.பழனிசாமி தொடங்கி வைத்தார். மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சாமு.தர்மராஜன், தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஆர்.ராமச்சந்திரன், மாதர் சம்மேளனத்தின் மாவட்ட செயலாளர் டி.கண்ணகி, பாபநாசம் ஒன்றிய செயலாளர் பொன்.சேகர், துணைச் செயலாளர் மு.கனகராஜ் மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் இரா.பரமசிவம் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் ஏஐடியூசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார் வாழ்த்தி பேசினார்.

மு.அ.பாரதி மாவட்ட செயலாளராக ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் மாநாட்டினை நிறைவு செய்து உரையாற்றினார். பாபநாசம் ஒன்றிய செயலாளர் பொன்.சேகர் நன்றி கூறினார்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை அமைக்க பல்வேறு தரப்பினரும் கோரிக்கையை முன் வைத்து வருகின்றனர். எனினும், நீண்ட காலமாக கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. தேர்தல் அறிக்கையில் அறிவித்த படி தமிழக அரசு கும்பகோணத்தை தலைமையிடமாக கொண்டு புதிய மாவட்டத்தை விரைவில் அமைக்க வேண்டும்.

பாபநாசம் ஒன்றியம் அரையபுரம் தட்டு மால் படுகை விவசாயிகளுக்கு உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் ரயத்துவாரி பட்டா வழங்க வேண்டும். பண்டாரவாடை கிராமத்தில் அரண்மனை தேவஸ்தானத்திற்கு சொந்தமான நிலங்களை ஏரிஜிஸ்டர் படி நிலமற்ற ஏழை எளிய விவசாயிகளுக்கு பட்டா வழங்க வேண்டும். அரையபுரம், பாபநாசம், அண்ணுகுடி பாசன வாய்க்கால்களை தூர்வார வேண்டும். ஸ்ரீனிவாச பெருமாள் கோவில், 108 சிவாலயம், திருப்பாலைத்துறை, பாலைவனநாதர் சுவாமி கோவில் இடங்களில் தொடர்ந்து பல ஆண்டுகளாக குடியிருந்து வரும் மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும்.

பிரதமமந்திரியின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டு முதல் பாபநாசம் ஒன்றியத்தில் நடைபெற்றுள்ள ஊழல் முறைகேடுகள் குறித்து விசாரணை செய்து முறைகேட்டில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கும்பகோணம் முதல் தஞ்சை வரை உள்ள சாலை பழுதடைந்துள்ள நிலையில் தொடர் விபத்துகள் ஏற்படுகிறது. நான்கு மற்றும் இருசக்கர வாகனங்கள் செல்வதற்கு தகுதியற்ற சாலையாக உள்ள இந்த சாலையை போர்க்கால அடிப்படையில் அகலப்படுத்தி சீரமைக்க வேண்டும். விக்கிரவாண்டி முதல் தஞ்சை வரை அமைக்கப்பட்டு வரும் தேசிய நெடுஞ்சாலையை தரமானதாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோயில் மனை மற்றும் அரசு புறம்போக்கு இடங்களில் குடியிருந்து வரும் மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும். நிலமற்ற விவசாய கூலி தொழிலாளர்களுக்கு எட்டு சென்ட் நிலம் வழங்கி, வீடு கட்ட ரூ.5 லட்சம் மானியம் வழங்க வேண்டும். 60 வயதை கடந்த விவசாய கூலி தொழிலாளர்களுக்கு மாத ஓய்வூதியமாக ரூ 3,000/ வழங்க வேண்டும்.

திருமண்டங்குடி சர்க்கரை ஆலையை அரசே ஏற்று நடத்தி விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனே வழங்க வேண்டும். விவசாயிகள் பெயரில் போலியாக வங்கிகளில் பெறப்பட்டுள்ள கடனை தள்ளுபடி செய்து, மோசடியில் ஈடுபட்டு கடன் பெற்றவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை தொடர வேண்டும்.

தஞ்சை மாவட்டம், பாபநாசம் தாலுகாவில் விவசாய கல்லூரி தொடங்க வேண்டும். பாபநாசம் ரயில்வே கேட் அருகில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டும்.

பாரம்பரியமிக்க கும்பகோணம் ரயில் நிலையத்தினை ஜங்ஷன் நிலையமாக மாற்றும் வகையில் கும்பகோணத்தை மையப்படுத்தி புதிய ரயில் பாதை திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



**கன்னியாகுமரி மாவட்ட மாநாடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் குமரி மாவட்ட 24வது மாநாடு தங்கவேல் திருமணத்தில் நடைபெற்றது. மாநாட்டு தலைமைக் குழு உறுப்பினர்களாக சி.சொக்கலிங்கம், சுரேஷ் மேசிய தாஸ், அனிதாமோள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநாட்டை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச்செயலாளர் மு.வீரபாண்டியன் துவக்கி வைத்தார்.

மாவட்டச் செயலாளராக தா.சுபாஷ் சந்திர போஸ், துணைச் செயலாளர்களாக சுரேஷ் மேசிய தாஸ், நாராயணசுவாமி, பொருளாளராக பி.தாமரைசிங் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.காசிவிஸ்வநாதர் நிறைவுரையாற்றினார்.

குமரி மாவட்டத்தில் கட்டுமான பொருட்களின் தட்டுப்பாட்டை உடனே போக்க வேண்டும். குமரி மாவட்டத்திலிருந்து கனிம வளங்கள் பிற மாநிலங்களுக்கு கடத்தப்படுவதை தமிழக அரசு தடுத்திட வேண்டும்.

பேராசான் ஜீவா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை தமிழக அரசு பாடத்திட்டத்தில் இணைத்திட வேண்டும். குமரி மாவட்டத்தில் அரசு சட்டக்கல்லூரி மற்றும் வேளாண்மை கல்லூரி அமைத்திட வேண்டும்.

அனந்தபுரி விரைவு இரயில் மீண்டும் நாகர்கோவில் சந்திப்பில் இருந்து புறப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குமரி மாவட்டத்தில் சாலைகளை விரைந்து சீர்படுத்தக்கேட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருச்சி மாநகர் மாவட்ட மாநாடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர் மாவட்ட 23 வது மாநாடு மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உறையூர் பகுதியில் நடைபெற்றது. புத்தூர் நால்ரோடு பகுதியில் இருந்து பேரணியாக புறப்பட்டு உறையூர் குறதெருவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு 23வது வார்டு மாமன்ற உறுப்பினர் க. சுரேஷ் தலைமையேற்றார். மேற்குப் பகுதி துணைச் செயலாளர் இப்ராஹிம் வரவேற்புரை நிகழ்த்தினார். திருவரங்கத்திலிருந்து கொண்டுவரப்பட்ட மாநாட்டுகொடி மற்றும்பொன்மலை, சோமரசம் பேட்டையிலிருந்து கொண்டுவரப்பட்ட நினைவு ஜோதியினை பொதுக்கூட்ட மேடையில் பெற்றுக் கொண்டு மாநில செயற்குழு உறுப்பினர் ஜி.பழனிச்சாமி மாநில நிர்வாக குழு உறுப்பினர் த.இந்திரஜித், மாவட்டச் செயலாளர் திராவிடமணி, மாநில நிர்வாக குழு முன்னாள் உறுப்பினர் செல்வராஜ் உள்ளிட்டோர் உரையாற்றினர். மேற்குப் பகுதி குழு சார்பில் துரை ராஜ் நன்றி கூறினார். பாரதி கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சிமற்றும் படையப்பா, கருணா குழுவினரின் தப்பாட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

ப.மாணிக்கம் நூற்றாண்டு நுழைவுவாயில் மதி சோழர் நினைவு அரங்கத்தில் நடைபெற்ற பிரதிநிதிகள் மாநாட்டை



மாநில துணைச்செயலாளர் கே .சுப்பராயன் எம்.பி. துவக்கி வைத்து உரையாற்றினார். தலைமை குழுவாக செல்வராஜ், முத்துலட்சுமி, அஞ்சுகம் ஆகியோர் செயல்பட்டனர். வரவேற்பு குழு செயலாளர் சுரேஷ் முத்துசாமி வரவேற்புரை ஆற்றினார். வரவேற்பு குழு பொருளாளர் ரவீந்திரன் நன்றி உரையாற்றினார். செயலாளராக எஸ்.சிவா தேர்வு செய்யப்பட்டார்.

## தொண்டர்படை பயிற்சி முகாம்



**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது தொண்டர் படை பயிற்சிமுகாம் நடைபெற்றது. மாநில பயிற்சியாளர் கேப்டன் இலகுமையா மேற்பார்வை செய்தார். மாவட்ட பயிற்சியாளர் லி.பகத்சிங் பயிற்சியை அளித்தார். மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ உள்ளிட்டோர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டனர். ஏற்கனவே மாவட்டத்தில் முதல் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**மதுரை புறநகர் :** மதுரை மாவட்ட புறநகரில் உள்ள திருநகர் அண்ணா பூங்காவில், செந்தொண்டர் பயிற்சியாளர் திருப்பூர் பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. இதில் மாணவ மாணவிகள் பலர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். இதனைத்தொடர்ந்து மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் முத்துவேல், சந்தனம், தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மதுரை மாவட்டத் தலைவர் இரவிவர்மா, திருப்பரங்குன்றம் ஒன்றியச் செயலாளர் விஜயா, இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் நாகஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஆண்டிபட்டி கிழக்கு உதவி மின்
## செயற்பொறியாளர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம்

பல லட்சம் ரூபாய் கையூட்டு பெற்றுக்கொண்டு பொது இடத்தில் இருந்த மின் மாற்றியினை, யாருடைய அனுமதியும் பெறாமல் தனியார் இடத்தில் இடம் மாற்றம் செய்த, நகர் பிரிவு உதவி மின் பொறியாளர் அருளானந்தம் அவர்கள் மீது துறைரீதியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஆண்டிபட்டி கிழக்கு மின் உதவி செயற்பொறியாளர் அலுவலகம் முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியி ஆண்டிபட்டி நகர் குழு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து மாவட்ட செயற்குழு உறுப்பினர் தோழர் வே. பரமேஸ்வரன் உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி உரையாற்றினார்.

நகர செயலாளர் க. முனீஸ்வரன் கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## மின்வாரியத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

தண்டலம் கிராமத்தில் ஹை வோல்டேஜ் மின்சாரம் ஏற்பட்டு ஏசி, வாஷிங் மெஷின், ஏசி, பிரிட்ஜ் பல்பு உள்ளிட்ட 50 லட்சம் அத்தியாவசிய பொருட்கள் எரிந்து தீக்கிரையாக்கப்பட்டது. இதை கண்டித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பாக முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் கே. முருகன் தலைமை தாங்கினார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் ஜி.அருள், சிபிஐ ஒன்றிய செயலாளர் என்.ராஜேஷ், வி.ச. மாவட்ட துணைத்தலைவர் என்.செங்கல்வராயன், மாவட்டத் துணைச் செயலாளர் பி.மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சுப்பிரமணியன் படத்திறப்பு நிகழ்ச்சி



இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாவட்ட செயலாளரும், மாவட்ட ஊராட்சி உறுப்பினருமான எஸ். தமயந்தி அவர்களின் கணவர் சுப்பிரமணியன் ஆசிரியர் (ஓய்வு) அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி திருத்துறைப்பூண்டி ஒன்றியம், வேளூர் ஊராட்சி, ஜீவா தெரு அவரது இல்லத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினரும், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவருமான அ.பாஸ்கர் தலைமையேற்றார். கே. உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., மாநிலக்குழு, க.மாரிமுத்து எம்.எல்.ஏ. மாநிலக்குழு ஆகியோர் முன்னிலை வகித்தனர். கட்சியின் மாவட்ட செயலாளர் வை.சிவபுண்ணியம் எக்ஸ்.எம்.எல்.ஏ. படத்தினை திறந்துவைத்து புகழஞ்சலி செலுத்தினார். கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழுவின் தலைவர் எம்.வையாபுரி, மாவட்ட துணைசெயலாளர் இரெ.ஞானமோகன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பி.வி.சந்திரராமன், கே.ஆர்.ஜோசப், கே.ராஜா, எம்.முருகையன், நகர செயலாளர் டி.பி.சுந்தர், ஒன்றிய செயலாளர் வி.ஜவஹர், மாவட்ட குழு உறுப்பினர்கள் எம். மகாலிங்கம், கே.பாலு, கே.விஜயா, சு.தமிழ்செல்வி, கோ.சரவணன், ஒன்றிய நிர்வாகக்குழு உறுப்பினர் ஜெ. கணேஷ், மற்றும் ஏராளமான தோழர்கள், உறவினர்கள் படத்திறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## உள்ளாட்சி பிரதிநிதிகள் அன்றும் இன்றும்

உள்ளாட்சி அமைப்பு என்பது அந்தந்த கிராம, நகர மக்களின் அடிப்படை பிரச்சினைகளை பூர்த்தி செய்யும் அமைப்பாகும். அதன் தேர்வு முறை, பிரதிகளின் செயல்பாடு அன்றும் இன்றும் எவ்வாறு இருக்கிறது, இருந்தது என்பது குறித்து உள்ளாட்சி பிரதிநிதிகள் அன்றும் இன்றும் என்ற இந்த நூல். ஆசிரியர் எஸ்.கணேசன் அவர்களால் எழுதப்பட்டுள்ளது.

எந்த நாட்டில் அரசுக்கும் மக்களுக்கும் இடையில் நெருக்கமான உறவு இருக்கிறதோ அந்த நாடு மிகுந்த வளர்ச்சிபெறும்.அதுபோல உள்ளாட்சி அமைப்புகள் சிறப்பாக செயல்பட்டால் தான் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தீரும்.மக்களுக்குத் தேவையான சுகாதார வசதிகள், மின்சாரம், நல்ல சாலை வசதி, தெரு விளக்கு சுத்தமான குடிநீர் வழங்குவது போன்ற மிக முக்கியமான பணிகளை செய்து தருவதுதான் உள்ளாட்சி அமைப்புகளின் பணி. உள்ளாட்சி பிரதிநிதிகள் தான் மக்களுடன் நேரடி தொடர்பில் உள்ளவர்கள். அன்றாடம் மக்களை சந்திக்கும் வாய்ப்பு உள்ளவர்கள். தொன்மைவாய்ந்த தமிழகத்தில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே, உள்ளாட்சி அமைப்பு முறைகள் இருந்தது என்று பல வரலாற்று நூல்கள் நமக்கு தெரிவிக்கின்றன. அன்றைய கிராம நிர்வாகத்தை பொறுத்தமட்டில் மன்றம்,பொதியில்,அம்பலம் ஆகிய சொற்கள் காணப்படுகின்றன. பிரம்ம தேவச்சபை சதுர்வேதி மங்கலத்தில் இருந்தவை. தேவதானச்சபைதிருக்கோவிலுக்கு உரிய தேவதானங்களில் இருந்தவை, ஊர்சபை பார்ப்பனர் அல்லாத பிற வகுப்பினர் வாழ்ந்த ஊர்களில் இருந்தவை. நகரசபை வணிகர்கள் வாழ்ந்த ஊர்களில் இருந்தவை. மேற்கூறிய நான்கு சபைகள் சோழ மன்னர் காலத்தில் இருந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். தமிழகத்தில் தொன்றுதொட்டு வந்த கிராம சபைகளும், நகர சபைகளும் சோழர் மன்னர் ஆட்சியில்தான் மிகச்சிறப்பாக இருந்தனவாம். இந்த சபைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் குடவோலை வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். யார், யாரெல்லாம் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற தகுதிகள் உறுப்பினர்களுக்கு வரையறுக்கப்பட்டிருந்தன




ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டவுடன் மன்னர் ஆட்சி முறையை ஒழித்து புதிய அமைப்பு முறையை உருவாக்கினார்கள். அதுதான் தற்போதைய மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி என்ற புதிய உள்ளாட்சி முறைகள். விடுதலை பெற்ற பின்னர் பிரதமரான ராஜீவ்காந்தி அவர்கள் பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை கொண்டு வந்து இதனை வலிமைபடுத்தினார். இந்நூலில் இன்னும் பல செய்திகள் விரவிக் கிடக்கிறது. இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்கவும்


**– இன்சுவை பாரதி**

**ஆசிரியர் : எஸ். கணேசன்**
**வெளியீடு : சண்முகம் பதிப்பகம்,136, சத்தியமூர்த்தி மெயின் ரோடு, மீனாம்பாள்புரம், மதுரை 625002**
**பக்கங்கள் : 95 விலை: ரூ.80**

நூல் நயம்

## கபீர் சொல்கிறான்... கபீர்தாசரின் நூறு கவிதைகள்

கபீர்தாசரின் 500வது ஆண்டு நினைவாக கபீர் சொல்கிறான் என்னும் தலைப்பில் கபீர்தாசரின் நூறு கவிதைகளை ரவீந்திரநாத் தாகூர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். ஆதனை தமிழ் கூறும் நல்லுலகம் அறிந்து கொள்வதற்காக டாக்டர். வெ. ஜீவானந்தம் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்து அளித்திருக்கிறார். அதுவே இந்நூலாகும். மார்க்கங்கள் வேறுவேறு என்றாலும் அவை சொல்லும் மகத்துவம் ஒன்றுதானே. அதை கபீர்தாசர் ‘‘நதியும் அலையும் ஒன்றுதானே. நதியும் அலையும் வேறு வேறு ஆகுமா?. அலை எழும் போது நதியும் எழுந்திடும். அலை விழும்போது நதியும் விழுந்திடும்.எங்கே உள்ளது வேறுபாடு ‘‘. அப்படி இருக்கையில் மனிதன் மதத்தின் பேரால், மார்க்கங்களின் பேரால், சாதியின் பெயரால் ஏன் வேறுபாடுகளை பாராட்ட வேண்டும் என்று கேட்கிறார்.




‘‘மினாரின் உச்சியில் முல்லா உரக்க அழைக்கிறார். இறைவன் என்ன கேளாசெவிடனா ?. உன் ஜெபமாலை மணிகள், நெற்றியில் சாட்டிய பட்டை நாமங்கள் அழுக்குத் சடைமுடி நாற்றம் அனைத்தும் வேஷம் .’’ இதுவா இறைவனை நாடும் வழி? இல்லை நண்பனே !

‘இறை எது? அது, இது என்பவனே !அது பொது. காற்றைப்போல ‘ என் இறைவன், உன் இறைவன் என்று ஓயாமல் சச்சரவு இடுபவர்களே, இறைவன் உனக்கும் அவனுக்கும் மட்டும் சொந்தமானவன் அல்ல !. காற்றை போல் அனைவருக்கும் பொது வானவன். ‘அவன் எல்லா மூச்சிலும் மூச்சுக் காற்றாய் உள்ளான் ‘ காற்றுக்கு யாரும் தனியுடமை கொண்டாட முடியாது என்பதை அறியாத மூடனாக மனிதன் இருக்கிறான் என சாடுகிறார் கபீர்தாசர். நான் அந்த ஆலயத்திலும் இல்லை, அந்த மசூதியிலும் இல்லை, நான் காபாவிலும் இல்லை, கைலாயத்திலும் இல்லை, நான் சம்பிரதாயச் சடங்குகளில் எதிலும் அடங்கியவன் அல்ல, அப்படி என்றால் நான் எங்கு இருக்கிறேன் உன் அருகில் இருக்கிறேன், உன் உள்ளத்தில் இருக்கிறேன் பிறகு ஏன் ஆலயங்களில் தேடிக் கொண்டிருக்கிறாய் என வினவுகிறார் கபீர்தாசர்.

கபீர்தாசரின் சிந்தனைகள் இன்றைய கால தேவையாக உள்ளன. அவரின் மிகச் சிறந்த கவிதைகளை டாக்டர் ஜீவானந்தம் அவர்கள் நமக்கு மொழிபெயர்த்து அளித்திருக்கிறார். இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்

**– சமரன்**

**நூலாசிரியர் : டாக்டர் வெ. ஜீவானந்தம்.**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41–பி,சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 56 விலை: ரூ.45**

வாரம் தோறும் வெளிவரும்
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை,
சென்னை - 600014

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

சுழலும் உலகம்

## பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தல்:



## இடதுசாரிகள் கணிசமான வெற்றி

577 இடங்களைக் கொண்ட பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற 289 இடங்களில் வெற்றி பெற வேண்டும். பிரான்ஸ் நாட்டின் அதிபர் மாக்ரோனின் மைய – வலதுசாரி கூட்டணி முன்பு 300க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெற்றிருந்தது. ஆனால், தற்போது அதிபராகப் பொறுப் பேற்று மூன்று மாதங்களுக்குள்ளாகவே அவரது அணி நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையை இழந்துள்ளது. தனது சீர்திருத்த நடவடிக்கைகளை செயல்படுத்திட முடியும் என்று அவர் கொண்டிருந்த நம்பிக்கையை தேர்தல் முடிவுகள் தகர்த்து விட்டன.

ஜீன் லுக் மெலேஜுன் தலைமையிலான (NUPES)இடதுசாரி கூட்டணி மற்றும் மெயின் லே பென் தலைமையிலான வலதுசாரி கட்சி ஆகியன நடந்து முடிந்த தேர்தலில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளதால் நாடாளுமன்றத்தில் மாக்ரோனின் அரசாங்கம் பெரும்பான்மையை இழந்துள்ளது. அவரது கட்சி 245 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது என்பதுடன் அமைச்சர்கள் உள்ளிட்ட பல முக்கியத் தலைவர்களும் தோல்வி அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பெரும்பான்மையை இழந்து விட்ட நிலையில் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்க்கட்சிகளின் ஆதர வைச் சார்ந்திருக்க வேண்டிய நிலைக்கு மாக்ரோன் அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கிறது.

இடதுசாரி அணியான (NUPES) 131 இடங்களில் வெற்றி பெற்று அந்நாட்டு நாடாளுமன்றத்தின் இரண்டாவது பெரிய அணியாக எதிர் தரப்பு வரிசையில் முன்னேறி உள்ளது. லே பென்னின் கட்சி 89 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. எனவே, நாடாளுமன்றத்தில் எந்த ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும் என்றாலும் இடதுசாரி அணி மற்றும் லே பென் கட்சியுடன் மெக்ரோன் அரசாங்கம் பேச்சுவார்த்தை மற்றும் கலந்தாலோசனை செய்ய வேண்டிய கட்டாய சூழல் எழுந்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற மாக்ரோன் மற்றும் அவரது அரசாங்கத்துக்கு இது ஒரு பெரும் பின்னடைவு என்று அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு சிறுபான்மை அரசாங்கத்தை நடத்தியாக வேண்டிய ஒரு புதிய, முன்னெப்போதும் சந்தித்திராத நெருக்கடியை பிரான்ஸ் நாட்டு அரசியல் சூழல் தற்போது எதிர்கொள்ள இருக்கிறது.

அண்மையில் பிரதமராக நியமிக்கப்பட்ட எலிசபத் போர்ன் இந்த அரசியல் நெருக்கடி குறித்து கூறுகையில் இந்தச் சூழல் முன்னெப்போதும் கண்டிராத ஒரு சூழல் என்றும் அடுத்த ஐந்தாண்டுகளில் பிரான்ஸ் நாடு கொள்கை முடக்கங்களால் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகாமல் இருந்திட இணக்கமான ஒரு பெரும்பான்மையை உருவாக்கிட உடனடியாக அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாகத் தெரி வித்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டு தேர்தல் முடிவுகளை ஒரு குறிப்பிட்ட நாட்டின் தனித்த அரசியல் நிகழ்வாக மட்டுமே கருதிவிட முடியாது. ஐரோப்பிய கண்டம் முழுவதிலுமாக எழுச்சியுற்று வரும் புதிய அரசியல் நிகழ்வு போக்கு என்னும் தொடர் சங்கிலியின் ஒரு பகுதியாகும். ஜெர்மனியின் ஓலப் ஸோல்ஸ் கடந்த ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் மிகக்குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றார். ஜெர்மன் கூட்டாட்சி குடியரசு ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து இதுவரையில் வெற்றி பெற்ற அதிபர்களில் மிகக்குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர் ஓலப் ஸோல்ஸ் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்பெயின் நாட்டில் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் இரு கட்சி முறை தகர்த்தெறியப்பட்டது. இத்தாலியில் பெருந்தொற்று காலத்தின்போது, முடிவுற்ற ஆட்சியைத் தொடர்ந்து, தற்போது தொழில்நுட்ப நிபுணரான மேரியோ டிராகி அந்நாட்டின் தலைமைப் பொறுப்பேற்றுள்ளார்.

மேற்சொன்ன அரசியல் மாற்றங்கள் அனைத்தும் 2024 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தலிலும் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உணவுத் தட்டுப்பாடு எனும் பேரபாயம்!


### ஐ.நா.பொதுச் செயலாளர் எச்சரிக்கை

உலகம் முழுவதும் தொடர்ந்து அதிகரித்து வரும் உணவுத் தட்டுபாடு காரணமாக மிக விரைவில் உலக மக்கள் அனைவரும் ஒரு பேரபாயத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் ஆண்டனியோ குட்ரஸ் எச்சரித்துள்ளார். அதிகரித்து வரும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், பருவகால மாற்றங்களின் கடும் விளைவுகள், கொரோனா பெருந்தொற்றின் உலகளாவிய பாதிப்புகள் ஆகியவற்றுடன் உக்ரைனில் நடைபெற்று வரும் போர் ஆகியவை காரணமாக முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு ஒரு மாபெரும் உணவுத் தட்டுப்பாடு சர்வதேச அளவில் ஏற்படும் என்று அவர் கூறியுள்ளார். ஏற்கெனவே பசிக் கொடுமையால் கோடிக்கணக்கான மக்கள் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

உரம் மற்றும் உற்பத்திக்கு அடிப்படையான மின்சாரம் மற்றும் எரிபொருட்கள் ஆகியவற்றின் கடும் விலை உயர்வை எதிர்கொள்ள முடியாமல் உலகம் முழுவதும் உள்ள விவசாயிகள் மிகப்பெரிய நெருக்கடியில் சிக்கியுள்ளனர். இதன் காரணமாக ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் உணவு உற்பத்தி பெரும் பாதிப்பிற்கு உள்ளாகும் என்று அவர் சுட் டிக்காட்டியுள்ளார். இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள உணவுப் பிரச்சினை அடுத்த ஆண்டில் சர்வதேச உணவுத் தட்டுப்பாடு எனும் பேரபாயமாக உருவெடுக்கும். அந்த பேரபாயத்தால் விளையக்கூடிய சமூக மற்றும் பொருளாதார பின்விளைவுகளில் இருந்து எந்த ஒரு நாடும் அதனை தற்காத்துக் கொள்ள முடியாது என்று அவர் உறுதிபட எச்சரித்துள்ளார்.

முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் சமத்துவமின்மை, அமைதி மற்றும் பாதுகாப்பின்மை, போர்கள், உணவுத் தட்டுப்பாடு என்று பல்வேறு சமூக நோய்கள் புற்றீசல்கள் போல் பெருக்கெடுத்து உலக மாந்தரை பெரும் துன்ப துயரத்திற்குள் ஆழ்த்தும் என்று மார்க்சியம் திட்ட வட்டமாக எடுத்துரைக்கிறது. முதலாளித்துவ சமூக அமைப்பும் அதன் உள்ளார்ந்த அம்சமான உழைப்புச் சுரண்டலும், தனியுடைமையும் தொடரும் வரை சமூக அவலம் என்பது தொடர்கதையாகத் தொடரவே செய்யும். இந்த உண்மையைத்தான் ஐ.நா.பொதுச் செயலாளர் விடுத்துள்ள எச்சரிக்கை நமக்கு மீண்டும் எடுத்துரைப்பதாக உள்ளது. முதலாளித்துவத்திற்கு எதிரான அரசியல் – பொருளாதார நடவடிக்கைகளே மனிதகுலத்தின் விடியலுக்கும் வாழ்வுக்குமான அடிப்படையான தேவைகளாகும். அத்தகைய அரசியல் பொருளாதார நடவடிக்கைகளுக்கு மார்க்சிய ஒளி வழிகாட்டும் என்பது உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் போராட்ட வரலாறு பறைசாற்றும் உண்மையாகும்.

## ரஷ்ய கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் கியூப துணை பிரதமர் சந்திப்பு



கியூப துணை பிரதமர் ரிக்கார்டோ கேப்ரிசஸ் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் கென்னடி ஜுகனோவ் உள்ளிட்ட தலைவர்களை அண்மையில் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, சர்வதேச மற்றும் இருநாடுகள் அளவிலான பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டதுடன், ரஷ்யா மற்றும் கியூபா இடையேயான வரலாற்று ரீதியான நல்லுறவு குறித்தும் நினைவு கூரப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவு தொடர்ந்து பேணப்படவும், மேலும் வலுப்படுத்தப்படவும் வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

கியூபாவுக்கு எதிரான அமெரிக்காவின் பொருளாதார, வணிக, நிதித்தடைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி, அதன் நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது. அந்தத் தடைகளை அமெரிக்கா உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று கென்னடி ஜுகனோவ் வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, கியூப நாட்டின் உயர் அதிகாரிகள் முழுவீச்சில் பங்கேற்று பணியாற்றிய செயின்ட் பீட்டர்ஸ் பர்க் சர்வதேச பொருளாதார அமைப்பின் 25ஆவது உயர்மட்ட அமர்வில் கியூப துணைப் பிரதமர் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# ‘ஒரே ஒரு பூமி’



- மரு.த.அறம்

**ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5ஆம் நாள் உலக சுற்றுச்சூழல் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்நாளை முன்னிட்டு அந்த ஆண்டுக்கான ஒரு முழக்கம் முன் வைக்கப்படுவது வழக்கம். அதன் அடிப்படையில் ‘ஒரே ஒரு பூமி’ என்பது இந்த ஆண்டுக்கான முழக்கம். ‘இயற்கையோடு நல்லிணக்கத்துடன் வாழ்வதே நிலையான வாழ்வைத் தரும்’ என்பதை வலியுறுத்தவே இவ்வாறு அறிவிக்கப்பட்டு உள்ளது.**

சுற்றுச்சூழல் குறித்த உலகளாவிய அளவில் ஐ.நா.சபை கூட்டிய கருத்தரங்கு முதன்முதலில் ஸ்வீடன் நாட்டில் உள்ள ஸ்டாக்ஹோம் நகரில் 1972ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் தேதி தொடங்கியது. இந்தக் கருத்தரங்கு துவங்கிய நாளான ஜூன் 5ஆம் தேதியை நினைவு படுத்தும் வகையில் 1973ஆம் ஆண்டு முதல் ஐ.நா.சபையால் இது உலக சுற்றுச்சூழல் தினமாக வருடந்தோறும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பரந்து விரிந்த விண்வெளி மண்டலத்தில், எத்தனையோ கோடி நட்சத்திரங்கள் இருக்கின்றன. எத்தனையோ கோடி கிரகங்கள் இருக்கின்றன. ஆனால் பூமியில் மட்டுமே உயிர் வாழ தகுந்த சூழ்நிலை நிலவுகிறது.

அதிகரித்துக் கொண்டே செல்லும் புவி வெப்பமாதல் இந்தச் சூழலை கெடுத்து பூமியை உயிர் வாழ்வதற்கு தகுதி இல்லாத ஒரு கிரகமாக மாற்றிவிடும் அபாயம் உள்ளது. ஏற்கனவே புவியின் வெப்பமானது 1800ஆம் ஆண்டு இருந்ததை விட தற்போது 1.1 டிகிரி செல்சியஸ் அதிகமாகியுள்ளது. பல ஆய்வுகள் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் இந்த வெப்ப நிலை உயர்வை 1.5 டிகிரி செல்சியஸ்க்கு குறைவாக நாம் கட்டுப்படுத்தா விட்டால், மிகப்பெரிய பாதிப்பை பூமி அடையும் என எச்சரித்து இருக்கின்றன. தற்போதைய நிலை தொடர்ந்தால் இன்னும் 20 ஆண்டுகளில் பூமியின் வெப்பமானது 1.5 டிகிரி செல்சியஸை தாண்டிவிடும் என எச்சரிக்கின்றன. அதே ஆய்வுகள், எந்தவித மாற்றமும் இல்லாமல் நாம் இதே நிலையை தொடர்ந்தால் 2100 ஆண்டுக்குள் 3.6 டிகிரி செல்சியஸ் உயர்ந்து விடும் என அபாய அறிவிப்பு அறிவித்திருக்கின்றன.

புவி வெப்பம் அதிகரிப்பதால் துருவங்களில் உள்ள பனிப்பாறைகள் உருகுகின்றன. இதனால் கடல் நீர் மட்டம் உயர்கிறது. இதனால் சில குட்டி தீவுகள் கடலுக்குள் மூழ்கும் அபாயம் உள்ளது. பெரும்பாலான இடங்களில் கடல் நீர் கடற்கரைக்கு உள்புகுவதால், டெல்டா பகுதியில் உள்ள விளைநிலங்கள் விவசாயத்திற்கு தகுதியற்றதாக மாறுகின்றன. கடும் வறட்சி ஏற்படும், குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்படும், அதே நேரத்தில் திடீரென்று கன மழை கொட்டி, வெள்ளப்பெருக்கு ஏற்படும். நிலச்சரிவுகள், மேக வெடிப்பு, பனிப் பாறை சரிவுகள், கடுமையான புயல்கள், அனல்காற்று, பூகம்பங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. நிலத்தடி நீர் மட்டம் குறைய, குறைய கடல் நீர் நிலத்திற்குள் புகுந்து நிலத்தடி நீரை பயனற்றதாக மாற்றும் வாய்ப்பும் உள்ளது.

தற்போதே கிட்டத்தட்ட 40% மக்கள் சுற்றுச்சூழலால் பாதிப்படைந்துள்ளனர். உலகில் வாழும் 92% மக்கள் மாசுபாடுடைய காற்றை தான் சுவாசிக்கின்றனர். குடிப்பதற்கு தகுந்த குடிநீர் உலகில் 200கோடி மக்களுக்கு கிடைப்பதில்லை. பருவநிலை மாற்றங்களால் இது மேலும் அதிகரிக்க கூடும். வருடந்தோறும் 70 லட்சம் மக்கள் காற்று மாசுபாட்டினால் உயிரிழக்கின்றனர். 2050ல் உலகில் வாழும் அனைத்து மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வது கடினம் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. தற்போது உலகில் வாழும் உயிரினங்களில் 10 லட்சம் உயிரினங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன.

பசுமைக்குடில் வாயுக்களான கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஹைட்ரோ புளோரோகார்பன் போன்ற வாயுக்கள் தான் புவி வெப்பமாதலில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மனித நடவடிக்கைகளின் மூலமாக உருவாகும், இந்த பசுமைக்குடில் வாயுக்கள் வளி மண்டலத்தில் பரவி பூமியை சுற்றி ஒரு போர்வையைப் போல போர்த்தி நிற்கின்றன. சூரியனிலிருந்து வரும் வெப்பம் பூமியை அடைந்தவுடன் பூமி அதை மீண்டும் விண்வெளிக்கே பிரதிபலிக்கிறது. பசுமைக்குடில் வாயுக்கள் அளவு குறைவாக இருக்கும் போது பூமியால் பிரதிபலிக்கப்பட்ட வெப்பத்தின் பெரும்பான்மையான பகுதி வளிமண்டலத்தை துளைத்து விண்வெளிக்கு சென்றுவிடுகிறது. குறைந்த அளவே வெப்பம் பசுமைக்குடில் வாயுக்களால் மீண்டும் பூமிக்கு திரும்புகின்றன. ஆனால் பசுமைக்குடில் வாயுக்களின் அடர்த்தி அதிகரிக்க, அதிகரிக்க பூமியால் பிரதிபலிக்கப்பட்ட வெப்பத்தை பசுமைக்குடில் வாயுக்கள் அதிக அளவு மீண்டும் பூமிக்கே திருப்பி அனுப்புகின்றன. இதன் காரணமாகவே புவியின் வெப்பம் அதிகரித்து வருகிறது.

சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 3.2 கோடி ஏக்கர் காடுகள் அழிக்கப்படுகின்றன. ஏற்கனவே பூமியில் இருந்த 80% காடுகள் அழிக்கப்பட்டுவிட்டன. காடுகள் பெருமளவு உலகெங்கும் அழிக்கப்பட்டதால் வளிமண்டலத்தில் கார்பன் டை ஆக்சைடின் அடர்த்தி கூடியுள்ளது. வளிமண்டலத்தில் கார்பன் டையாக்சைடு அதிகரிக்க, அதிகரிக்க கடல் நீர் கார்பன் டையாக்சைடை ஈர்த்து மிகுந்த அமிலத்தன்மை மிக்கதாக மாறிவிடுகிறது. இதனால் கடல் வாழ் உயிரினங்கள் வாழ தகுதியற்றதாக கடல் மாறிவிடும் அபாயம் உள்ளது. உலகெங்கும் குவியும் குப்பைகளிலிருந்து மீத்தேன் வாயு வெளியேறுகிறது. இது புவி வெப்பமாதலில் மூன்றில் ஒரு பங்கை வகிக்கிறது. 1950ஆம் ஆண்டு முதல் நாம் தயாரித்த 920 கோடி டன் பிளாஸ்டிக் பொருட்களில் 700 கோடி டன் பிளாஸ்டிக் பொருட்கள் நிலங்களிலும் கடல்களிலும் குப்பைகளாக கிடைக்கின்றன.

**கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றுவதில் முதலிடத்தில் சீனாவும், இரண்டாவது இடத்தில் அமெரிக்காவும், மூன்றாவது இடத்தில் ஐரோப்பிய யூனியனும், நான்காவது இடத்தில் இந்தியாவும் உள்ளது. இதையே மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால் அமெரிக்கா சராசரியாக 15.5 டன், சீனா 8.1 டன், ஐரோப்பிய யூனியன் 6.5டன், இந்தியா 1.9டன் வெளியேற்றுகிறது. இந்தப் பட்டியலில் முதல் மூன்று நாடுகள் 46% கார்பன் டை ஆக்சைடை வெளியேற்றுகின்றன, கடைசி நூறு நாடுகள் 3% அளவிற்கு கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றுகின்றன. சுற்றுச்சூழலை பொருத்தவரை உலகில் எந்த ஒரு நாட்டில் ஏற்படும் சுற்றுச்சூழல் கேடும் வேறு எங்கோ மூலையில் உள்ள ஒரு நாட்டை பாதிக்கும். இதில் பாதிக்கப்படுவது பெரும்பாலும் ஏழை வளரும் நாடுகளாகத் தான் இருக்கும். சமீப காலங்களில் ஏற்பட்ட இயற்கை பேரிடர்களால் அதிகம் பாதித்த நாடுகளாக பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், இலங்கை உள்ளது.**

‘பாரிஸ் ஒப்பந்தம்‘ என்று அழைக்கப்படும் உடன்படிக்கை சுற்றுச்சூழலுக்கான ஐநா அமைப்பின் 21வது மாநாடு (COP21) 2015ல் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிசில் நடந்த போது உண்டாக்கப்பட்டது. அதில் மூன்று முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன

1.உலக நாடுகள் அனைத்தும் பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றும் அளவை குறைக்க வேண்டும். ஒவ்வொரு ஐந்தாண்டுக்கும் எவ்வளவு குறைக்கிறோம் என்பதை அறிக்கையாக தர வேண்டும்.

2.புவி வெப்பமாதலை 1.5 டிகிரி செல்சியஸ்க்குள் கட்டுப்படுத்த வேண்டும்.

3.வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்த அந்த நாடுகளுக்கு நிதி உதவி செய்ய வேண்டும். இதில் உலக நாடுகள் அனைத்தும் கையெழுத்திட்டுள்ளன.

2018ல் போலந்தில் நடந்த சுற்றுச்சூழலுக்கான 24வது மாநாட்டில் (COP24) ஒரு செயல்திட்டம் வடிவமைக்கப்பட்டது. அதனடிப்படையில் வளர்ந்த நாடுகள் வருடத்திற்கு 100 பில்லியன் டாலர் வளரும் நாடுகளுக்கு நிதி உதவி செய்ய வேண்டும். இந்த உறுதிமொழியை வளர்ந்த நாடுகள் நிறைவேற்றவே இல்லை. மேலும் குறைந்த அளவு கொடுத்த நிதியிலும் 25% நிதியை மட்டுமே வளரும் நாடுகளுக்கு வழங்கிவிட்டு, மீதி 75% நிதியை தொழில்நுட்பமாக வழங்குகின்றோம் என்ற பெயரில் ஏமாற்றுகின்றன.

இந்தச் சூழலில்தான் சுற்றுச்சூழலுக்கான 26வது மாநாடு (COP26) லண்டனில் உள்ள கிளாஸ்கோ நகரில் நடைபெற்றது. அதில் முக்கியமாக நிலக்கரி பயன்பாட்டை நிறுத்துவதற்கான ஒரு ஒப்பந்தம் உண்டாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஒப்பந்தம் இறுதியாகும் தருவாயில் இந்தியா தலையிட்டு ஒப்பந்தத்தை நீர்த்துப்போகச் செய்தது. இந்தியா நிலக்கரி பயன்பாட்டை முழுவதுமாக நிறுத்தாமல் படிப்படியாக குறைப்பதாக அந்த ஒப்பந்தத்தை திருத்தியது. இதையொட்டி ஐநா சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியா கட்டர்ஸ் ‘நாமே நமது சவக்குழியை தோண்டுகிறோம்‘ என விமர்சித்தார். சுற்றுச்சூழல் ஆர்வலர், ஸ்வீடன் நாட்டின் மாணவி கிரீட்டா தன்பெர்க் வளர்ந்த நாடுகள் மோசடியான வேஷம் போடுகின்றன என விமர்சித்தார்.

இதன் பின்னணியில் மத்திய அரசு அதானி குழுமத்திற்கு ஆஸ்திரேலிய நிலக்கரி சுரங்கங்களை ஏலம் எடுப்பதற்கு அரசு வங்கிகளில் இருந்து, மக்களின் சேமிப்பு பணத்தை கோடிக்கணக்கில் கடனாக கொடுத்ததும், நிலக்கரி இறக்குமதிக்கான வரியை ரத்து செய்ததையும் இணைத்துப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

இந்தப் பிரச்சினையை நமது நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் அவர்கள் நாடாளுமன்றத்தில் மிகத் தெளிவாக எடுத்துரைத்தார். கிளாஸ்கோ நகர வீதிகளில் இளம் கம்யூனிஸ்டுகள் பத்தாயிரம் பேர் நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக, உலகம் முழுவதும் உள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் எதிர்பார்ப்புக்கு எதிராக இந்தியா செயல்பட்டது, நிலக்கரி, எண்ணெய், கார்ப்பரேட் முதலாளிகளுக்கு ஆதரவாக, அம்பானி, அதானிகளுக்கு ஆதரவாக, அமெரிக்க யோசனைப்படி நடந்தது. சுற்றுச்சூழலுக்கான நிதியை 170 வளரும் நாடுகளுக்கு ஒப்பந்தப்படி வழங்காமல் ஏமாற்றி வரும் வளர்ந்த நாடுகளிடம் முறையீட்டு நிதியை இந்தியா வாங்கிக் கொடுத்து இருக்க வேண்டும், அதை செய்யத் தவறி உள்ளது என குற்றஞ்சாட்டி பேசினார்.

‘நிகர கார்பன் வெளியேற்றம் பூஜ்ஜியம்’ என்ற நிலையை ஸ்வீடன் 2045லும், அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் 2050லும், சீனா 2060லும், இந்தியா 2070லும் அடைவோம் என வாக்குறுதி கொடுத்துள்ளன. கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற ஒன்றிய அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நீர் மின்சாரம், சூரிய சக்தி, காற்றலை, பூமியின் உட்புறம் உள்ள வெப்ப சக்தி, கடல் மூலம், கரிம (Organic) கழிவு குப்பைகளிலிருந்து பெறும் மின்சாரம் நம்மைச் சுற்றிலும் அதிகமாக இருக்கிறது. உலகின் 90 சதவீத மின்சார தேவையை இந்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிறைவு செய்யும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் மூலமாக வேலை வாய்ப்புகள் அதிகமாகும், செலவு குறையும், புவி வளமாகும்.

வளர்ந்த நாடுகள் தங்களது மின்சாரத் தேவைகள் அனைத்தையும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலமாக பெற வேண்டும். போக்குவரத்து முழுமையாக மின்சாரமயமாக்கப் படவேண்டும். காடுகள் மீள் உருவாக்கம் நடைபெற வேண்டும். நிலக்கரி, பெட்ரோல், டீசலுக்கான மானியத்தை குறைத்து, புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான மானியம் அதிகரிக்கப்பட வேண்டும். ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் (Single Use Plastic) பொருட்களின் உற்பத்தி நிறுத்தப்பட வேண்டும்.

மேலும் பெரும்பான்மையாக உள்ள வளரும் நாடுகளுக்கு, அவர்களின் படிம எரிபொருள் பயன்பாட்டை குறைத்து புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு மாறும் வகையில் அதிக நிதி உதவி செய்ய வேண்டும். இந்த நடவடிக்கைகளை வளர்ந்த நாடுகள் செய்யாவிட்டால், பருவநிலை மாற்றங்களினால் ஏற்படும் பேரிடர்களினால் உலகம் முழுவதும் அகதிகள் (Climate Refugee) எண்ணிக்கை அதிகரிக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. “ஒன்று பட்டால் உண்டு வாழ்வே, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே” என்பதற்கு இணங்க செயல்களை திட்டமிட்டு செய்ய வேண்டும். கோடான கோடி கிரகங்களில் உயிர் வாழும் தகுதியை உடைய இந்த பூமியை காப்பாற்ற வேண்டும்.

தொடர்புக்கு: 94432 44633

## வலை வீச்சு












JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 02.07.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## அக்னிபாத் திட்டத்தை எதிர்த்து
# ஐக்கிய விவசாயிகள் முன்னணி ஆர்ப்பாட்டம்




**அக்னிபாத் திட்டத்தை கண்டித்து சம்யுக்தா கிசான் மோர்ச்சா அகில இந்திய அறைகூவலை ஏற்று ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பில் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.**

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் பனகல் கட்டிடம் முன்பு ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பில் ஒருங்கிணைப்பாளர் வீர.மோகன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தை சமவெளி விவசாயிகள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சு.பழனிராஜன் தொடக்கி வைத்து உரையாற்றினார். ஐக்கிய விவசாயிகள் முன்னணி மாநில செயற்குழு உறுப்பினர் காளியப்பன், தமிழர் தேசிய முன்னணி பொதுச்செயலாளர் அய்யனாபுரம் சி.முருகேசன், தாளாண்மை உழவர் இயக்கத்தின் நிறுவனர் பொறியாளர் கோ.திருநாவுக்கரசு, இடதுசாரிகள் பொதுமேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன், சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் ஆர்.பி.முத்துக்குமரன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினர். முடிவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் சின்னை.பாண்டியன் ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்து சிறப்புரையாற்றினார். சிபிஐ மாநகரச் செயலாளர் ஆர்.பிரபாகர் நன்றி கூறினார்.

**மதுரை:** அக்னிபாத் திட்டத்தை ஒன்றிய அரசு திரும்பப் பெற வலியுறுத்தி, மதுரை புறநகர் திருமங்கலத்தில் (எஸ்.கே.எம்) ஐக்கிய விவசாயிகள் முன்னணி சங்கத்தின் மதுரை மாவட்ட ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மதுரை மாவட்டச் செயலாளர் ஜி.சந்தனம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் 70க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு அக்னிபாதை திட்டத்தை கைவிடுமாறும், ஒன்றிய அரசை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பினர்.

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரத்தில் விவசாயிகள் சங்க கூட்டமைப்பு சார்பில் பெரியார் தூண் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கே.நேரு, ஏ.மூர்த்தி, ஜே.கமலநாதன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**அம்பத்தூர்:** மத்திய சென்னை மாவட்டம், அம்பத்தூர் பேருந்து நிலையம் அருகில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இளைஞர் பெருமன்றம் அம்பத்தூர் பகுதிக்குழுவுடன் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ அம்பத்தூர் பகுதிக்குழு செயலாளர் இரா. விஜயகுமார் தலைமை தாங்கினார்.

பகுதிக்குழு முன்னாள் செயலாளர் மோ. ராமதாஸ் மத்திய பா.ஜ.க. அரசுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய சென்னை மாவட்டச் செயலர் ப.கருணாநிதி, இளைஞர் பெருமன்றம் அம்பத்தூர் பகுதி செயலாளர் இம்ரான் ஆகியோர் கண்டன உரையாற்றினர். ஏ.எஸ்.கண்ணன். எக்ஸ். எம்.எல்.ஏ., மத்திய சென்னை சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் பி.மாரியப்பன், துரைசாமி, ஜெகநாதன், சீ.ஏசு, ரவிச்சந்திரன், கோபி, பு.கி.மூர்த்தி, லோகநாதன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**மதுரை மாநகர்:** அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (ஏஐடியூசி) சார்பாக ஒன்றிய அரசு அறிவித்துள்ள அக்னிபாத் திட்டத்தை கைவிடக் கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எம்.நந்தாசிங், எஸ்.பழனிமுருகன் தலைமையேற்க, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன் மத்திய அரசை கண்டித்து உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் இளைஞர்பெருமன்ற தோழர்கள் பாலாஜி, அய்யனார், காசிசங்கர் ஏஐடியூசி மாநிலக்குழ உறுப்பினர், இந்திய கம்யூ.கட்சியின் வடக்கு பகுதி செயலாளர் மா.இருளாண்டி, போக்குவரத்து தொழிற்சங்க கட்சி செயலாளர் ஜெயந்தி, டி.ராமகிருஷ்ணன், பஞ்சாலை சங்கத்தின் விளாங்குடி கே.எஸ்.மணி, மேற்கு பகுதி செயலாளர் ஜனசக்தி என்.ஜீவா, மற்றும் ஏஐடியூசி, இளைஞர் பெருமன்ற தோழர்களுடன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

**தூத்துக்குடி:** தூத்துக்குடியில் தமிழ்நாடு ஐக்கிய விவசாய சங்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணமூர்த்தி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் புவிராஜ், ஆகியோர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**கடலாடி:** கடலாடியில் விவசாய சங்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. விவசாய சங்கத்தின் தலைவர் கே. ஜீவா, செயலாளர் ஆர்.கருணாநிதி உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்று கண்டன உரையாற்றினர்.


இளைஞர்கள் எதையும் இழக்கலாம். ஆனால், எதிர்காலத்தை மட்டும் இழந்து விடக்கூடாது.
இளைஞர் படையே! எழுச்சியே திரண்டு வா!
ஆகஸ்ட் 6, 7, 8, 9 இல்
திருப்பூரில்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு அழைக்கிறது




Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.